# காதலாகிக் கசிந்துருகி...

இந்திரா செளந்தர்ராஜன்

கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை-600 017

முதற் பதிப்பு : அக்டோபர் 1993

உள்ளே. .


| | பக்கம் |
|---|---|
| காதலாகிக் கசிந்துருகி... | 1 |
| காதலெனும் வானவில் | 83 |


விலை ; ரூ. 22-00

16958
3293199

3293199

நேரு அச்சகம், 43, அம்மையப்பன் தெரு, சென்னை—600 014

X

## பதிப்புரை

**சி**றந்த எழுத்தாளர் திரு. இந்திரா சௌந்தர் ராஜனின் இளமை ததும்பும் இரு குறுநாவல்கள் அடங்கியது இத்தொகுதி. இரண்டு குறுநாவல் களும் காதல் கதைகளே.

நாவலுக்கு நாவல் வித்தியாசமாக புதிய யுக்தியோடு எழுதி வரும் இவரின் கதைகளை வாசகர்கள் ஒரு ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள் என்பதை நம்மால் உணர முடிகிறது.

காதல், இளைஞர்களை எப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கிறது என்பதை முதல் கதையான 'காதலாகிக் கசிந்துருகி...' கதையின் ஒவ்வொரு அத்தியாயத்தின் ஆரம்பத்திலேயே இரத்தினச் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறார். உதாரணத்திற்கு

'காதல் என்பது இளமைக்குப் பிடிக்கும் பைத்தியம்.'

'காதல் என்பது ஒரு சுயநல மோசடி!''

'காதல் என்பது இளைஞர்களின் இதய நோய்!'

'காதல் என்பது இன்பம் போன்ற துன்பம்!'

என்று தமிழ் மூதாட்டியின் ஆத்திச்சூடிபோல் விளக்கும் இவர், முடிவில் 'ஆத்மார்த்தமான காதலுக்கு என்றும் அழிவில்லை' என்பதை அறுதியிட்டுக் கூறுகிறார்.

காதலை, கல்லூரி மாணவர்கள் எப்படியெல்லாம் கையாளுகிறார்கள்; விமர்சிக்கிறார்கள்; விளையாடுகிறார்கள்; விபரீதமாகப் போகிறார்கள் என்பதைக் 'காதலெனும் வானவில்' கதையில் கலகலப்பாகச் சொல்கிறார்.

**கங்கை புத்தக நிலையத்தார்**

# காதலாகிக் கசிந்துருகி..

## 1

### காதல் என்பது இளமைக்குப் பிடிக்கும் பைத்தியம்

வீதி பரபரப்பாகத் தென்பட்டது.

காலை ஒன்பது மணிப் பொழுதின் போக்குவரத்து அழுத்தத்தில் வீதிக்கு என்று ஒரு சுவாசப்பை இருந்திருந்தால் நிச்சயம் அதில் மூச்சுத்திணறல் ஏற்படும் நிலை.

பள்ளிக்கூடம் போகும் நண்டுசிண்டுகள் ஒருபுறம். ஆபீசுக்குக் கிளம்பும் மிடுக்கான மனிதர்கள் மறுபுறம். ஊடே காதைத் திருகும் கைவிரல்போல அந்தக் கூட்டத்தைக் குடையும் சைக்கிள் ரிக்ஷாக்கள், புகையைக் கக்கும் ஸ்கூட்டர்கள், ஏகாந்தமாய் படுத்துக் கிடக்கும் கோயில் மாடுகள்...

ஊர்ந்து ஊர்ந்து இவர்கள் நகரும் எக்குத்தப்பான இந்த வேளையிலும்கூட ஒருவனுக்கு சந்தோஷம் இருக்கிறது என்றால் அது சந்தேகத்துக்கு இடமில்லாமல் சண்முகத்துக்குத்தான்! எப்பொழுது விடியும், ஒன்பது மணி வரும் என்று காத்திருந்து டிப்டாப்பாக டிரஸ் செய்து கொண்டு வீட்டு வாசலில் ஷோக்காக நின்று விடுவதில் அவனுக்கு அலாதி சந்தோஷம்.

ஊரின் மத்தியில் இப்படி ஒரு பரபரப்பான சூழலில் உள்ள வீதியில் தனக்கு வீடு அமைந்ததில் அவன் வீட்டில் எல்லோருக்கும் இமாலய வருத்தம் என்றால் இவனுக்கு மட்டும் சந்தோஷம்.

அந்த சந்தோஷத்தை சற்று விரித்துப் பார்த்தால் அது 'சாதனா' என்ற பெயரைக் காட்டும். யார் அந்த சாதனா?

கடலூர் பக்கம் குக்கிராமம். பள்ளிப்படிப்பில் பள்ளியிலேயே முதலிடம். அப்புறம் கல்லூரிக்காக நகரத்துப் பக்கம் வந்ததில் கல்லூரி வாழ்க்கை முடிந்து ஒரு வேலையும் உடனடியாகக் கிடைத்துவிட்டது! அவ்வளவுக்கும் காரணமான தோழி ஜீவாவுடன் அவள் வீட்டிலேயே தங்கி இருந்துகொண்டு தினம் வேலைக்கு டிபன்பாக்ஸ் சகிதம் சரியாக ஒன்பது மணிக்கு கிளம்பும் தேவதை. கூட ஜீவாவும் வருவாள். ஆனால் சாதனா மட்டுமே ஒரு தனி மின்னலாய் சண்முகம் கண்ணுக்குத் தெரிவாள்.

உலகில் எத்தனையோ கோடி பெண்கள். ஆனால் எந்த ஒரு ஆணுக்கும் ஏதாவது ஒரு பெண்ணின் உருவம் தான் அவர்கள் மனச்சட்டத்தில் நச்சென்று பொருந்தும்.

நூற்றுக்கு தொண்ணூறு பேர்கள் அப்படிப் பொருந்தக்கூடிய பெண்களைச் சந்திக்காமலேயே செத்துவிடுகிறார்கள். மீதமுள்ள பத்து சதம்பேர் தங்களுடைய எந்த வயதில் அப்படிப்பட்ட பெண்ணைப் பார்த்தாலும் சரி காதலிக்க ஆயத்தமாகிவிடுகிறார்கள்.

அனேக சின்ன வீடு சிக்கல்களுக்கு இந்த மன ஈர்ப்பு தான் காரணம். சண்முகத்தைப் பொறுத்தமட்டில் சாதனா அவன் மனதில் அமர்ந்து மாதம் ஆறு ஆகிறது ஏறத்தாழ நூற்றி எண்பது நாட்கள்.



இந்த நூற்றி எண்பது நாட்களும் கண்ணால் பார்த்து கருத்தால் ரசித்து கனவில் மயங்கி சண்முகத்துக்கே ஒரு அலுப்புத் தட்டிவிட்டது. அடுத்த கட்டத்துக்குச் செல்ல வேண்டிய தவிப்பு அவனுக்குள்...

காதல் என்றால் எவ்வளவோ கட்டங்கள்.

முதலில் பார்வையில் ஆரம்பித்தாலும் அது கடிதத்தில் தான் தன் அடுத்த கட்டத்திற்குச் செல்கிறது. பிதற்றல், உளறல் என்று அங்கே கொஞ்சநாள். அப்புறமாய் திருட்டு சந்திப்பு! இந்த சந்திப்புதான் இதயத்தை பக்பக் ஆக்கி, ரத்தத்தை ஆல்கஹாலாக்கி மனுஷனை போதையில் மிதக்க வைக்கும் விஷயம்...

அப்புறமாய் கொஞ்சம் தைரியமாய் ஊர் சுற்றுதல், சினிமா பார்த்தல்...இங்கேதான் கள்ளத்தனமாய் முத்தமிடுதல். கட்டிப்பிடித்தல் எல்லாம்.

வாலிபனை அக்மார்க் கிறுக்கனாக ஆக்குவதில் இந்த கட்டங்கள் ஒவ்வொன்றுக்குமே சமஅளவு பங்கு உண்டு.

இந்த கட்டங்களில் திளைக்கவேண்டும் என்பதில்தான் வாலிபத்துக்கு எத்தனை ஆசை? சண்முகத்துக்கும் ஆசை...

'விடவே கூடாது... இன்று சாதனாவிடம் பேசிவிட வேண்டும்... 'ஐ லவ் யூ' சொல்லிவிட வேண்டும். நீ என்ன சொல்கிறாய் என்று கேட்டுவிட வேண்டும். நீ என்னைக் காதலித்தே தீரவேண்டும் என்று ஆணையிட வேண்டும். முடியாது என்றால் விடக்கூடாது!

மேற்படியான எண்ணக் கூட்டங்களோடு, தீர்மானங்களோடு கைவசம் ஒரு கடிதம் சகிதம் வாசலுக்கு வந்து சண்முகம் நிற்கத் தொடங்கி பதினைந்து நிமிடம் ஓடி விட்டது.

ஆனால் அந்த ஒன்பது மணி தென்றலைத்தான் காண வில்லை. 'என்ன ஆயிற்று உனக்கு என் இனிய தேவதையே...''

அரக்குப் புடவையில் பார்ப்பவர்களை எல்லாம் கிறுக்கனாய் ஆக்கிவிடும் அசத்தலான அழகில் சாதனா முன் கொசுவத்தைச் சரி செய்துகொண்டிருந்தாள். அவளுக்குப் போட்டியாக ஜீவா.

உற்றுப் பார்த்தால் ஜீவாதான் சாதனாவைவிட அழகு. அவளின் இரண்டு மார்புக்கு மட்டுமே இந்தியாவை எழுதி வைக்கலாம். இறுக்கமான பிளவுசில் அதை அவள் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் சாமர்த்தியத்துக்கு எந்தப் பரிசையும் தரலாம்.

அவளைச் சுற்றவும் ஆட்கள் உண்டு.

சண்முகம்கூட சமயத்தில் பக்கவாட்டில் அந்த குன்றுகளைப் பார்த்துக் குலைந்துபோவான். ஆனாலும் சாதனாவின் முகவசீகரம்தான் அவனுக்கு கிறக்கம் தரும் விஷயம்.

அந்த வசீகரத்துக்கு துளியும் குறைவின்றி சாதனா கிளம்பிவிட்டாள். 'டாம்ப்கால்' மணக்கும் கூந்தல்—ஐப்ரோ பரவிய புருவம், இரண்டு மில்லி மீட்டர் டயாவில் சின்ன ஸ்டிக்கர் பொட்டு... ரசனையே இல்லாத ஆம்பளை கூட பிரம்மசிருஷ்டி குறித்து யோசித்தே தீரவேண்டும் என்னும்படியான உடல்வாகுடன் கிளம்பிவிட்டாள்.

"ரெடியா ஜீவா?"

"நான் எப்பவோ ரெடி. நீதான் இன்னைக்கு லேட்."

"சாரிடி... எந்தப் புடவை கட்டுனாலும் திருப்தியா இல்லை. கடைசியில இந்த அரக்கு கலர்தான் ஏதோ பரவால்ல..."

"நீ காடா துணியை கட்டினாலும் அழகா இருக்கும். உனக்கு அப்படி ஒரு உடம்பு வாகு..."

"உனக்கு மட்டும் என்னடி. உன் கலர் யாருக்கு வரும்?"



"ஆமாம்மா... எனக்காகத்தான் ஒரு ரோமியோ தினம் காத்தால கால் வலிக்க காத்துக்கிட்டிருக் கானாக்கும்?"

"கவலைப்படாத ஜீவா... உனக்கும் ஒருத்தன் மாட் டாமலா போயிடுவான்."

"ஏய் சும்மா சொன்னேன். சரி, நடந்துகிட்டே பேச வோமா?"

இருவரும் ஆயத்தங்களுடன் வாசலுக்கு வந்தார்கள். உள்ளே இருந்தாள் ஜீவாவின் தாய் மனோன்மணி.

"அம்மா நாங்க ஆபீசுக்குக் கிளம்பிட்டோம்."—ஜீவாவின் குரல் வாசல்புறத்திலிருந்து உள்ளே பாய்ந்தது.

"பாத்து...ஜாக்கிரதையா போய்ட்டு வாங்க."—உள்ளேயிருந்து பதில் வந்தது. வெரண்டாவில் ஜீவாவின் தம்பி மணி பத்தாம் வகுப்பு விஞ்ஞானத்தில் மூழ்கிருந் தான்.

"டேய் வாசல்பக்கம் பார்த்துக்கடா..." என்று அவனுக்கொரு கட்டளையைப் பிறப்பித்துவிட்டு இரு வரும் வாசலுக்கு வந்தார்கள்.

வீதிக்கு நிலவு வந்துவிட்டது. அவளை தூர இருந்தே பார்த்துவிட்டு மனதுக்குள் துள்ளி எழுந்தான் சண்முகம்.

"டீ... உன் ஆளு இன்னைக்கும் தரிசனத்துக்குக் காத் திருக்கான்."—ஜீவா, சாதனாவின் காதைக் கடித்தாள்.

"ஸ்ஸ்...சும்மா இருடி. இன்னைக்கு நாம அந்தப் பக்கமா போக வேண்டாம். இப்படியே போவோம்."

"ஏண்டி?"

"காரணமாகத்தான்!"

"என்ன காரணமா?"

"எனக்கு அவனைப் பார்க்க சங்கடமா இருக்குடி. பாவமா இருக்கு..."

''பாவமா இருக்கா?''

''ஆமா...''

''நீ எதுக்கு அந்த ஆளுக்காக பாவப்படறே?''

''ஜீவா...ப்ளீஸ் தெரிஞ்சும் தெரியாம பேசாதே. ஐ ஆல்சோ லவ் ஹிம்!''

''அப்படி வா வழிக்கு. அப்ப பேசிட வேண்டியது தானே?''

''ஆம்பளை அவரே பேசாம நானா எப்படி?''

''அப்ப நா வேணும்னா தூது போய் என்ன மிஸ்டர் எதுக்கு இப்படி நின்னு வெறிக்கிறீங்கன்னு குத்தி விடவா?''

''வேண்டாம் வேண்டாம்... அவரா வரும்போது பார்த்துக்கலாம்...''

படபடப்பாகப் பேசியபடி இருவரும் எதிர் சாலையில் இறங்கி நடக்கத் தொடங்கினார்கள்.

சண்முகம் அதைப் பார்த்து சற்று சுணங்கிப் போனான்.

'என்ன இது வழக்கத்துக்கு மாறாக...' முகத்தில் உணர்வுகளைப் போட்டுக் கொளுத்தினான்.

''ஆமா... உன் ஹீரோவை கல்யாணம் பண்ணிக்க உன் விட்டுல சம்மதிப்பாங்களா?'' ஜீவா முக்கியமான அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

''பெரிய சம்மதம்... எனக்குன்னு யார் இருக்கா ஜீவா, என் வயசான அம்மாவைத் தவிர! அவங்க எனக்கு மாப்பிள்ளை பார்த்து நானும் சம்மதிக்கறதுக்குள்ள நான் முழு கிழவியாவே ஆயிடுவேன்...''

''அப்படின்னா உன் சைட்ல ரெட் சிக்னலே கிடையாதுங்கறே?''



''யெஸ்...நல்ல ஆம்பளையை என் புருஷனா நானா தேர்ந்தெடுத்துக்கிட்டா தான்... என் சொந்தங்களை இந்த மட்டுல நான் நம்ப தயாரில்லை. அவங்களுக்கு என் சம்பளம்தான் பெரிசு. நானோ என் மனசோ இல்ல...''

''கவலைப்படாதே சாதனா. உன் காதலுக்கு நானாச்சு. உன் ரோமியோவைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும். அவர் ஒரு எம். ஏ. சொந்தமா தொழில் செய்து ஆயிரமாயிரமாய் சம்பாதிக்கறதா கேள்வி. பேர் சண்முகம்! ரொம்ப பிராக்டிகலான ஆளுன்னும் கேள்விப் பட்டேன்.

அவரோட அப்பா ஒரு தாசில்தார். சம்பளத்தைவிட கிம்பளம் நிறைய வாங்குகிற நபர். எல்லா வகையிலேயும் நீ கொடுத்து வெச்சவதான்டி, உம்...சொல்ல மறந்துட்டேனே. உனக்கு ஒரு நாத்தனார் கூட இருக்காடி.''

''டீ...என்னடி இது, இப்பவே கல்யாணம் ஆயிட்ட மாதிரி நாத்தனார் அது இதுன்னு. அவருக்கு ஒரு சிஸ்டர் இருக்கார்னு சொன்னா போதாதா?''

''என் வரையில் ஆனமாதிரிதான்டி...ஆறுமாசமா அந்தாளு வழியற வழிசலைத்தான் பார்க்கறேனே...''

—ஜீவா அப்படிச் சொன்ன மறுநிமிஷமே சண்முகம் தனது டி. வி. எஸ். சுசுகியில் அவர்களைத் தாண்டிச் சென்றான்.

லாவகமான சவாரி.

நெரிசலான வீதியில் பீடாக்கடை ஒன்றின் வாசலில் சுசுகியை அமைதிப் படுத்திவிட்டு நடந்து வரும் இவர்களுக்காகக் காத்திருக்க ஆரம்பித்தான்.

''ஏய் உன் ரோமியோ ஒரு முடிவோட வந்திருக்கற மாதிரிதான் தெரியுது. அதோ பார் கடை வாசல்ல...''

—ஜீவா சண்முகத்தை ஜாடையாக சுட்டிக்காட்ட சாதனாவின் பார்வை மெல்ல அவனை எடைபோட்டது.

உடம்பில் கரப்பை ஊர்வது போல் ஒரு குறுகுறுப்பு. திடீரென்று இதயப் பகுதியில் அதிகப்படியான ரத்தப் பாய்ச்சல்.

காதோரமாக சின்னதாக வியர்வைப் பாம்பு.

அவனும் அவள் பார்வையை ஸ்வீகரித்து ஐஸ்கிரீமில் விழுந்த மாதிரி ஆகியிருந்தான். பாக்கெட்டில் மடிந்திருந்தது கடிதம். எடுத்து விரித்து ஒரு பார்வை பார்த்தான்.

"என்னுயிரே... நான் உன்னை விரும்புகிறேன், உன்னைத் தவிர்த்து வாழ என்னால் இயலவே இயலாது. மூச்சு நின்று பேச்சு அற்றுப்போகும். உன் எண்ணம் என்ன? எனக்கு எதிரான பதிலைச் சொல்லாதே...அதை என் இதயம் தாங்காது. நமது மௌன பரிமாற்றத்துக்கு ஒரு முடிவு கட்டுவோம். காதலின் அடுத்தடுத்த கட்டங்கள் நமக்காகக் காத்திருக்கின்றது."

திரும்ப கடிதத்தை மடக்கினான். இதற்குள் அவர்கள் அவனை மிக சமீபித்துவிட்டார்கள்.

"டீ...ஏதோ லட்டர் தரப்போற மாதிரி தெரியுதுடி."

"எனக்கு பயமா இருக்கு. நீயே வாங்கித்தாடி."

'காதலிக்கப் போறது உன்னை. கடிதம் வாங்கப் போறது நானா?"

"ப்ளீஸ் எனக்கு என்னவோ மாதிரி இருக்குடி."

"எக்ஸாக்ட்லி... அதுக்குப் பேர் தான் காதல்.

"ஜீவா ப்ளீஸ்..." சாதனா அவளை ஒரு பார்வையும் வீதியை மறுபார்வையுமாகப் பார்த்து உதடு மடிய கெஞ்சிய கெஞ்சலைத் தொடர்ந்து ஜீவா சண்முகத்தை தீர்க்கமாக நிமிர்ந்து பார்த்தாள்.

அவள் நெருங்கி வந்தாள்.



"ஹலோ... சொன்னான். கைவசத்து கடிதத்தோடு சூழ்நிலையைப் பற்றிக் கவலைப்படாமல் துளி தளித்தான். சாதனா அவனை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை.

"என்ன சார் என் ஸ்னேகிதிக்கு லெட்டர் தர இப்ப வாச்சும் மனசு வந்ததே..."—ஜீவா அவனுக்கு எடுத்துக் கொடுத்தாள். அவனுக்கு அப்பாடா என்று இருந்தது. உடனேயே அவள் கரத்தில் கடிதத்தைத் தந்துவிட்டு சாதனாவுக்குக் கொடுக்க ஜாடை காட்டினான்.

"கவலையே படாதீங்க. எல்லாம் நல்லபடி தான் நடக்கும்."—ஜீவாவின் பதிலில் அவன் சாதனாவுடன் காஷ்மீரில் டூயட்டே பாட ஆரம்பித்துவிட்டான்—கற்பனையில்தான்!

இதற்குள் சாதனா வெகுதூரம் நடந்துவிட்டிருந்தாள். பஸ் ஸ்டாப்பை நெருங்கிவிட்டிருந்தாள். ஜீவா அவளைத் துரத்திப் பிடித்தாள்.

"ஏய் நில்லுடி. நில்லுடி..." நெருங்கிப் பிடித்து கடிதத்தை எதிரே நீட்டினாள்.

"ஆல் தி பெஸ்ட். உன் காதலுக்கான பிள்ளையார் சுழி விழுந்தாச்சு. இனி என்னம்மா...பார்க், பீச், டூயட் தான். வாழ்க வளர்க உங்க காதல்" என்றாள் கேலியாக.

சுற்றிலும் சிலர் பஸ்சுக்கு நின்றுகொண்டிருக்க சாதனாவுக்குக் கூசியது. அந்தக் கடிதத்தை தயக்கத்தோடு வாங்கி பிரித்துப் படித்தாள். 'என்னுயிரே' என்கிற அந்த துவக்கமே அவளுக்குள் தேன் மழையைக் கொட்டியது. சொச்சமும் மத்தாப்பு கொளுத்திப் போட்டது.

மனது பரவசத்தில் மிதக்கத் தொடங்கியது.

ஜீவாவும் எட்டிப் பார்த்தாள். நைச்சியமாக சாதனாவைப் பார்த்து சிரித்தாள். வீதிக்கு இதை எல்லாம் கவனிக்கும் அவகாசமில்லை.

அப்படியும் சிலர் ஆங்காங்கே பார்த்து பெருமூச்சு விடாமல் இல்லை.

தொலைவில் பஸ்கூட தலையைக் காட்டியது.

கூட்டத்தைக் குடைந்தபடி மெல்ல முன்னேறி வந்து கொண்டிருந்தது.

ஊடே திடும்மென்று ஒரு சலசலப்பு.

அலறிப்புடைத்தபடி சிலரின் ஓட்டம்—இத்தனைக்கும் காரணமாய் ஒரு கார் தலைதெறிக்க வந்துகொண் டிருந்தது. தாறுமாறான ஓட்டம்!

பந்தயத்தில் ஓடவேண்டிய கார் தவறிப்போய் போக்குவரத்து நிரம்பிய பகுதிக்கு வந்துவிட்ட மாதிரி தோன்றியது. பிளாட்பாரத்தில் நிற்கும் சாதனாவும், ஜீவாவும் அதைப் பார்த்து பயந்து ஒதுங்கும் முன் சாதனா வின் மேல் ஏறிவிட்டு அவளை ரத்தச்சதையாக்கி பிளாட் பாரத்திலும் தூக்கிப் போட்டுவிட்டு ஓடியே போனது! அந்தச் சூழ்நிலையிலும் அந்த டிரைவிங் சீட் ஆசாமி முகம் ஜீவா மனதில் ஆழமாய் பதிய, நடந்ததைப் பார்த்து அதிர்ச்சியில் அப்படியே மயங்கி விழ ஆரம்பித்தாள். பீடாக் கடை வாசலில் சுசுகியை கிளப்பப்போன சண்முகம் ஸ்தம்பித்திருந்தான்.

## 2

### காதல் என்பது வாலிபத்தை வசப்படுத்த வரும் முரட்டு உணர்வு!

**போலீஸ்** வந்திருந்தது. கூட்டத்தை விலக்கி வேக மான அந்தக் கார் நாசப்படுத்திய இடங்களைத் துல்லிய மாகக் கணக்கிட்டது.



''அவன் கொள்ளைலபோக...அவனுக்கு ஏரோப்ளேன் ஓட்ற நினைப்பு. பாவம் அந்த வயசுப் பொண்ணு.'' கூட்டத்தில் ஒரு குரலின் சலிப்பு சப்இன்ஸ்பெக்டர் வாசு வின் காதில் விழுந்தது.

''நல்லவேளை அந்தப் பொண்ணு சாகலை.''

''என்ன கேட்டா அது செத்திருக்கலாம்! அப்படி கால் போய் நொண்டியா சேரழியறதுக்கு அது எவ்வளவோ மேல் இல்லையா?''

கூட்டத்தின் பேச்சில் இன்ஸ்பெக்டர் வாசு சுணங்கின மாதிரி தெரிந்தார். வெள்ளைச் சட்டைத் யூனிஃபார்மில் டிராஃபிக் இன்ஸ்பெக்டர் ஒருவரின் மோட்டார் பைக் அவர் கவனத்தைக் கலைத்தது.

''என்ன மிஸ்டர் உதயகுமார்...காரை அப்படி ஓட்டிக் கிட்டு வந்தது யார்னு தெரிஞ்சுபோச்சா?'' வாசுவின் கேள்விமுன் அந்த டிராஃபிக் இன்ஸ்பெக்டர் முகம் சுளித்தார்.

''கார் நம்பர் மட்டும் தெரிஞ்சிருக்கு. இனிதான் டிரேஸ் பண்ணணும்.''

''ஆளைப் பிடிச்சா மூட்டைப் பேத்துடணும். ஒரு சின்னப் பொண்ணோட லைஃபையே நாசமாக்கியிருக் கான் சார். பாருங்க எவ்வளவு நஷ்டம். கோவில் மாடு ஒன்று துடிச்சு செத்தே போச்சு. பல பிளாட்பாரக் கடை கள் சர்வ நாசமாயிருக்கு. எல்லாரும் அழாக்குறையா கம்ப்ளைண்ட் பண்ணியிருக்காங்க...'' ''வாசுவின் பேச்சில் கணிசமான கோபம். சூழ்ந்திருந்தவர்கள் அந்தக் கோபத் துக்காக சந்தோஷப்பட்டார்கள்.

''ஆமா, கால்ல அடிபட்ட அந்த பொண்ணு இப்ப எங்க?''

''ஜி. எச்.—ல!''

வதவத என்ற வியாதியஸ்தர்கள் கூட்டம். குப்பென்ற மருந்து நெடி. இழைந்து வரும் டெட்டால் வாசம். ஊடே ஊடே எண்ணெய் கண்டிராத ஸ்ட்ரெச்சர்களின் எலித்தனமான சத்தத்துடன் கூடிய பிரவேசங்கள்.

அந்தக் கூட்டத்தில் என் மகள் எங்கே என்று பரிதவிக்க தேடிக் கொண்டிருந்தாள் பார்வதி. சாதனாவின் அம்மா!

''ஆக்சிடெண்ட் கேஸ் எல்லாம் எமர்ஜென்சி வார்டு பக்கம்'' என்று ஒருவர் கை காட்ட பார்வதியின் கால்கள் அந்தப் பக்கமாக ஓடியது.

''கடவுளே என் செல்லத்துக்கு எதுவுமே ஆயிடக் கூடாது.''— உதட்டில் முணுமுணுப்பு.

நேர்வலமாய் நடந்து இடது பக்கம் திரும்பி எதிர்ப்பட்ட மாடிப்படிகளில் ஏறி அது முடிந்த காரிடாரில் பதட்டத்துடன் ஓடி பார்வதி சுவரில் முட்டிக்கொண்ட இடம் நல்ல வேளையாக எமர்ஜென்சி வார்டாக இருக்க, ஓடிவந்து கட்டிக்கொண்டாள் ஜீவா.

''வாங்கம்மா, நேரா இங்கதான் வர்றீங்களா? தந்தி எல்லாம் கரெக்டா கிடைச்சிச்சா?''

''கிடைக்காமலா' வந்திருக்கேன். ஆமா சாதனா எங்கே? அவளுக்கு என்ன ஆச்சு?''

''பதட்டப்படாதீங்க. உயிருக்கு ஒரு ஆபத்தும் இல்ல...''

''மகமாயி. அது சரி, என்ன ஆச்ச? எப்படி ஆச்சு?

''சொல்றேன், சொல்றேன். நீங்க முதல்ல கொஞ்சம் அமைதியாகுங்க.''

''ஐயோ! விஷயத்தைச் சொல்லேன்.''



ஜீவா நடந்ததை விவரித்தபோது சண்முகமும் அங்கு வந்து சேர்ந்திருந்தான். கண்களில் இலேசான கலக்கம். ஜீவாவை ஏக்கமாகப் பார்த்தான். ஜீவாவுக்கு அவனைப் பார்க்க துளி தெம்பாக இருந்தது.

இதற்குள் வார்டின் கதவை வலுக்கட்டாயமாகத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்து விட்டிருந்தாள் பார்வதி.

''ஆமா, எப்படி இருக்கு உங்க சிஸ்டருக்கு?''— சண்முகம் முதல் தடவையாக ஜீவாவிடம் பேசத் தொடங்குகிறான்.

''அவ என் சிஸ்டர் இல்லை. சிஸ்டர் மாதிரி'' ஜீவா திருத்துகிறாள்.

''உங்களை நான் அக்கா தங்கைன்னே நினைச்சுக்கிட்டிருந்தேன்.''

''நீங்க மட்டுமில்ல. ரொம்பப்பேர் அப்படித்தான் நெனைச்சுகிட்டிருக்காங்க.''

''சிஸ்டர் மாதிரின்னீங்க... அப்படின்னா ரிலேஷனா?''

''நோ... நோ... அவள் நல்ல ஸ்னேகிதி. காலேஜ்ல இருந்தே பழக்கம். பயங்கர பிரில்லியண்ட் ஸ்டுடண்ட் அவ! சொந்த ஊர் கடலூர் பக்கம் உள்ள ஒரு கிராமம். நல்ல வேலை இங்கே கிடைக்கவும் இப்ப நகர வாசி ஆயிட்டா... ஆரம்பத்துல ஹாஸ்டல்ல தங்கி இருந்துகிட்டு வேலைக்குப் போய்வரத்தான் பிரியப்பட்டா. நான்தான் தடுத்து என் வீட்ல தங்க வைச்சேன். இப்ப ஏன் தங்க வைச்சேன்னு ஃபீல் பண்ணும்படி ஆயிடிச்சு...''

''எதனால அப்படிச் சொல்றீங்க?''

'என் வீட்ல தங்கியிருக்கும்போது இப்படி ஆயிட்டதை நினைச்சா கவலைப்படாம இருக்க முடியுமா?'

'நோ... நோ... விதிக்கு யார் என்ன பண்ண முடியும்?'

"விதி இல்ல சார் திமிர். கார் கைல கிடைச்சிட்டா சிலருக்கு தலை கால் புரியறதில்லை ராமபாணம் மாதிரி அதை செலுத்த ஆரம்பிக்கறாங்க. ஸ்டுப்பிட். அந்த கார்க்காரன் மட்டும் என் கைல கிடைச்சா அவனை பீஸ் பீஸா கிழிச்சுருவேன்."

"கவலைப்படாதீங்க... ஆக்ஸிடெண்ட் அப்ப நான் அங்கதான் இருந்தேன். ஐ சா த கார் நம்பர். கண்டு பிடிச்சிடலாம்."

"நிஜமாவா! இந்த விஷயத்துல நீங்க உதவி செய்தே திரணும் சார். உங்க லெட்டரைப் பார்த்து மெய்மறந்து போயிட்டா. கடைசியா அவ அனுபவிச்ச ஒரு நல்ல சந்தோஷம் அவளுக்கு அதுதான்."

அப்போது பார்வதி பெரிதாக அழுவது உள்ளிருந்து வெளி வரை கேட்டது. சில நர்சுகள் பார்வதியை இழுத்து வெளியே தள்ளாத குறை...

"ஐய்யோ என் பொண்ணோட இரண்டு காலும் போச்சே! படுபாவி கார்ல வந்து இப்படி என் பொண்ணோட காலை கொண்டுகிட்டு போயிட்டானே...

ஆணுக்கு ஆணா பொண்ணுக்கு பொண்ணா இருந்து என் குடும்பத்தை பார்த்துக்கிட்ட என் வீட்டு ராணியை நொண்டியாக்கிட்டானே சண்டாளன். பார்வதியின் அலறலில் ஆஸ்பத்திரி உத்திரங்கள் கூட நடுங்கின.

"ஏங்க உங்க பிரண்டுக்கு கால்ல பிராப்ளமா...இவங்க நொண்டி அது இதுன்னு புலம்பறாங்களே..." என்று பதட்டத்துடன் கேட்டான்.

"யெஸ்... அவளுக்கு கால் போயாச்சு! காலை வெட்டினாதான் உயிரை காப்பாத்த முடியும்கிறது டாக்டர்களோட சீர்யஸான முடிவு. அவளுக்கு ஸ்ட்ரக்சர்லயே கால்தான் அழகு... அவ நடையை ரசிக்காதவங்க யார்?"



—ஜீவா சொல்லிவிட்டு முதல் தடவையாக அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் அழுதாள். சண்முகத்திடம் அசாத்திய மௌனம். வார்டுக்குள் நுழைந்து சாதனாவைப் பார்க்கக்கூட பிரியப்படாமல் மெல்ல அங்கிருந்து நடையைக் கட்டத் தொடங்கினான். ஜீவா அதை அதிர்ச்சியும் ஆச்சரியமுமாகப் பார்க்கிறாள்.

**போ**ர்ட்டிகோவில் கூட ஒரு ஒழுங்காக நிறுத்தப்படாமல் அங்கு கிடத்தப்பட்டிருக்கும் ஒரு மூங்கில் கூடைக்கு மேல் ஏறி சுவரில் உரசியபடி நின்று கொண்டிருந்தது அந்தக் கார்.

எட்டிப் பார்த்த தொழிலதிபர் ஜம்புநாதனுக்கு கண்களில் சிகப்பு. கோட் சூட்டின் சரசரப்போடு அந்தக் காரைச் சுற்றிச் சுற்றி வருகிறார். போர்ட்டிகோவிற்கு வெளியே வேலைக்காரர் வரிசை. அவர்கள் உடம்பில் இலேசான நடுக்கம்.

"இப்ப ஜெகதீஷ் எங்கடா?"— உள்ளிருந்து காரின் மேல் பார்வையை விலக்காமல் கத்துகிறார்.

"ஐயா உள்ளதான்யா இருக்கார்..."

"அவனை எப்படிடா தனியா காரை எடுத்துக்கிட்டு போக விட்டீங்க?"

"நாங்க விடலைய்யா... எங்களை எல்லாம் பிடிச்சுத் தள்ளிட்டு நாங்க கத்தக் கத்த எடுத்துக்கிட்டு வெளியே போயிட்டாருய்யா..."

—ஜம்புநாதன் பார்வை அதைக் கேட்டபடி காரின் பம்பரைப் பார்த்தபோது தூக்கிவாரிப் போட்டது. திப்பித் திப்பியாக ரத்தம்! சற்று குனிந்து பார்த்தபோது முகத்தில் வியர்வை குபீரிட்டது. காரின் அடிப்பரப்பெல்லாம் வழன்றுபோய் ஒட்டிக் கிடக்கும் சதைத் துண்டுகள். ரத்தப் புள்ளிகள்! நிமிர்ந்தவர் நெஞ்சைக் கையில் பிடித்

துக்கொண்டார். நெடுநேரம் பேசமுடியாத ஸ்தம்பிப்பில் போர்ட்டிகோவின் அடைசலான மேற்பரப்பையே பார்த்துக்கொண்டிருந்தார். கண்களில் ஈரச் சேர்க்கை. பின் மெல்ல அங்கிருந்து நகர்ந்து பளபளப்பான அந்தப் பங்களாவின் தேக்குக் கதவுகளைக் கடந்து உள் நடக்கத் தொடங்குகிறார்.

கண்ணாடியால் வேய்ந்ததுபோல் தரைப்பரப்பு,

அவரது துவண்ட நடையை அது தூக்கிக் காட்டுகிறது. ராஜ கம்பீரமான நாற்காலிகள்— பூவாசத்தோடு இடக்கும் கலை நயமான ஜாடிகள்— நாசியைத் தூண்டும் சந்தன வாடை— ஏகபோகமான சூழல்தான். ஆனால் ஜம்புநாதனின் மனதில் பிணம் சுமப்பதுபோல் ஒரு பிரமை. எதிலும் லயிக்க முடியாதபடி நெஞ்சைப் பிசையும் ஒரு சோகம். ஊடே கண்ணாடி டம்ளர்கள் மோதும் சப்தம் காதில் கேட்கிறது. தேள்கடி பட்டமாதிரி ஒரு சிலிர்ப்பு. சப்தம் பக்கமாய் உள்ளறையிலிருந்துதான் வந்தது. எட்டிப் பார்த்தபோது ஜெகதீஷ் விஸ்கி பாட்டிலின் கடைசிச் சொட்டுடனும் கண்ணாடித் தம்ளருடனும் காட்சி தந்தான்.

மிதமிஞ்சிய போதையிலும் மேலும் போதையைத் தேடும் அவன் செயலை அவரால் ஒப்புக்கொள்ளவும் முடியவில்லை. விலக்கவும் முடியவில்லை.

நின்று சில வினாடி அந்த காட்சியைப் பார்த்துவிட்டு அந்த அறைக்கதவை அழுத்தமாக மூடியபடி திரும்புகிறார்.

வேலைக்காரர்கள் முகங்களில் எல்லாம்கூட சோகமான இறக்கம்.

நடு ஹாலில் மெத்தென்ற சோபாவில் கோட்டைக்கூட கழற்றாமல் அவர் விழுந்த மறுகணம் பக்கத்து டெலிபோன் அலறியது.



நடுக்கத்துடன் தொட்டவர் காதுகளை இன்ஸ்பெக்டர் வாசுவின் குரல் கவ்வியது.

"ஈஸ் திஸ் மிஸ்டர் ஜம்புநாதன்ஸ் ரெசிடென்ஸ்?"

"யெஸ்... ஜம்புநாதன் ஸ்பீக்கிங்."

"சார், நான் இன்ஸ்பெக்டர் வாசு பேசறேன் டி.எம்.என். 1313 கார் உங்களதுதானே?"

—ஜம்புநாதன் அந்தக் கேள்விக்கு பதில் தராமல் லேசாக மிரள, திரும்பவும் இன்ஸ்பெக்டர் வாசுவின் காட்டமான கேள்வி.

"ஆமாம் சார்... என் மகனோட கார்..."

"ஏன் சார் ரோட்ல போறவங்கமேல ஏத்தி ஆக்சிடெண்ட் பண்ணுறதுக்குன்னே உங்க சன் அந்தக் காரை வாங்கியிருக்காரா?"

"நீங்க என்ன சொல்றீங்க?"

'ஏற்கனவே ஒரு தடவை போலீஸ் கேஸ்னு அலைஞ்சும் உங்களுக்கு புத்தி வரலைன்னு சொல்றேன். பணம் ஒரு அளவுக்குத்தான் உங்களைக் காப்பாத்தும். எப்பவும் காப்பாத்தாது. இன்னைக்கு ஒரு மணி நேரம் முன்பு உங்க சன் கார் ஒரு வயசுப் பொண்ணோட வாழ்க்கையையே, நாசமாக்கியிருக்கு. மெயின் ரோட்ல ஓட்டத் தெரியாம ஓட்டி ஆடு மாடுன்னு வாயில்லா ஜீவன்களையும் பலி வாங்கியிருக்கு. பலருக்கு காயம்! காரை யார் டிரைவ் பண்ணியிருந்தாலும் சரி. இந்த முறை அவங்களை நாங்க கம்பி எண்ண வைக்காம விடப்போறதில்லை.

நீங்களா குற்றத்தை ஒத்துக்கிட்டு சரண்டர் ஆயிடறது உங்களுக்கு நல்லது. ஒரு பெரிய தொழிலதிபர்ங்கறதால உங்க வீட்டுக்கு வந்து தடாலடியா நடவடிக்கை எடுக்க நான் விரும்பலை.

நீங்க நிஜமாலுமே இந்த கம்யூனிட்டில பெரிய மனுஷன்னா, எங்களுக்கு கோ ஆப்ரேட் பண்ணணும். பண்ணுவிங்கன்னு நம்பறேன்.''

—போன் முடங்கியது. ஜம்புலிங்கத்துக்கு வாய்விட்டு அழவேண்டும் போல இருந்தது. நிஜமாலுமே அழுதார். அதைப் பார்க்கப் பொறுக்காமல் பக்கமாக வந்து அவருக்கு ஆறுதல் சொல்ல ஆரம்பித்தான் பாண்டி என்னும் ஒரு வயதான வேலைக்காரன்.

''ஐயா என்ன இது குழந்தைமாதிரி அழுதுகிட்டு...''

''குழந்தைமாதிரி அழுதா அதுல துக்கம் இருக்காது பாண்டி. இது பணக்காரனோட அழுகை. ஆயிரம் சொத்து சுகம் இருந்தும் நிம்மதி இல்லாத ஒரு கோடீஸ்வரனோட அழுகை. கொஞ்சநாள் முன்பு என் மருமகள், பேரன்னு இரண்டு பெரிய செல்வங்களை இழந்தேன். இப்ப நான் என் மகனையும் இழக்கப்போறேன். என்னை இந்த ஆண்டவன் ஏன் இப்படிச் சோதிக்கறான்னு தெரியலையே...''— வாய்விட்டுக் கதறினார்.

''ஐயா புரியும்படி சொல்லுங்க...''

''ஜெகதீஷ் காரை ஏத்தி பெரிசா ஆக்ஸிடெண்ட் பண்ணிட்டாம்பா. போலீஸ்ல இருந்து சத்தம் போடறாங்க. ஏதோ என் மூஞ்சிக்காக போலீஸ் இந்த வீட்டு வாசப்படி ஏறலை. நான் அதைக் காப்பாத்திக்கலைன்னா இருக்கிற மானமும் போயிட்ற நிலை. எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலையே...''— அவர் புலம்பித் தவித்த அந்த சமயத்தில் ஒரு சமய சஞ்ஜீவிபோல் அங்கிருந்து கிளம்பினான் பாண்டி.

''ஐயா, நான்தான் காரை ஏத்தி ஆக்ஸிடெண்ட் பண்ணியவன். போலீஸ்ல சரணடையப்போறேன். உங்களுக்கு நன்றி காட்ட இதைவிட எனக்கு ஒரு சந்தர்ப்பம் வராதுய்யா...'' பேசிவிட்டு விறுவிறு என்று நடப்பவனைப் பிரமித்துப்போய்ப் பார்க்கிறார் ஜம்புநாதன்.

# 3

## காதல் என்பது கவிதைத்தனமான காமம்!

மெல்லக் கண் திறந்து பார்க்கிறாள் சாதனா! அம்மாவின் கண்ணீர் முகம்தான் அவளை ஆட்கொள்கிறது. பக்கத்தில் ஜீவா. இடுப்புக்குக் கீழே செயல் இழந்த மாதிரியான உணர்வில் மெல்ல நிமிர்ந்து கீழே பார்க்க முனைகிறாள். தடுக்கிறது ஜீவாவின் கரம்.

''ஸ்ட்ரெய்ன் பண்ணாதே சாதனா. உனக்கு ஒன்னுமில்லை.''

உடைந்த ஜீவாவின் குரல் அவளைத் தேற்றப் பார்க்கிறது.

''ஒன்னுமில்லையா... ஆமாம் ஒன்னுமில்லைதான்! இனி அவளுக்கு வாழ்க்கையில் ஒன்னுமேயில்லை''—கதறுகிறாள் சாதனாவின் அம்மா பார்வதி.

இதற்குள் சாதனா போர்வையை விலக்கிப் பார்த்துவிட்டு விகசிக்கிறாள். காலம் முழுக்க அவளைச் சுமந்தும், சுமக்க வேண்டியதுமான அந்த இரண்டு கால்கள்... வாழைத்தண்டை சவாலுக்கு இழுக்கும் வண்ணமயமான அந்த கால்கள்... கொலுசு குடியேறி சங்கீதம் படித்த அந்த சந்தன நிறக் கால்கள் இருந்த இடத்தில் முற்றிலும் வெறுமை!

மனதை ஐயோ என்ற சொல் குத்தித் தாக்க பலவீனமான உடம்பை மயக்கம் விறுவிறு என்று வந்து கவ்வியது.

''என்னம்மா நீங்க! கண் முழிச்சவளை திரும்ப மயக்கமாக்கிட்டீங்களே... தெம்பா பேசவேண்டிய நேரத்துல இப்படியா உணர்ச்சிவசப்படுவீங்க?''

—ஜீவா பார்வதியை நிஜமாலுமே கோபத்துடன் கண்டிக்க, பார்வதி முகம் அப்படியே கும்பிச் சுருங்கியது.

''என்னால முடியலைம்மா...எனக்கென்ன பிள்ளையா குட்டியா? இவதானே எனக்கு எல்லாம். இவளுக்கு இப்படி ஆயிட்ட பின்னாலே நான் மட்டும் எதுக்கு இன்னும் உயிரோட இருக்கேன். அந்த ஆண்டவன் எனக்கு இப்படி ஒரு நிலையைக் கொடுத்து என் மகளைக் காப்பாற்றியிருக்கக் கூடாதா?''

பார்வதியின் புலம்பலில் ஜீவாவின் மனது நெகிழ்ந்து வலித்தது.

''எனக்குத் தெரிய அவ சுகப்பட்டதே இல்லை. அவளுக்கு விவரம் தெரிஞ்ச நாள்ள இருந்து இந்த வாழ்க்கையோட போராடித்தான் அவ முன்னுக்கு வந்திருக்கா... பட்டினி இருந்து படிச்சு, பத்து பாத்திரம் தேச்சு ஸ்கூல் ஃபீஸ் கட்டி முதல் மாணவியா பாஸ் பண்ணி வேலைக்கும் சேர்ந்து இப்ப ஒரு பிரயோஜனமில்லாம போச்சே...நல்ல நாள்ளேயே நாங்க ஏழை. இப்ப நொண்டி வேற... எங்களுக்கு வாழ்க்கையே இல்லாம போயிடுச்சேயம்மா...''

பார்வதியின் புலம்பலில் உக்ரம் கூடிக்கொண்டே போனது. அதைக் கட்டுப்படுத்தி ஆறுதல் சொல்லும் சக்தி அங்கு யாரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஜீவாவின் உள்மனது இவ்வளவிற்கும் காரணமான அந்தக் காரோட்டியின்மேல் மையம் கொள்ள ஆரம்பித்தது. களையான முகமாக இருந்தும் கொலைகார தோக்கோடு காரை ஓட்டிய அவனை சின்னாபின்னமாக்கினால்தான் ஆத்திரம் அடங்கும்போல் தோன்றியது.



''சண்டாளனே, இன்னுமா நீ பிடிபடலை''—அவள் குமுறலோடு திரும்பின வேளை அந்த வார்டுக்குள் இன்ஸ்பெக்டர் வாசு நுழைந்திருந்தார். கைகளில் ஃபைல் கட்டு. ஆக்சிடெண்ட் ரிப்போர்ட் தாள்கள் அதில் குடியேறியிருந்தன. அவரைப் பார்க்கவும் ஆவேசத்துடன் நெருங்கினாள் ஜீவா.

''சார் அந்த ரோக்கை பிடிச்சாச்சா?'' அவள் கேள்வி முன் அவர் சற்று இடறுவது தெரிந்தது. வியர்வைத் தெப்பமான காக்கிச் சட்டைமேல் வார்டின் ஃபேன் காற்று படும்படியாக நின்றுகொண்டு தலைத் தொப்பியை சுழற்றி சுவாசித்தார்.

''என்ன சார் பதிலைக் காணோம். அந்தக் கார் டிரைவரை பிடிச்சீங்களா இல்லையா... அவன் முகம் எனக்கு நல்லா நினைவுல இருக்கு... சரியான பணக்கார முகம். தேவதாஸ் மாதிரி தாடி வளர்த்திருப்பான்.''

—ஜீவாவின் அசத்தலான வாதங்களை வார்டும் உற்றுக் கேட்டது. மெள்ளப் பேசும்படி நர்ஸ் ஒருத்தி சமிக்ஞை செய்தும் ஜீவா சட்டை செய்யாமல் கத்தினாள்.

''சார், என் ஸ்னேகிதி ஒரு பரம ஏழை சார். ரொம்ப கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவ. கூடிய சீக்கிரம் அவளுக்கு கல்யாணம் நடக்க இருந்தது. இப்ப எல்லாமே பாழாப் போச்சு... உங்க பொண்ணுக்கு இப்படி நடந்தா சும்மா இருப்பீங்களா?''—அவளின் அந்தக் கடைசி அஸ்திரம் முன்னால் பிடரியைப் பிடித்த மாதிரி அவர் முகம் நிமிர்ந்தது.

''அம்மா, அந்தக் காரை ஓட்டினது யார்? அந்தக் கார் யாருக்குச் சொந்தம்? எல்லாம் எங்க டிபார்ட்மெண்ட்டுக்கு நல்லாத் தெரியும். ஆனா இப்ப நடந்திருக்கறதே வேற! இந்த உலகத்துல பணக்காரங்க எல்லா ஆடம்பரங்களை மட்டுமல்ல, எல்லா நீதி நியாயங்களை

யும்கூட விலைக்கு வாங்க முடிஞ்சவங்களா இருக்காங்க. உங்க ஸ்னேகிதியைவிட மோசமான ஒரு ஏழைதான், தான் அப்படி செய்ததாக ஸ்டேஷன்ல சரண்டர் ஆகியிருக்காரு!''

''நீங்க என்ன சொல்றீங்க இன்ஸ்பெக்டர்?''

''விரிவா சொல்லணும்னா ஜம்புநாதன்கற கோடீஸ்வரர் மகன் ஜெகதீஷ்தான் இந்த ஆக்ஸிடெண்டுக்குக் காரணம். ஆனா அவர் வீட்டு சாதாரண வேலைக்காரன் பாண்டி. தான் செய்ததா முன்வந்திருக்கான். அவன் அந்தக் குற்றத்தை ஒப்புக்க அந்தப் பணக்காரர் அவனுக்கு எவ்வளவு கொடுத்தாரோ யாருக்குத் தெரியும்?''

''என்ன சார் இது... யாரோ ஒருத்தன் வந்து நான் தான்னு சொன்னா அவன்தான்னு முடிவுக்கு வந்துடுவீங்களா? காரை ஏத்தி என் ஃபிரண்டை இந்த நிலைக்கு அந்த ஜெகதீஷ் கொண்டு வந்தப்போ நான் பக்கத்துல தான் இருந்தேன். நான் அவனை நல்லா பார்த்த சாட்சி.''

''நிஜமாவா... யாரைக் கேட்டாலும் ஓட்டின நபரை சரியா பார்க்க முடியலைன்னுதான் சொன்னாங்க. தெரிஞ்சாலும் நமக்கு எதுக்கு வம்புங்கற எண்ணத்துல பாதிப் பேர் ஒதுங்கிக்கறாங்க.''

''யாரைப்பத்தியும் எனக்குக் கவலையில்லை. இந்தத் தப்புக்குக் காரணமான நபர் என் ஃபிரெண்டுக்குத் தகுந்த நியாயத்தை தந்தே தீரணும். தன் தப்புக்கு தண்டனை அனுபவிச்சே தீரணும். இது நடக்கிறவரை நான் விட மாட்டேன்.''

''குட்... அப்படின்னா இப்பவே என்கூட ஸ்டேஷனுக்கு வரமுடியுமா?''

''இது விஷயமா நான் எங்க வேணுமானாலும் வரத் தயார்!''



—அடுத்த நிமிடம் சப்இன்ஸ்பெக்டர் வாசு மயக்கத்திலிருக்கும் சாதனாவை ஒரு பார்வை பார்த்துவிட்டு டாக்டரிடம் போய் எதையோ பேசினார். அவரும் சீரியஸாக எதையோ சொல்லி எழுதியும் தர அவர் வந்த நோக்கம் முடிந்ததுபோல் தோன்றியது.

இதற்குள் ஜீவாவும் பார்வதியிடம் சொல்லிக் கொண்டு கிளம்பத் தயாராக இருந்தாள். வாசு அவளை நெருங்கவும் இருவருமாக இணைந்து வார்டுகளைக் கடக்கிறார்கள். உலகமே நோய் மயமாகி மாந்தர்கள் அவ்வளவு பேரும் அதிலிருந்து விடுதலையடையப் போராடுவது போல் ஒரு தோற்றத்தை அந்தச் சூழ்நிலை தந்துகொண்டிருந்தது.

இன்பமான ஒரு பொழுதின் தொடக்கம்... ஊஹும், ஒரு காதலின் தொடக்கத்தை ஒரு உலோக வஸ்துவின் நான்கு சக்கரங்கள் நிர்மூலமாக்கிவிட்ட கொடுமையை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை.

ஸ்டேஷனின் சிறிய லாக்கப் அறையின் இருண்ட மூலையில் குந்தவைத்து அமர்ந்திருந்தான் பாண்டி. முகத்தில் சிறைச்சாலை உருவாக்கும் சோகத்துக்கு பதிலாக பெரிதாக எதையோ சாதித்ததைப்போல் ஒரு பெருமிதம். அப்போது பார்த்து கதவு திறக்கப்படும் சப்தம். தொடர்ந்து உள்ளே சிலர் நுழைவதைப் பார்த்து எழுந்து கொண்டான்.

''இவன்தான் அந்தப் பணக்காரனுக்கு பதிலா குற்றத்தை ஒத்துக்கிட்டிருக்கிறவன்.''—சப்இன்ஸ்பெக்டர் வாசுவின் சுட்டிக் காட்டலில் ஜீவாவின் பார்வை அவன் மேல் கடுமையாகச் சென்று பிராண்டலாய்ப் பார்த்தது. அவன் அந்தப் பார்வை முன் இலேசாகக் கூசினான்.

'எவ்வளவுடா பணம் தந்தான் அந்தப் பணக்காரன்?' வாசு லத்தியை சுழற்றியபடிக் கேட்ட கேள்விமுன் அவன் முகம் லேசாகச் சுணங்கியது. தயங்கினான்.

''கேக்கறேன்ல...'' வாசுவிடம் சப்தம் கூடத் தொடங்கியது.

''அவர் எதுக்குங்க எனக்குப் பணம் தரணும்?''

''எதுக்கா? இப்படி நீ உள்ள வந்து உக்காரத்தான். நாளைக்கு சென்ட்ரல் ஜெயில்ல கம்பி எண்ணப்போறியே அதுக்குத்தான்.''

''என் தப்புக்கு நான் கம்பி எண்ணப்போறேன். அவர் அதுக்கெல்லாமா பணம் தருவாரு?''

''பரவாயில்லேயே, நல்லா பேசறீயே!''

''இல்லீங்க, உண்மையைச் சொல்றேங்க.''

''எது உண்மை? நீ கார் ஏத்துனேங்கறையே அதுவா? இல்லை அந்தப் பணக்காரன் தப்பை உன் தப்புன்னு சொல்றீயே அதுவா?''

வாசுவின் கேள்விமுன் அவன் சற்று திணறினான். தப்பிக்கப் பார்த்த சுண்டெலி கதவிடுக்கில் வாலைக் கொடுத்து மாட்டிக்கொண்ட மாதிரி...

''உண்மையிலேயே காரை யார் தலைதெறிக்க ஒட்டி னாங்கங்கறதுக்கு பார்த்த சாட்சியே •இருக்கு. அது தெரியுமா உனக்கு?''

கேள்விமுன் அவன் முகத்தில் ஏக மிரட்சி.

''ஐயா...யார் என்ன சொன்னாலும் அது பொய். நான் சொல்றதுதான் உண்மை. நான்தான் காரை ஒட்டி ஆக்சிடெண்ட் பண்ணியவன்.''

''ஜீவா அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள். 'பணம் இப்படிக்கூட மனிதனை மாற்றுமா என்ன?'—நெற்றியை அந்த ஆச்சரியம் பிய்க்கவும் தேய்த்துவிட்டுக்கொண்டாள்.

பாண்டி பார்க்க பங்கரையாகத் தெரிந்தான், முகத்தில் முப்பது நாள் தாடி. விழிக்குழியில் பீளைச் சேர்க்கை. ஏழ்மையின் ருத்ர தாண்டவத்துக்கு கட்டியம் கூறும்



எலும்புக் கூட்டு மார்பு. அவனுக்கு அவனைப் பார்க்க பரிதாபமும், அதேசமயம் தப்புக்குமேல் தப்பாகச் செய்வ தாகக் கருதி ஜெகதீஷ்மேல் கோபமும் பலமடங்கு பெரிதானது.

''என் ஸ்னேகிதி நிலையைவிட இவர் நிலை மோசம் சார். ஒரு குற்றத்துல இருந்து தப்பிக்க பணத்தை வாரி இறைப்பாங்க. அதைப் பார்த்திருக்கேன். ஆனா ஒரு குற்றத்துக்கு உடன்பட பணத்தை வாங்குற அளவுக்கு ஒருத்தர் தயாரா இருக்கார்னா அவருக்கு எவ்வளவு பணத் தேவை இருக்கணும். யோசிச்சுப் பாருங்க. இதுவும் ஒரு வகை விபச்சாரம்தான்'' என்றாள்.

''அம்மா, அளவுக்குமீறிப் பேசாதீங்க. நானும் சரி, எங்க ஐயாவும் சரி பணம் காசுக்கு அப்பாற்பட்டு ஆத்மார்த்தமா பழகுறவங்க. அவருக்கு இணை உலகத்து லேயே கிடையாதும்மா. வாய் புளிச்சிச்சோ மாங்கா புளிச்சிச்சோன்னு எதையாவது பேசாதீங்க...''

—பதிலில் கோபத்தைக் கணிசமாகக் காட்டினான் பாண்டி.

''ஏய் இந்தக் கதை எல்லாம் வேண்டாம். காரை ஒட்டினது உங்க சின்ன முதலாளிதானே?''

''இல்லே நான்தான்.''

''நீ பொய் சொல்றே. உன் சின்ன முதலாளியைப் பிடிச்சு நாலு சாத்து சாத்தினா தானா உண்மை தெரிஞ் சுட்டு போவுது.''

''என் பெரிய முதலாளி உள்ளவரை அது நடக்காது. குற்றவாளி நான்னு சொல்லும்போது அதைக் கேட்காம யாரோ சொல்றதைக் கேட்டு நீங்க பேசறது நல்லா இல்லீங்க.''

—அப்பொழுது வாசலை தொலைபேசி அழைத்தது. அனுகியவர் அதன்மூலம் காதில் விழுந்த செய்தியால் அப்படியே துவண்டுபோனார்.

சோர்வோடு ஜீவாவைப் பார்த்தார்.

"என்ன சார்...எனிதிங் ராங்?"

"யெஸ், டோட்டலி ராங்"

"ஆக்சுவலி வாட் ஹேப்பண்ட்?"

"ஐ. ஜி. ஆபீசல இருந்து போன் மேடம். பாண்டியை குற்றவாளியாக்கி மற்ற காரியங்களை கவனிக்கச் சொல்லி உத்தரவு."

என்ன சார் இது? உண்மை எது. பொய். எதுன்னு தெரிஞ்சுக்காம?"

"நான் தப்பே செய்யலைன்னு சொல்ற இடத்துல நான் என்கொயரிக்கு வேலை. நான்தான் தப்பு செஞ்சேன்னு ஒருத்தர் சொல்லும்போது சட்டத்துக்கு என்ன தண்டனை கொடுக்கறதுங்கறது பத்திதான் கவலை."

—ஜீவா அதைக் கேட்டு சோர்ந்து போனாள். ஜெகதீஷை மனதில் நிற்க வைத்து நார்நாராக உரித்தாள். நடுவே சாதனா முகம் விம்மி அடங்கியது. தொண்டிக் கால்களுடன் அவள் நிற்கும் காலம் இதயத்தை இடுக்கியால் கவ்வியது. ஜெகதீஷ், உன்னை விடமாட்டேன்டா என்று கறுவி சபத முடிச்சு போட்டுக்கொண்டது மனது. அடுத்த வினாடியே அவனைச் சந்திக்கக் கிளம்பிவிட்டாள்.

# 4

## காதல் என்பது ஒரு சுயநல மோசடி

**போ**ர்ட்டிகோவிலிருந்து காரை சுயமாகவே கிளப்பிக் கொண்டு அந்த பங்களாவின் கிரில் கேட்டை ஜம்புநாதன் தொட்ட வேளை ஜீவாவும் அதைத் தொட்டிருந்தாள். நடுவில் காக்கி உடுப்பு கூர்க்கா, சப்பைமூக நேப்பாளியான அவனது நீல விழிகள் அவளை முறைத்துப் பார்த்து 'யார் நீ...? ஓரம் போ" என்றபோது காருக்கு முன்னே கையைக் கட்டிக்கொண்டு போய் நின்றாள் ஜீவா. ஜம்புநாதனிடம் வியப்பின் விரிவு.

"யாரும்மா நீ?" கியர் மாற்றியபடியே கேட்கிறார்.

"ஐ வான்ட் டு டாக் டு யூ அலோன்..." ஜீவாவின் அந்த நளினமான ஆனால் படுதீர்க்கமான 'உங்களைத் தனியா பார்த்து பேசணும்' என்கிற பதில் அவருக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

"அது சரி, யார் நீ?"—அவரிடமும் தீர்க்கம்.

"நான் சாதனாவோட ஃப்ரெண்ட் ஜீவா?"

"யார் அந்த சாதனா?"

"நேத்துவரை அழகான தேவதை. இன்னைக்கு உங்க அருமைப் பிள்ளையினால நொண்டி..."

"வாட் டு யூ மீன்?"

"ஐ மீன், உங்க அருமைப் புத்திரர் செய்த ஆக்சிடெண்டால உயிருக்கும் உறுப்புக்கும் போராடிக்கிட்டிருக்கிற ஒரு பொண்ணோட பிரதிநிதியா தான் நியாயம்

கேக்க வந்திருக்கேன்னு சொல்றேன். இப்படி வெட்ட வெளில தர்க்கம் பண்ண வேண்டாம்னுதான் தனியா சந்திக்கனும்னு சொன்னேன்.''

ஒரு எரிமலைபோல் வெடித்தவளை சலனத்தோடு பார்க்கிறார் ஜம்புநாதன். மூளைச் செல்லில் ஒன்று களைத்துப் போய் சிகரெட், சிகரெட் என்று கூறவே பாக்கெட்டிலிருந்து சிகரெட்டை எடுத்து பற்ற வைக்கிறது கைகள். உதடு புகையைக் கக்கும்போது அந்த வாகனம் ரிவர்சில் செல்லத் தொடங்குகிறது.—கைஜாடை ஜீவாவை உள்ளே அழைக்கிறது.

—ஐயாயிரம் சதுர அடிக்குக் குறைவில்லாத அந்தப் பங்களாவின் முகப்பில் ஆஸ்திரேலிய புற்களின் அபார செழுமை. நடுவில் ஒரு பன்னீர் மரம். அதன் நிழலில் கோங்கு மரத்தைக் குடைந்துசெய்த மல்டி நாற்காலி.

''உக்காரும்மா...'' அதைக் காட்டி ஜம்புலிங்கம் சொன்னபோதிலும் ஜீவா உட்காராமல் பன்னீர் மரத்தின் தழைத்த கிளை ஒன்றைப் பிடித்து நின்றபடியே பேச்சைத் தொடங்கினாள்.

''பாண்டியை உங்களால விலைக்கு வாங்க முடியும். ஆனா கடவுளை வாங்க முடியாது.''— அந்தத் துவக்கமே அவருக்கு சுருக்கென்று பட்டது. தப்புமேல் தப்பு பண்றீங்க சார். இதை என்னால வேடிக்கை பார்க்க முடியாது.''

உம்...அப்புறம்!—என்பதுபோல அவர் பார்வை அவள் மேல் ஊன்றியது.

''உங்களுக்கு மனசாட்சியே கிடையாதா...பணம் இருந்தா என்னவேணும்னா செய்யலாம்கிற நினைப்பா?'' —அந்தக் கேள்விமுன் அவர் இலேசான கோபப் பார்வை பார்த்தார்.



என் சிநேகிதிக்கு ஏற்பட்டிருக்கிற இழப்புக்கு நீங்க தகுந்த நியாயம் தந்தே தீரணும். வாழைத்தண்டு மாதிரி கால் சார் அவளுக்கு, இப்ப அதை இழந்துட்டு கட்டைக் கிடக்கறா. வாழ்க்கையில முன்னுக்கு வரணும்கற வெறியில ஒரு கிராமத்தை விட்டு இந்தப் பட்டணத்துக்கு வந்தவ அவ... இப்படி நொண்டியாறதுக்கு இல்ல...''

—ஜீவாவின் பேச்சு இந்த முறை ஜம்புநாதனை அதிகமாகவே கோபப்படுத்தியது. ''தோ பாரம்மா...சூழ்நிலை புரியாம நீ அளவுக்கு அதிகமா பேசிக்கிட்டே போறே... ஒரு அளவுக்குதான் என்னால பொறுத்துக்க முடியும்.''

''முடியலைன்னா என்ன செய்வீங்களாம்?''

''ஷட் அப்... உனக்கு என்ன வேணும். நேரா விஷயத்துக்கு வா. உன் சிநேகிதிக்கு ஏற்பட்ட ஊனத்துக்கு ஈடா எத்தனை லட்சம் வேணும்?''

''எனக்கு லட்சங்க இப்ப பெரிசில்ல... இவ்வளவு தப்புக்கும் காரணமான உங்க சன் தண்டனைங்கற வளையத்துக்கு வெளிய சுதந்திரமா திரும்பவும் திரியக் கூடாது. அவர் தண்டிக்கப்படணும். நீங்க விலைக்கு வாங்கின பாண்டி வெளிய வரணும். மத்ததைப் பிறகு பேசிக்கலாம்.''

''நான் பாண்டியை விலைக்கு வாங்கல... அது அவனா எடுத்த டெசிஷன்.''

''எந்த ஏழை சார் கஷ்டத்தை விலைக்கு வாங்கற டெசிஷனை எடுப்பான்? என்ன காது குத்தறீங்களா?''

''என் மகனோட நிலை தெரிஞ்சா நீகூட எடுப்பே...''

''என்ன சார் இது புதுக்கரடி?''

''கரடி இல்ல, நிஜம். வா காட்டறேன்...''

ஜம்புநாதன் கால்கள் அந்தப் புல்வெளிகளில் ஏறி நடக்கின்றன. பங்களாவின் வழவழப்பான தரையில் ஷூ சப்திக்க அழுத்தம் காட்டுகிறது. மாடிப்படி ஏறுகின்றன. தயங்கித் தயங்கி பின்தொடர்கிறாள் ஜீவா.

ஏனோ மாடிப்படிக்குக் கீழேயே நின்றுகொள்கிறாள். இரு வரேன் என்பதுபோல் கண்ணைக் காட்டிவிட்டு ஒரு அறைக்குள் மறைகிறார் ஜம்புநாதன்.

விஸ்தாரமான அந்த பணக்கார ஹாலின் பளபளப்பில் ஜீவாவின் மெல்லிய புருவங்களில் வளைசல் விழும்நேரம் ஹாலின் தனி அறையில் யாரோ விசும்பி அழும் சப்தம் கேட்டது மெள்ள எட்டிப் பார்த்தாள்.

ஜெகதீஷ் தெரிந்தான். ஒரு இளம் பெண்ணின் புகைப் படத்தைக் கட்டிக்கொண்டு விசும்பிக்கொண்டிருந்தான். அவனைச் சுற்றிலும் புகைப்படங்கள் சிதறிக் கிடந்தன. ஒவ்வொன்றிலும் ஒரு பிஞ்சு முகத்தின் லாவண்யம்.

பச்சரிசிப் பற்களின் பளீர்ச் சிரிப்போடு ஒன்று மனசைக் கிள்ளினால், இன்னொன்று நாய்க்குட்டியைக் கட்டிக்கொண்டு மனதுக்குள் குற்றாலத்தைக் கொட்டுகிறது.

ஜீவா நிற்கும் அறையின் வாசல் பக்கத்தில்கூட ஒரு படம். அதில் ஜெகதீஷிற்குப் பக்கத்தில் பார்க்க ரதியாட்டம் ஒரு பெண். இருவரின் மடிமேலும் வாண்டுத்தனமாய் ஆண் ஒன்று பெண் ஒன்று. அச்சடித்தமாதிரி இரண்டுபேருக்கும் ஒரே முகம். இரட்டைக் குழந்தைகளா?

ஜீவாவின் மனது ஆராய்ச்சியில் நுழைந்த சமயம் மாடிப்படிகளில் ஜம்புநாதன் இறங்கி வரும் அரவம் கேட்டுத் திரும்பினாள். அவர் கையிலும் ஒரு புகைப்படக் கட்டு. வந்தவர் ஜீவாவின் கைவசம் இருக்கும் புகைப் படத்தைப் பார்த்து லேசாக கண்கலங்கினார்.



''அந்தப் படத்தைப் பார்த்த நீ இந்தப் படங்களையும் பாரு...'' என்றார். ஜீவா மௌனமாக கையை நீட்டினாள். மெள்ள கவரைப் பிரித்து ஒவ்வொன்றாகப் பார்க்க ஆரம்பித்தாள். இலேசாக தலையைச் சுழற்றத் தொடங்கியது. வயிற்றைப் புரட்டியது. கண்களில் கலக்கம் பரவியது. முகத்தில் அருவருப்பின் ராஜ்ஜியம்...''

சற்றுமுன் ஜெகதீஷின் அறையில் முல்லைப் பூவாய், முத்துச் சுடராய் பார்த்த பிஞ்சு முகங்கள் சிதைந்து சின்னாபின்னமாகி ரத்தச் சகதியாய்... அதிலும் அந்த ரதியைப் போன்ற பெண்ணின் தலை மட்டும் தனியாக ஒரு மரக்கிளையில் தலைமுடி சிக்கித் தொங்கிக்கொண்டிருக்க, முண்டம் கீழே கிடக்க...! ஜீவா புகைப்படத்தைப் பார்த்தது போதும் என்பதுபோல் ஜம்புநாதன் பக்கம் திரும்பினாள்.

''இவங்களெல்லாம் என் பேரப்பிள்ளைங்க. அவ என் மருமக! யூ நோ அவ ஐ.ஏ எஸ் பாஸ் பண்ணின ஒரு பிரிலியண்ட் கேர்ள். கல்யாணம் ஆகி இரண்டு வருஷம். இரண்டு வருஷம்னா எண்ணி இரண்டு வருஷம்தான் இந்த வீட்டு மருமகளா அவ இருந்தா.

அவ இருந்த ஒவ்வொருநாளும் எனக்கும், ஜெகதீஷுக்கும் வசந்தகாலம். முதல் வெட்டிங்டேயின்போது அவங்க கையில அழகான ட்வின்ஸ்! இரண்டாவது வெட்டிங்டேயின்போது அந்த இரண்டு குழந்தைகளும் ஓடி ஆடி பண்ணின ரகளையைக் காலம் பூரா பார்த்துக்கிட்டிருக்கலாம்.

அன்னைக்கு விதி அவங்க நாலுபேரையும் மகாபலிபுரம் வரை போய்ட்டு வரத் துரத்தினிச்சு. பிக்னிக்குன்னு சொல்லிக் கிளம்பினவங்க பஞ்சுபோல் திரும்பி வந்தாங்க. அவங்க போன காரை ஜெகதீஷ்தான் டிரைவ் பண்ணினான். என் மருமக மதுபாலாவுக்கு வேகம்னா ரொம்பவும்

பிடிக்கும். வாழ்க்கையில எல்லாத்துலேயும் அவ வேக மானவ! படிப்புல, குழந்தை பெத்துக்கிறதுல, ஒரு முடிவுக்கு வர்றதுல... ஷி வாஸ் ஆல்வேஸ் ஃபாஸ்டஸ்ட் வுமன்! சாகறதிலேயும் அந்த வேகம் அவளை விட்டு வைக் கலை. அவளுக்காக ஜெகதீஷ் காரை எண்பதுக்குமேலே ஓட்டினான். எண்பது, நூறு வயசு வாழவேண்டிய என் பேரக் குழந்தைகள் அந்த எண்பது மைல் வேகத்துல அந்த எண்பதே போதும்னு ஒரு லாரி மேல மோதி நாலு கரண மடிச்சு இப்படி சிதைஞ்சு சின்னாபின்னமாகிப் போய்ச் சேர்ந்துட்டாங்க. இதுல ஒரு அதிசயம் என்னன்னா ஜெகதீஷுக்கு ஒரு சின்ன காயம் கூட ஏற்படாததுதான்!''

—ஜம்புநாதன் சொன்னபோது அவர் கன்னக் கதுப்பில் ஏகமாய் சிலிர்ப்பல். கைகால்களில் ஒருவித நடுக்கம்.

''மரணம்கிறது மனுஷனுக்கு ஏற்படற ஒரு கட்டாய விபத்துதான்... நான் இல்லேங்கலை... ஆனா அதுக்கு வயசு இல்லையா? இப்படித்தான் சாகணும்கற நியதி இல்லையா?

இப்படியா பிஞ்சா பூவா இருக்கற பருவத்துல சிதைஞ்சு சின்னாபின்னமாகி உயிரை விடுவாங்க. இதை நேருக்கு நேர் பார்த்த ஒருத்தன் மனசு என்ன பாடு படும்கிறத நான் உனக்கு சொல்லத் தேவையில்லை.

நான் பெருமைக்கு சொல்லலைம்மா... என் மகன் ஒழுக்கத்துல ஒரு ஸ்ரீராமன். நான்கூட எங்க பணக்கார சாவகாசங்களால பார்ட்டிகள்ள சமயத்துல ட்ரிங்ஸ் சாப்பிடுவேன். இந்த விபத்துக்கு முந்திவரை என் மகன் அவைகளை நினைச்சுக்கூடப் பார்த்தது கிடையாது. இப்ப அதைக் குடிக்காம அவனால உயிர் வாழ முடியலை.

இந்த வீட்டுல இருக்கிற அவ்வளவு வேலைக்காரங் களுக்கும் அவன்னா உசிர். அவங்க வீட்டு எந்த ஒரு நல்லது கெட்டதுலயும் இவன்தான் முன்ன நிப்பான்.



நான்கூட ஸ்டேட்டஸ் அது இதுன்னு கத்துவேன். கண்டுக்கமாட்டான். எனக்குத் தெரியாம அவங்ககூட இழைவான்.

இவனோட குற்றத்தை தன் குற்றம்னு சொல்லி ஒத்துக்கிட்டிருக்கிற பாண்டி ஒரு முன்னாள் கிரிமினல்! இந்த வீட்டுல லட்ச ரூபாயைக் கையாடி போலீஸ்லயும் மாட்டிக்கிட்டான். அவனை ஜெகதீஷ்தான் மீட்டு வந்தான். மன்னிச்சு திரும்ப வேலை கொடுத்தான். அந்த செயலைப் பார்த்து பாண்டி ஆடிப்போயிட்டான்.

பாண்டி இன்னைக்கு எடுத்த இந்த முடிவுக்கு ஜெகதீ ஷோட அன்புதான் காரணம். நான் யாரையும் விலைக்கு வாங்கலை. இருந்தாலும் பாண்டி முடிவு தப்புன்னு நெனைச்சு அவனை வெளியே கொண்டு வரத்தான் நான் கிளம்பிக்கிட்டிருந்தேன். நீ எதிர்க்க வந்து பொறிஞ்சு தள்ளிட்டே... போகட்டும்!

உன் விருப்பப்படி சரியான தண்டனையை நான் ஜெகதீஷிற்குக் கொடுக்க விரும்பலை. அவனை விட்டு டும்மா... இயற்கை அவனுக்கு கொடுத்த தண்டனையை விடவா ஒரு பெரிய தண்டனையை நாம கொடுக்க முடியும். அதனால இந்தக் குற்றத்துக்கு நான் என்னை பணயம் வைக்கப்போறேன். பாவம் பாண்டி! அவன் விசுவாசத்துக்கு நான் ரொம்ப கடமைப்பட்டிருக்கேன்.

உன் சினேகிதிக்கும் நான் ரொம்பக் கடமைப் பட்டவன். அவளை நல்லபடி மீட்டு அவ வாழ்க்கையை நல்லவிதமா அமைச்சுக் கொடுக்கிறது என் பொறுப்பு. இதுக்குமேல நான் என்னம்மா பண்ணட்டும்?''

ஜம்புநாதனின் அந்த நீண்ட விளக்கத்தில் மெழுகாக உருகிவிட்டிருந்தாள் ஜீவா! விரிகுடா அலையாகக் கொதித்துக் கொண்டிருந்த மனது அமைதியான நதிப்

போக்காக மாறிவிட்டிருந்தது. புயல் வீசிய இடத்தில் பூந்தென்றல். அவளுக்கு என்ன சொல்வது, எதைச் சொல்வது என்றே தெரியவில்லை.

நார் நாராக உரிக்கப்பட்ட ஜெகதீஷை திரும்பவும் அவள் மனசு ஒட்டவைத்து ஒழுங்குபடுத்தும்போல் தோன்றியது. 'அடப்பாவமே'— என்று அவனுக்காக இரங்கத் தொடங்கியது.

அப்பொழுது அறைக்கு வெளியே ஆவேசமாகத் தெரிந்தான் ஜெகதீஷ்.

''டாட்... என்ன நடந்தது டாட்? குடிபோதையில நான் யார்மேலயாவது காரை ஏத்திட்டேனா? அந்தப் பழியை பாண்டிதான் ஏத்துக்கிட்டிருக்கானா? ஆக்சுவலி வாட் ஹேப்பண்ட்... மறைக்காம உண்மையைச் சொல் லுங்க டாட்...''—பெரிதாக அலறினான்.

''கூல்டவுன் ஜெகதீஷ்...கூல்டவுன்! ஒண்ணும் ஆகல. நீ அலட்டிக்காதே...''— ஜம்புநாதன் பதறிப்போய் அவனைச் சமாதானிக்கப் பார்த்தார்.

''ஆமா யார் இவங்க... எதுக்கு இவங்க வந்திருக் காங்க. சம்திங், எதுவோ நடந்திருக்கு... நீங்க சொல்ல மறுக்கறீங்க?''

அப்பொழுது டெலிபோன் சிணுங்கியது.

ஜம்புநாதனைத் தொடவிடாமல் ஓடிப்போய் தானே அதை எடுத்தான் ஜெகதீஷ். 'ஹலோ...'

''யார் ஜம்புநாதன்தானே பேசறது?''

''யெஸ்...'' தயக்கத்துடன் பொய் வேறு சொன்னான்.

''டேய் ஜம்புநாதன், ராஜ்குமார் பேசறேன். உன் சார்பா நானே ஐ.ஜி. ஆபீஸ்ல மூவ் பண்ணினேன். எவ்ரிதிங் சக்சஸ்! கவலைப்படாதே. பாண்டியை குற்ற



வாளியாக்கி கேஸை டீல் பண்ணப் போறாங்க. அவனை பெயில்ல எடுக்க வேண்டுமானா நாம ஏற்பாடு பண்ணிட லாம்.

அப்புறம் அந்தக் கார்ல அடிபட்ட பெண்ணோட நிலை ரொம்ப மோசமாதான் இருக்கு. நீ லட்சக்கணக்கில அதுக்காக செலவழிக்க வேண்டி வரலாம்.

மை சீரியஸ் அட்வைஸ்...இனி ஜெகதீஷை நீ காரையே தொடவிடக்கூடாது. அவனுக்கு வீட்டிலேயே எல்லா ட்ரிங்க்சும் கிடைக்கணும், அந்த மாதிரி பண்ணிடு. அப்பத் தான் அவன் வெளியே போகமாட்டான்.''

''தேங்க்யூ அங்கிள்...''— என்றபடி போனை சோர் வாக முடக்கினான் ஜெகதீஷ். குத்துப்பட்ட மாதிரி முகத்தில் சோர்வு. மறுமுனையில் ராஜ்குமார் என்னும் ஜம்புநாதனின் நண்பர் அப்படியே ஆடிப்போய்விட் டிருந்தார். ஜம்புநாதனுக்குள் ஏதோ தெரியக்கூடாதது தெரிந்துவிட்டது என்னும் உணர்வு.

''யார் ஜெகதீஷ் போன் பண்ணினது?''

''என்னை நீங்கன்னு நினைச்சு ராஜ்குமார் அங்கிள் எல்லாத்தையும் சொல்லிட்டாரு. பாவம்பா பாண்டி... என் தப்புக்கு அவனா அடகு? நோ. நான் இதுக்கு சம்மதிக்க மாட்டேன். குற்றவாளி நான்! நான்தான் தண்டனை அனுபவிக்கணும்.''— பேசிக்கொண்டே வாசல் பக்கம் ஓடினான். ஜம்புநாதன் தயாராய் நிறுத்தியிருந்த காரில் தாவி ஏறினான். அதிர்ச்சியில் ஜம்புநாதன் ஸ்தம் பிக்க வாயடைத்துப் போய்விட்டிருந்தாள் ஜீவா.

# 5

## காதல் என்பது மனதைச் சலவை செய்யும் ஒரு உணர்வு எந்திரம்!

பரபரப்பான அந்தக் கடைத்தெருவில் வழக்கம்போல் விட்டு வாசலில் சண்முகம். நேற்றுவரை சாதனாவுக்காகக் காதல் தவமிருந்தவன் இன்றும்!

ஜீவாவின் விட்டையே வெறித்துப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான். நடுநடுவே தெருவைக் கடக்கும் பாவாடை தாவணிகள், குளத்தில் விழும் கல்லைப்போல மனத்தில் விழுந்துகொண்டிருந்தார்கள்.

அவர்களின் பக்கவாட்டுத் தோற்றமும் முக்கோணப் பரிணாமத்தின் ஏற்ற இறக்கங்களும் அவனுக்குள் ரத்தச் சூட்டை உண்டுபண்ணிக் கொண்டிருந்தன.

உலகத்திலேயே இந்தியப் பெண்கள்தான் அழகு என்று தீர்மானித்தவன். அதிலும் அழகு தமிழ்ப் பெண்களே என்று மனதில் தீர்மானித்து அந்த அழகுக்கு அழகே அவர்கள் அணியும் பாவாடை தாவணிகள்தான் என்று துல்லியமாக நம்பினான்.

இரட்டை சடை, அதில் சாமி படத்துக்குப் போடுவது போல் மல்லிகைப்பூ! சின்ன ஸ்டிக்கர் பொட்டு. திருஷ்டிப் பொட்டு என்று குதூகலிப்பான முகம்.

சொர்க்கத்தை இரண்டு பந்தாக்கி அதை பிரேசியருக்குள் அடக்கி மேலே ரவிக்கையையும் போட்டு மூடி வைத்திருக்கும் அந்த மேடுகள்.



பால்கோவாவை குழம்பாய் தாம்பாளத்தில் கொட்டிய மாதிரி வயிறும் இடுப்பும் பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் இந்தப் பெண்கள் ஒவ்வொருத்தியோடும் ஒவ்வொரு நாள் படுத்து எழுந்திருக்க வேண்டிய துடிப்பில் மனதில் துடிப்பலைகள். இளமை தன்னை இப்படி நினைக்கத் தூண்டுவதாகத் தீர்மானித்தவன் அதில் தவறு இருப்பதுபோன்ற குறுகுறுப்பில் சற்று நெளிந்தான். கற்பு, ஒழுக்கம் என்றெல்லாம் கால காலமாய்ப் பேசிவரும் பேச்சால் வந்த அந்த சலனம் சில நிமிடம்கூட நீடிக்கவில்லை.

இயற்கைய பெண்ணும் ஒன்று. இயற்கையை ரசிக்கத் தடை விதிக்காத கலாச்சாரம் பெண்ணை ரசிக்க மட்டும் இவைகளை முன்வைப்பதில் சுயநலம் இருப்பதாக அவன் மூளை நம்பியது. இறுதியில் அனுபவிக்கத்தான் வாழ்க்கை என்கிற முடிவுக்கு அவன் வந்தபோது சாதனா முகம் அவனுக்குள் எழும்பியது. அவனுக்காக, அவள் காதலுக்காகக் காத்திருந்த நிமிடங்கள் அவனுக்குள் ஊர்வலித்தன.

உதட்டில் சட்டென்று ஒரு முணுமுணுப்பு.

''நல்லவேளை... என் காதலை நான் அழுத்தமாகத் தெரிவிக்கும் முன் இப்படியாகிவிட்டது. இல்லையென்றால் கழட்டிக்கொள்வது கஷ்டமாகியிருக்கும்''

அவன் அப்படி தனக்குள் பேசி முடித்த அந்த விநாடிகளில் வாசல் பக்கமாக ஜீவா தென்பட்டாள்.

கைவசம் டிபன் கேரியரை ஒரு வயர்க்கூடையில் அடக்கிக்கொண்டு அவள் தான் போகுமிடம் ஆஸ்பத்திரி என்பதை சொல்லாமல் சொன்னாள்.

அவளைப் பார்த்த மாத்திரத்தில் சண்முகத்திடம் இலேசான சலனம். இருந்தும் முகத்தில் அதைக் கூட்டி ஒரு ஓரமாகக் குவித்தபடி அவளை ஊன்றிப் பார்த்தான்.

'சாதனாவுக்கு நான் எதில் சளைத்தவள்'—என்பது போல் தெரிந்தாள். பார்த்துப் பார்த்து அலங்கரித்துக் கொண்டு வேலைக்குச் செல்லும் ஒரு பளிச்சென்ற அழகை இன்று அவளிடம் பார்க்க முடியாவிட்டாலும் அலங்காரம் இல்லாத ஒரு தனித்துவமான அழகைப் பார்க்க முடிந்தது.

'பேசாமல் இவளையே காதலித்திருக்கலாம்...'—என்று சண்முகம் ஒருகணம் யோசித்தான். ஜீவாவும் சண்முகத்தைப் பார்த்துவிட்டாள்.

'சாதனாவின் நிலையைத் தெரிந்துகொள்ளத்தான் வாசலில் காத்திருக்கிறானோ? நேற்று எதற்கு அறுத்துக் கொண்ட மாதிரி ஆஸ்பத்திரியிலிருந்து சென்றான்? சாதனாவிற்கு ஏற்பட்ட விபத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லையோ?— மனதில் ஏகமாய் கேள்விகளை பந்தடித்துக்கொண்டு அவனை சமீபித்தவளை அவன் இணக்கமான புன்னகையோடு பார்த்தான்.

''ஏன்? நேத்து ஹாஸ்பிடலை விட்டு சீக்கிரமா திரும்பிட்டீங்க... சாதனாவைக்கூட நீங்க பார்க்கலையே?— ஜீவா எடுத்த எடுப்பிலேயே விஷயத்துக்கு வந்துவிட்டாள். அவன் வழிசலாக சிரிக்கிறான்.

இந்த மாதிரி சீரியஸ் கேஸ்களை பார்த்தா எனக்கு மனசு தாங்காது. ரத்தத்தைப் பார்த்தாலே மயங்கிவிழற ஆள் நான்...''—எப்படியோ சமாளித்துவிட்டான்.

''நீங்க என்ன நான் சமாதானம் சொன்னாலும் அதை என்னால ஒத்துக்க முடியாது. நேத்து மட்டும் உங்களை சாதனா பார்த்திருந்தா எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பா தெரியுமா?''—ஜீவா சற்று பலமாகவும் காட்டமாகவும் பேசுவது சண்முகத்தின் வீட்டுக்குள்ளும் கேட்டிருக்க வேண்டும். ஒரு இருபது வயதுப் பெண்ணின் தலை வெளியே எட்டிப் பார்த்தது.



''அது வந்து என் சிஸ்டர் இந்து'' சண்முகம் ஜீவாவுக்கு அவளை நின்ற நிலையிலேயே காட்டிச் சொன்னான். அதற்குள் அவளாக அவர்களை நெருங்கி வந்தாள்.

''நீங்க நாலு வீடு தள்ளி இருக்கறவங்கதானே?'' கேட்டாள் அவள். ஜீவாவிடம் மந்தமான தலையசைப்பு தான் பதில்.

''எப்படிங்க இருக்கு அவங்களுக்கு? காலையே வெட்டி எடுத்திட்டதா அண்ணன் சொன்னிச்சு! பாவங்க அவங்க... அவங்களை நான் நிறைய தடவை பாத்துருக்கேன். சூப்பரா நடந்து வருவாங்க. அவங்களுக்கா இப்படி ஒரு முடிவு...''—நிஜமாலுமே அவள் வருத்தம் கொட்டினாள்.

''இந்து நீ போ உள்ள... இவங்க ஏற்கனவே ரொம்ப நொந்துபோய் இருக்காங்க...'' என்று சண்முகம் அவளை உள்ளே விரட்டினான். அவள் அரைமனதாக உள்ளே நுழைந்தாள்.

ஜீவாவின் பார்வை சண்முகத்தை ஊடுருவியது.

''இன்னிக்காவது உங்க சாதனாவை வந்து பார்ப்பீங்களா?''—அவள் கேட்ட கேள்வி முன் அவன் தலை தாழ்ந்துபோனது.

''என்னங்க இது என் சாதனா உங்க சாதனான்னு கிட்டு, அவ நம்ம சாதனா...'' என்று நைச்சியமாகத் திருத்தினான். அதைக் கேட்டு ஜீவா சற்று தெம்பாக நிமிர்ந்தாள்.

''உங்களுக்காக நான் கட்டாயம் அவங்களை வந்து பாக்கறேன். போதுமா?''—என்றான்.

''எனக்காக எதுக்கு நீங்க வந்து பாக்கணும். உங்களுக்காக, உங்க காதலுக்காக வந்து பாருங்க. இதுதான் நீங்க பார்க்க வேண்டிய நேரம். இப்ப பார்த்தாதான்

உங்க காதலுக்கும் மதிப்பு. சாதனாவுக்கும் தெம்பா இருக்கும்'' அதைக் கேட்ட சண்முகம் முகம் என்னவோ போல் ஆனது.

''நீங்க என்ன சொல்றீங்க?''—தெரியாதவன்போல் கேட்டான்.

''தமிழ்லதானே பேசினேன்?''—இது ஜீவா.

''வாஸ்தவம்தான். காதல்—தெம்பு—அது இதுன்னீங்களே அதைத்தான் கேக்கறேன்..'

''சாதனாபேர்ல உங்களுக்கு இருக்கிற காதலைச் சொன்னேன்.''

''சாதனாமேல எனக்குக் காதலா?''

''என்ன சண்முகம் உங்க தொனியே மாறுது?''

''யெஸ்... நான் எப்ப அவங்களைக் காதலிச்சேன்?''

''அப்ப லட்டர் கொடுத்தீங்களே?''

''அது அவங்களுக்கில்ல...''

''பின்ன யாருக்கு?''

''நீங்களே இப்படிக் கேட்டா நான் என்ன பண்ண?''

''வாட் டு யூ மீன் சண்முகம்?''

''நான் காதலிச்சது, காதலிக்கறது, காதலிக்கப் போறது எல்லாம் உங்களைத்தான் ஜீவா.''

—பேசிவிட்டு வெடுக்கென்று உள்ளே போய்விட்டான் சண்முகம். ஜீவாவுக்குத் தலையைச் சுழற்றியது.

'அடேய் துரோகி' என்று கத்தத் தோன்றியது.

காலடியில் பூமி நழுவுகின்ற மாதிரிப் பட்டது.

# 6

## காதல் என்பது இளைஞர்களின் இதய நோய்!

படுக்கையில் துவண்டுபோய்க் கிடந்த சாதனா அருகே கண்ணீரும் கம்பளையுமாகப் பார்வதி. அவளுக்கு நேர் எதிரில் அதற்குத் துளியும் சளையாத நிலையில் ஜம்புநாதன். சற்றுத் தள்ளி அவர் நண்பர் ராஜ்குமார். பக்கமாய் வேலைக்காரன் ஆப்பிள் ஆரஞ்சு குளுகோஸ் ஹார்லிக்ஸ் என்று அவர் வாங்கி வந்த பொருட்களை ஷெல்டர் ஒன்றில் அடுக்கிக்கொண்டிருந்தான்.

''அம்மா நீங்க துளியும் இனி கவலைப்படக்கூடாது— இவங்களுக்கு ஆகப்போற செலவு சகலமும் என்னைச் சேர்ந்தது.''— ஜம்புநாதன் மெல்ல இதழ் பிரிக்கிறார். பார்வதியிடம் பதிலில்லை.

''ஏதோ விதி இப்படி நடந்துபோச்சுன்னு நினைச்சுக்குங்க. இனிமே நான் பாத்துக்கறேன்.''

—சாதனா அவரை மெள்ள வெறிக்கிறாள். அவள் கண்களில் கண்ணீரின் அணிச் சேர்க்கை.

' இனிமே உங்க மக என் மக மாதிரி...'' —ஜம்புநாதன் சொன்ன அந்த வார்த்தையைப் பார்வதி இறுக்கமாகப் பிடித்துக்கொண்டாள்.

''நீங்க சொன்னாலும் சொல்லாவிட்டாலும் என் மக இனி உங்க வீட்டுப் பொண்ணுதான்''— என்றாள் இரு பொருள்பட... ஜம்புநாதனுக்கு அதன் பரிமாணம் புரியவில்லை ராஜ்குமாருக்கு மட்டும் ஏதோ இடறியது.

''டேய் ஜாக்கிரதையா பேசு... அவங்க பேசறத பார்த்தா எனக்கு வேற விதமா படுது...'' என்றார் காதோரமாக.

''வேற விதமான்னா?''

உடனேயே இருவரும் சற்று தனிமைப்பட்டார்கள். ராஜ்குமார் விளக்கம் தர ஆரம்பித்தார்.

''அந்தம்மா பேச்சுல ரெண்டு அர்த்தம் இருக்கு. ஏதோ ஆக்சிடெண்ட் ஆகிக் கால் போயிடிச்சு. அதுக்கு ஜெகதீஷ் காரணங்கறதால நீ பாவப்பட்டு இவங்களுக்கு நஷ்ட ஈடு தர முன் வந்துருக்கே... அது பணமா இருந்துட்டா சிக்கல் இல்லே. எத்தனை லட்சம் வேணும்னாலும் கொடுத்துக்கோ. அது உன் பிரியம். ஆனா மகள் மாதிரி பொண்ணு மாதிரின்னு உறவு கொண்டாட ஆரம்பிச்சுடாதே. அது ஆபத்துல போய் முடிஞ்சுடப் போவுது...''

''அந்தப் பொண்ணை நான் மகளாத்தான் நினைக்கறேன். இது எப்படி ஆபத்துல முடியும்?''

''ஸ்டுப்பிட்... அந்தப் பொண்ணு கல்யாணம் ஆகாத ஒரு கன்னிப் பொண்ணு. அவளுக்கு இப்படி ஆனது நிஜமாலுமே பெரிய துரதிர்ஷ்டம். இந்த நிலையில அவளை யார் கல்யாணம் பண்ணிக்க முன்வருவாங்க? அவளுக்கு நீதான் கல்யாணம் பண்ணி வைக்கணும்கற சிக்கல் வந்தா அதை எப்படிச் சமாளிப்பே? காசு பணத்தை சம்பாதிக்கலாம்டா... இந்த மாதிரி பொண்ணை கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்கற மாப்பிள்ளையை எப்படிடா சம்பாதிப்பே?''

ராஜ்குமார் கிளப்பிவிட்ட பூதம் ஜம்புநாதனை நன்றாகவே மிரட்டியது. அவர் அப்படியே குலைந்துதான் போனார்.

இப்படி இருவரும் தனியே பேசிக்கொள்வதை பார்வதி கவனிக்காமல் இல்லை. அப்படி தனியே பேசிக்கொள்வதில்



ஏதோ ஒரு ஆழ்ந்த சங்கதி இருக்கத்தான் வேண்டும் என்று நம்பியவள் அவர்களுக்காகக் காத்திருக்க ஜம்புநாதன் ஒரு வழியாக போலிச் சிரிப்போடு அவர்களை நெருங்கினார்.

''என்ன சார் ஏதோ ரகசியம் பேசின மாதிரி தெரியுதே?''— பார்வதி வந்த உடனேயே பிடித்துக் கொண்டுவிட்டாள்.

ஜம்புநாதன் அந்த நேரடிக் கேள்விமுன் இலேசாக நிலை குலைந்தார்.

''ரகசியம்லாம் ஒண்ணுமில்லைம்மா... சாதனாவுக்கு முழுசா குணமாக எவ்வளவு நாளாகும், எவ்வளவு செலவாகும்கறதைப்பத்தி பேசினோம்''— என்றார் சுதாரிப்பாக...

''ஏன் அதை என் எதிரிலேயே பேசலாமே!''

''என் ஃப்ரெண்ட் அதை விரும்பலை... அதான்!''

''இந்த விவகாரத்தைப் பொறுத்தவரை அவர் மூன்றாம் மனுஷர். அவர் விருப்பங்களுக்கெல்லாம் நீங்க வளையத் தேவையில்லை.''

பார்வதியின் தீர்க்கம் இரண்டில் ஒன்று பார்க்கும் வெறியில் இருந்தது.

நடுவே நர்சின் குறுக்கீடு!

''அம்மா, இவங்க ஒரு சீரியஸான பேஷண்ட். இங்கயே உக்காந்துக்கிட்டு நீங்க உங்க விவகாரங்களை பேசறது கொஞ்சம்கூட நல்லா இல்ல. இவங்களுக்கு நல்ல ரெஸ்ட் வேணும்.''

—மூவரும் அதைக் கேட்டு சற்று இறுக்கமாகி பின்னர் ஆஸ்பிடலின் காரிடார் பகுதிக்கு வந்தனர்.

''சார்...ஜீவா என்கிட்ட மன்றாடிக் கேட்டுக்கிட்டதாலேதான் நான் உங்ககிட்ட முகம் கொடுத்து பேசிக்கிட்டிருக்கேன். இல்லைன்னா என் மகனுக்கு உங்க மகள்

இழைச்சிருக்கிற இந்தக் கொடுமைக்கு நான் ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட்டுன்னு ஒரு ரவுண்டு வர்றதாதான் இருந்தேன். என்னோட பெருந்தன்மையான போக்கை பலவீனமா நினைச்சுடாதீங்க. சாதனா எனக்கிருக்கிற ஒரே பொண்ணு. அவளோட சுபிட்சமான எதிர்காலம் தான் என் ஒரே லட்சியம். அதை நிச்சயம் நீங்க அவளுக்கு உருவாக்கித் தருவீங்கன்னு ஜீவா சொன்னா... அந்த நம்பிக்கையைக் கெடுத்துடாதீங்க, பணத்தால எங்களை சரிக்கட்ட நினைச்சா நான் உங்களை சும்மா விட மாட்டேன்..."

பார்வதி பேசப்பேச ஜம்புநாதனுக்கு தான் பெரிதாக ஒரு குழியில் விழுந்துவிட்டதுபோல் பட்டது. அப்போது பார்த்து அந்த காரிடாரின் என்டிரியில் ஜெகதீஷ் தெரிந்தான்.

முந்தையதினம் தன் பங்களாவை விட்டு ஜம்புநாதனின் காரில் கிளம்பியவன் இப்பொழுதுதான் திரும்புகிறான்.

தன் தப்புக்காக பாண்டி தன்னை பணயம் வைத்து கைதியாகி விட்டதை ஜீரணிக்க முடியாமல் நேராக போலீஸ் ஸ்டேஷனுக்கே போனவன், தான்தான் குற்றவாளி என்று சொல்லி பாண்டியை வெளியே விடச் சொல்லி போலீஸ் ஸ்டேஷனையே வியக்க வைத்து விட்டான்.

அதன்பிறகு ஜீவா மூலமாக பார்வதியை சமாதானப் படுத்தி சமரசமாகச் செல்லும் ஏற்பாடு என்று சகலமும் மேற்கொள்ளப்பட்டதில்தான் இறுதிக் கட்டமாக பாண்டியையும், ஜெகதீஷையும் அழைத்துக் கொண்டு சப்இன்ஸ்பெக்டர் வாசு நேராக ஆஸ்பத்திரிக்கு வரவேண்டியதாகி விட்டது.

"இந்தக் கேஸ்ல இது ஒரு எதிர்பாராத டர்ன்."

—வாசுதான் பேச்சைத் துவக்கினார்.



"பணத்தால எதையும் சாதிக்கலாம்னா நான் எப்பவோ இறந்துபோன என் மனைவி மக்களை வாங்கியிருப்பேனே சார். எப்ப பண்ணின பாவமோ நான் இப்ப அவங்களை பலி கொடுத்துட்டு அவங்க நினைவை மறக்க முடியாம தினம் செத்துக்கிட்டு இருக்கேன். இதுல மேலும் மேலும் பாவம் பண்ணி சாதனா, பாண்டிங்கற இவங்களை எல்லாம் சங்கடப்படுத்த நான் விரும்பலை."

ஜெகதீஷின் அந்தப் பேச்சு பார்வதிக்குக்கூட மிகவும் பிடித்திருந்தது.

இத்தனை நல்ல மனிதர் குடித்ததால்தானே இவ்வளவு வினைகளும்...? அந்தப் பழக்கத்தை விட்டுத் தொலைத்தால் என்ன? இந்தக் கேள்வியை சப்இன்ஸ்பெக்டர் வாசு கேட்காமல் இல்லை.

"போதைக்காக குடிக்கலை சார். பல நினைவுகளை மறக்கத்தான் குடிக்கிறேன்"—என்று ஜெகதீஷ் சொன்னபோது அவரால் எதுவுமே பேச முடியவில்லை.

"இந்தக் கேஸை இவங்களைப் பொறுத்தவரை முடிச்சுக்கலாம். ஆனா பல கடைகள் உங்க காரால நாசம் ஆகியிருக்கு. இதுனால பப்ளிக் ரொம்ப பாதிக்கப்பட்டிருக்காங்க. கோர்ட்ல இதுக்கு நிச்சயம் அபராதம் விதிப்பாங்க. மேபி சில மாசம் ஜெயில்லகூடப் போடலாம். இப்ப உங்களை ஜாமீன்லதான் விட முடியும். மிஸ்டர் ராஜ்குமார் முன்னையே ஜாமீன்ல விட வக்கீலை வெச்சு எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிட்டதால உங்களை நாங்க வெளியே விடறோம். அதேசமயம் சாதனா சார்புல யாராவது எங்க விவகாரத்தை நாங்களே தீர்த்துக்கறோம்னு எழுதிக் கொடுக்கணும்..." —வாசு நடைமுறைகளைச் சொல்லிக்கொண்டே போனார்.

காரிடாரில் புதிதாக ஒரு தலை இப்பொழுது தெரிந்தது. ஜீவா! ஜம்புநாதன் அவளை மகிழ்ச்சி பொங்கப் பார்த்தார்.

''இந்தப் பெண் மட்டும் இல்லைன்னா இந்தக் கேஸ்ல நாங்க படாதபாடு பட்டிருப்போம்...''—என்று மனம் விட்டு சிலாகித்தார். ஜெகதீஷ் அவளை ஊன்றிப் பார்த்தான். களையான முகம். பவித்திரமான லட்சணம். தன் ஷேவ் செய்யா கறுப்புத் தாடையை வருடியபடி அவளுக்கு மனதிலேயே நன்றி சொன்னான். ஜீவா அவர்களைச் சமீபித்து இலேசாகச் சிரித்தாள்.

மனதில் சண்முகம் சொன்ன 'ஐ லவ் யூ' பிராண்டிக்கொண்டே இருந்தது.

''வாம்மா...சரியான நேரத்துக்கு வந்தே. இன்ஸ்பெக்டருக்கு நாம சமரசமா போய்க்கறோம்கற விஷயத்தை எழுத்து மூலமா தெரிவிக்கணுமாம். நீயே ரைட் அப்பை பிரிப்பேர் பண்ணி பார்வதியம்மாகிட்ட கையெழுத்து வாங்கிக் கொடு''—என்றார் ஜம்புநாதன்.

பார்வதி ஜீவாவை தனியாக அழைத்தாள். பேசினாள்,

''ஜீவா...இது என்ன கையெழுத்து கால் எழுத்துன்னுகிட்டு. இவங்களை முழுசா நம்பலாமா?''

''நம்புங்கம்மா... பாவம்மா ஜெகதீஷ்! ஏதோ குடிபோதையில இப்படிப் பண்ணிட்டார். இப்ப அதுக்காக ரொம்ப ஃபீல் பண்றாரு. அவர் ஒரு ஜெண்டில்மேன்! அவருக்காக பாண்டி தன் குற்றத்தை ஒத்துக்கிட்டும் அதுக்கு சம்மதிக்காம போலீஸ்ல போய் சரண்டர் ஆனாரே, யோசிச்சு பாருங்க.''

''அந்த பிள்ளை நல்ல பிள்ளையாதான் தெரியுது. ஆனா அந்தப் பெரிய மனுஷரும் அவர் சினேகிதரும்தான் கிசுகிசுன்னு ஏதோ ரகசியம் பேசிக்கிறாங்க. அவங்களை என்னால நம்பமுடியலை.''

''அவங்க என்ன பேசினா நமக்கு என்னம்மா... சாதனாவுக்காக அமெரிக்காவுக்கு ஒரு கோடி அனுப்பி காலை மீட்டுத் தரப்போற சக்தி அவங்களுக்கு உண்டு... அதை நிச்சயம் அவங்க செய்வாங்க...''



''ஒருக்கால் கால் திரும்பலைன்னா அவ எதிர்காலம்?''

''இப்பவே சாதனாபேர்ல பத்து லட்ச ரூபாயை போடச் சொல்லட்டுமா?''

''பணம் வந்தா அவளுக்கு வாழ்க்கை வந்துடுமா? அவ கழுத்துல தாலி ஏறணும்... அவ புருஷனோட பூவும் பொட்டுமா வாழணும். அதுதான் எனக்கு பிரதானம்.''

''அம்மா, எல்லாம் நல்லபடியா நடக்கும் இவங்களோட மோதி கோர்ட் வக்கீல்னு போனா நமக்கு நாள்தான் விரயமாகும். பின்னால ஒரு தொகையை நஷ்டஈடா தருவாங்க. போராடி அதை வாங்கி அப்ப அனுபவிக்கறதைவிட இப்பவே சமாதானமா போய் முடிஞ்ச அளவு சாதிச்சுப்போம்...''

''நீ என்ன சொன்னாலும் சரி... நான் அந்த மனுஷர்கிட்ட சில கேள்வி கேட்டு சமாதானமா பதிலை வாங்காம சமரசத்துல கையெழுத்துப் போடமாட்டேன்.''

'உங்க இஷ்டம். ஆனா மோதி காரியத்தைக் கெடுத்துக்காதீங்க. நம்ம நிலை முள்மேல விழுந்த சேலை மாதிரி. கையும் காயம் படக்கூடாது. சேலையும் கிழியக்கூடாது. ஜாக்ரதை.''

ஜீவா பார்வதியின் மனோநிலையை ஜம்புநாதனிடம் கூறி, இருவரையும் ஒரு உடன்பாட்டிற்கு வருவதற்காக தனி அறை ஒன்றில் விட்டு கதவைச் சாத்தினாள்.

வெளியே ஜெகதீஷ் ஜீவாவின் இந்தச் செயலையெல்லாம் உற்றுப் பார்த்துக்கொண்டேயிருந்தான். மென்ன அவளை நெருங்கி 'மேடம்...'—என்றான்.

அவள் சற்று வெட்கத்தோடு அவனைப் பார்த்தாள்.

''என் கவலையை மறக்கப்போய் நான் குடிக்க அது இத்தனைபேரை கவலைப்படுத்தும்னு எனக்கு முன்னமே தெரியாம போயிடிச்சு. ஐ ஆம் வெரி சாரி...''

''உங்க தப்பை நீங்க உணர்ந்ததே பெரிசு...''

''ஒரு சின்னத் தப்புகூட செய்யாம வாழணும்கறது என் எண்ணம். அதெல்லாம் என் மனைவி மக்கள் இருந்த வரை சாத்தியப்பட்டது. இப்ப முடியலை...''—சொல்லும் போது கண் கலங்கினான்.

சப்இன்ஸ்பெக்டரும் ராஜ்குமாரும் எதையோ பேசிக் கொண்டிருப்பது அவனுக்கு சற்று வசதியாக இருந்தது. உள்ளே படுக்கையில் சாதனா தனக்குள் நுழைந்துகொண்டிருக்கும் சலைன் வாட்டரையே வெறித்துக்கொண்டிருந்தாள்.

வெளியே ஜீவா ஜெகதீஷிடம் ஆத்மார்த்தம். ''குடிச்சாதான் உங்க கவலையை மறக்க முடியும்கறதை என்னால ஒப்புக்க முடியாது. கவலையை மறக்க எவ்வளவோ வழிகள்...''—ஜீவா அவனிடம் சொல்லிக்கொண்டிருந்தகள்.

''ஒன்னு சொல்லுங்களேன்...''

''கோவிலுக்குப் போகலாம். சினிமாவுக்குப் போகலாம், ஃபிரெண்ட்ஸ்களோட பிக்னிக் போய் வரலாம். ஏதாவது ஒரு விளையாட்டுல தீவிரமா கான்சன்ட்ரேட் பண்ணலாம்...''

''உம் அப்புறம்?''

'நான் என்ன கதையா சொல்றேன். அப்புறம்கறீங்க.'

''யெஸ். நீங்க சொல்றதெல்லாம் கதைதான். எனக்கு சுத்தமான கதைதான் இதெல்லாம். நான் மதுவோட கோவிலுக்குப் போனவன். ஐ மீன் மதுபாலாங்கற என் மனைவியோட...! ஸோ, அங்க போனா அவ ஞாபகம் தான் வருது! சினிமாவுக்குப் போனாலும் சரி பிக்னிக் போனாலும், எங்க போனாலும் அவ ஞாபகம்தான்... என்னால முடியலை ஜீவா!

அவங்க நினைவு மறக்கக்கூடிய அளவுல இல்ல...



அது கல்வெட்டு! நெருடிக்கிட்டேயிருக்கு. குடிபோதையிலகூட நான் மது மதுன்னுதான் புலம்பறேன். பாக்கறவங்க குடிக்கற மதுவுக்காகன்னு சொல்லுவாங்க. அதுக்குக் காரணமான என் மதுபாலாவுக்காகங்கறது அவங்களுக்குத் தெரியாது. ஈவென் நான் மதுவை குடிக்கக் காரணமே என் மதுவோட பேரை அது கொண்டிருக்கறதாலதான்...''— சொல்லிவிட்டு ஆஸ்பத்திரி என்கிற நினைப்பே இல்லாமல் பெரிதாக அழுதான் ஜெகதீஷ்.

''உங்க பாசத்தை நினைச்சா பிரமிப்பா இருக்கு மிஸ்டர் ஜெகதீஷ். பாவம் உங்க மதுபாலா... உங்களோட வாழ அவங்களுக்குக் கொடுத்து வைக்கலை...''

''நோ நோ... எனக்குத்தான் கொடுத்து வைக்கலை. அவ நிம்மதியா செத்திருந்தாகூட நான் இவ்வளவு கவலைப்பட்டிருக்க மாட்டேன். தலை வேற உடம்பு வேறயா துண்டாகி நசுங்கி... ஓ காட்!''—சொல்லிவிட்டு முகத்தை கைகளால் மூடிக்கொண்டு பெரிதாக விசும்பினான்.

ஜீவாவுக்குப் பதறியது.

''ஜெகதீஷ் அழாதீங்க. டேக் இட் ஈஸி...''—அவனை வித்தியாசம் பார்க்காமல் தொட்டு கண்ணீரைத் துடைத்து விட்டபிறகுதான் தான் அத்துமீறிவிட்டது தெரிய வந்தது. கூச்சத்தோடு விலகிக்கொண்டாள்.

''உங்ககூட பேச எனக்குப் பிடிச்சிருக்கு. உங்க தோழிக்காக நீங்க கஷ்டப்பட்டறதைப் பார்த்தா உங்க கேரக்டர் பர்ல எனக்கு மரியாதை அதிகமாகுது. உங்க தோழிக்கு மட்டும் நாங்க கடன் படலை, உங்களுக்கும் தான்...''

ஜெகதீஷ் அவள் கைகளை உரிமையோடு பிடித்துக் கொண்டு சொன்னான். அவளால் விலக்கிவிட முடிய

வில்லை. ராஜ்குமார் எதார்த்தமாக இதைக் கவனித்தார். சப் இன்ஸ்பெக்டர் வாசுவிடம்கூட ஜெகதீஷ் பற்றித் தான் பேசிக்கொண்டிருந்தார்.

''ஜெகதீஷை இன்னொரு கல்யாணம்தான் ஓரளவு மனுஷனாக்கும். ஆனா கல்யாணம்னாலே வீட்டைவிட்டு வெளியே ஓடிட்டான். அன்னிக்கு அப்படி வெளிய போய் குடிச்சதுனாலதான் இவ்வளவு கூத்தே! ஆனா எனக்கு இப்ப கொஞ்சம் நம்பிக்கை வந்துருக்கு, ஜெகதீஷுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வைக்க முடியும்னு...'' வாசுகூட ஜெகதீஷையும் ஜீவாவையும் பார்த்துவிட்டு அர்த்தபுஷ்டியுடன் அதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டார்.

உள்ளே அதுவரையில் தனியாகப் பேசிக்கொண் டிருந்த ஜம்புநாதனும், பார்வதியும் ஒருவிதமான தெளி வோடு வெளியே வந்தார்கள்.

அவர்கள் முகமலர்ச்சியே அவர்கள் சமரசத்துக்கு வந்து விட்டதைச் சொல்லாமல் சொன்னது.

ஜீவா அதைப்பார்த்து மெலிதாகச் சிரித்தபடி சாதனா வைப் பார்க்க வார்டுக்குள் நுழைந்தாள்.

''எப்படி இருக்கு?''— கேள்வியோடு தலையை வருடி விட்டாள்.

''ஆமாம்... அவர் ஏண்டி வரலை?''—ஈனசுரத்தில் சாதனா கேட்ட கேள்விமுன் ஜீவாவின் முகம் சட்டென்று நிமிர்ந்து கேட்டது.

''எவருடி?''

''சண்முகம்!''

—ஜீவா திணறத் தொடங்கினாள்.

16958
22/3/99

## காதல் என்பது
## இன்பம் போன்ற துன்பம்

''ஜீவா, கேட்டேன்லே...''—சாதனாவின் கேள்வி ஜீவாவைக் கல்வி வலிக்க விட்டது.

''இந்த ஆஸ்பத்திரியில இப்போதைய என் நிலையில அவர் எனக்கு எழுதின லெட்டர்தான் எனக்கு பெரிய ஆறுதலே...''—சாதனா பேசிக்கொண்டே ஜாக்கெட்டுக் குள் கையை விட்டு மார்பின்மேல் மடங்கிக் கிடந்த கடிதத்தை வெளியே எடுத்தாள்.

ஜீவா எதிரிலேயே ஒருமுறை படித்துப் பார்த்தாள்.

படித்துவிட்டு ஜீவா பக்கம் திரும்பினாள். அவள் பார்வையோ வெளியே நட்பாகப் பேசிக்கொண்டிருக்கும் பார்வதியின் மேலும் ஜம்புநாதன்மேலுமே இருந்தது.

''என்ன ஜீவா பேச்சக் காணோம். அவரப்பத்திக் கேட்டேன்ல...'' சாதனாவின் இடிப்பைத் தொடர்ந்து மெள்ள அவள் பக்கம் திரும்பினாள். இலேசாகக் கண்கள் கலங்கியிருந்தன.

''ஏண்டி கண் கலங்குறே?''

''உன் நிலையை நினைச்சுத்தான்.''

''நீ என்ன சொல்றே?''—அப்பொழுது டாக்டர் குறுக் கிட்டார். சோதித்தார்.

ஹார்ட் பீட்டில் சற்று அதிகப்படியான எண்ணிக்கை. ''சந்தோஷம், துக்கம் எதுவுமே இப்ப உங்களுக்கு அதிகம்

கூடாது. ஒவர் பிளீடிங்கை அட்ஜஸ்ட் பண்ண நிறைய ரத்தம் கொடுத்துருக்கோம். அது செட் ஆகனும். அதிர்ச்சிகளைப் பரிசோதிக்கற நேரமில்ல இது.

இன்னொரு விஷயம். அமெரிக்கா போனா உங்களுக்குக் கால் திரும்பக் கிடைக்கலாம். ஐ திங் மிஸ்டர் ஜம்புநாதன் அதுக்கு அரேஞ்ஜ் பண்ணப்போறதா சொன்னார்.''—பேசிவிட்டு டாக்டர் போய்விட்டார்.

''பாத்தியாடி நான் அமெரிக்கா போகப் போறேனாம். ஆமா, என்னைப் பாக்காம சண்முகத்தால இருக்க முடியுமா?''

சாதனாவின் மனது சண்முகத்தை விடாமல் பற்றிக் கொண்டு குதூகலிப்பதை ஜீவாவால் உணர முடிந்தது.

'இவளிடம் போய் அவன் துரோகத்தைச் சொன்னால் தாங்குவாளா? அந்தக் கடிதம் உனக்கு இல்லை எனக்கு என்று சொன்னால் இவள் உடம்பில் உயிர் தங்குமா? இப்படித் துவண்டுபோய் ஒரு நோயாளியாக இருக்கும் இந்த நிலையில் சொல்லக்கூடிய விஷயங்களா இவைகள்?''

அவள் மனதில் கேள்விமேல் கேள்விகள். ''ஜீவா... எனக்கு இப்படி ஆயிடிச்சுன்னு சண்முகத்துக்குத் தெரியுமா? கால் போனவள்னு என்னை கைவிட்ருவாரா?''

சாதனாவின் அந்தக் குடைச்சலை ஜீவாவால் தாங்க முடியவில்லை.

''ஏய் சாதனா... என்னடி இது தொணதொணன்னு... முதல்ல உன் காலைப்பற்றி கவலைப்படு. காதலைப்பற்றி அப்புறம் கவலைப்படலாம்...''—என்றாள் சற்று விறைப்பாக.

''காதல்தாண்டி இப்போ என்னோட காலே.''



—சாதனாவின் பதிலில் ஜீவாவிடம் சிரிப்பு

''என்னடி சொல்றே?''

''எனக்காக ஒருத்தர் இருக்கற தெம்புலதான் இந்தக் கொடுமையை நான் ஜீரணிச்சிருக்கேன். இல்லேன்னா நான் இப்ப உயிரோட இருப்பேன்னு நம்பறியா?''

—சாதனாவின் அந்தக் கேள்வி ஜீவாவைப் பிசைந்தது. தெய்வமே இது என்ன சோதனை? அந்த சண்டாளன் என்னைக் காதலி என்கிறான். இவளோ அவனை தன் காதலன் என்கிறாள். இப்படி முறை தவறி விளையாடுவதில் இந்தக் காதலுக்குத்தான் எத்தனை பிரியம்?

''ஏய் சாதனா...ஏண்டி இப்படி அலட்டிக்கிறே? பெரிய லைலா மஜ்னு மாதிரி பேசிறியே... ஒரே ஒரு சந்திப்புகூட உங்களுக்குள்ள ஒழுங்கா நடக்கலை. அதுக்குள்ள உனக்குள்ள இவ்வளவு பெரிய நினைப்பா?''

சாதாரணமாகக் கேட்பதுபோல் அந்தப் பெரிய குத்தலான கேள்வியைக் கேட்டுவிட்டாள் ஜீவா.

''நீ கேட்கிறதும் சரிதான். அவர்கூட நான் ஒரு வார்த்தை பேசினதுகூட இல்ல. ஆனா அவரை என்னால அந்நியமா, வேறு மனுஷனா நினைக்க முடியலை. பல வருஷம் பழகினமாதிரி மனசுக்குப் படுது. இதுதான் காதலோட சக்தியான்னு எனக்குத் தெரியாது. ஆனா அவரை மறந்துட்டு என்னால வாழ முடியாது. நிச்சயம் சண்முகமும் அதே நிலையில்தான் இருப்பார்னு நினைக்கிறேன்.''

சாதனாவின் வெகுளித்தனமான பேச்சைக் கேட்டு ஜீவாவுக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. இப்போதைக்கு இவளிடம் சண்முகத்தின் துரோகம் பற்றி பிரஸ்தாபிப்பது சரியல்ல என்று மட்டும் தீர்மானித்தவள் புதிதாக ஒரு முடிவிற்கு வந்தாள்.

''சரிடி சாதனா...உன் சண்முகத்தை உன்கிட்ட கூட்டிக்கிட்டு வர்றது என் பொறுப்பு'' என்று அவள் சொன்னபோது ஜெகதீஷின் நிழல் அவர்கள்மேல் விழுந்தது.

''சாரி...அப்புறமா வரட்டுமா?''

''நோ நோ... நீங்க வாங்க...''—ஜீவா எழுந்திருந்து அவனை வரவேற்றாள். ஜெகதீஷ் முதல் முறையாக சாதனாவை ஊன்றிப் பார்த்தான். கண் கலங்க ''சாரிங்க, என்னால உங்களுக்கு நேர்ந்த கொடுமையை நினைக்கவே முடியலீங்க...'' என்றான். சாதனா அவனையே வெறித்தாள்.

''நீ இப்படி சாதாரணமாக அழுவதெல்லாம் எனக்குப் போதாது'' என்று நினைப்பதுபோல் வெறித்தாள்.

''விதிக்கு யார் என்ன பண்ண முடியும்?''—ஜீவாவிடம் இருந்து வந்தது கருத்து. சாதனா அவளை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

''சாதனா, இவர் ஜெகதீஷ்! நீ இப்படி ஆகக் காரணம் இவர் தான்னாலும் இவர் ஒரு ஜென்டில்மேன்...''

ஜீவாவின் அறிமுகம் சாதனாவுக்குள் வேறுவிதமான எண்ணங்களை உண்டுபண்ணியது. ஜீவா ஜெகதீஷிடம் மிக மரியாதை வைத்திருப்பதை அவளால் உணர முடிந்தது.

''ஆமாம்மா... தம்பி ரொம்ப நல்ல மனுஷன். இப்படி ஒரு பிள்ளைய பாக்கக் கொடுத்து வெச்சிருக்கணும்...''—என்பதுபோல் பார்வதியும் அங்கே நுழைந்தாள். சாதனாவுக்குள் ஆச்சரியமான ஆச்சரியம்.

''ஒரு குற்றவாளியை இவர்களென்ன போட்டி போட்டுக்கொண்டு புகழ்கிறார்கள்?''— அவள் அவனை அப்பொழுதும் வெறுப்பாகத்தான் பார்த்தாள்.



''நீங்க நிக்கிறீங்களே... உக்காருங்க''— பார்வதி பக்கத்து நாற்காலியை இழுத்துப் போட்டாள். ஜெகதீஷ் கூசினான்.

''உங்களோட எந்த பாராட்டுக்கும் நான் தகுதியில்லாதவன். ஒரு குற்றவாளி! சாதனா எழுந்து நடமாடறதைப் பார்க்கற வரை எனக்கு நிம்மதி இல்லை. என் குடியால இவங்களுக்கு இப்படி ஆனதை நினைச்சா அந்த குடி மேல தான் எனக்கு மொத வெறுப்பே வருது. இனி என் வாழ்க்கையில குடியைத் தொடமாட்டேன்'' என்றான் உறுதியாக.

''சபாஷ். அதுதான் எனக்கு வேணும் உங்க கவலையை நீங்க மறக்க எவ்வளவோ வழிகள். இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்டா எல்லாம் தானா சரியாயிடும்.''

—பார்வதி அவனை அர்த்தச் செறிவுடன் ஊக்கப் படுத்தினாள்.

''இன்னொரு கல்யாணமா? எனக்கா? மதுபாலா போல ஒரு பெண்ணை நான் பாக்க முடியுமா என்ன?''

''ஏன் முடியாது... பாக்கத்தானே போறீங்க...''—பார்வதியின் அர்த்தபுஷ்டியுள்ள பேச்சுக்கு வெளியே அர்த்தம் விளங்கிக்கொண்டிருந்தது.

சப்இன்ஸ்பெக்டர் வாசு சமரச திட்டத்தை ஒப்புக் கொண்டு கிளம்பிவிட ராஜ்குமார் ஜம்புநாதனை இறுகப் பிடித்துக்கொண்டார்.

''டேய் சமரசத்துல அவங்க கையெழுத்து போட்டது இருக்கட்டும். உள்ள போய் ரகசியம் பேசினியே என்னடா அது?''

''சொல்றேன். அந்தப் பார்வதியம்மா எமகாதகப் பெண்மணிப்பா...''

''விஷயம் என்ன அதைச் சொல்லு. இடக்குமடக்கா அவங்க எதையாவது கேட்க, நீ ஒத்துக்கிட்டயா?''

''கொஞ்சம் இடக்குமடக்கா தான் கேட்டாங்க.''

''என்ன, உன் சொத்துல பாதியைக் கேட்டாங்களா?''

''இல்லை, என்னில் பாதிய கேட்டாங்க...''

''உன்னில் பாதின்னா... என்னடா பினாத்தறே?''

''ஜெகதீஷையே சாதனாவுக்குக் கேட்டாங்கடா!''

''மை காட். என்னடா இது கொடுமை...''

'அவங்க கோணத்துல இது சரிதாண்டா. என் பொண்ணுக்கு வாழ்க்கைதான் முக்கியம், பணம் இல்லேங் கன்னு அவங்க சொல்றதை நான் எப்படி மறுக்க முடியும்.''

''அதுக்காக... ஜெகதீஷையே ஒரு நொண்டி தலைலக் கட்டறதா?''

''இல்லேன்னா அவனை ஜெயில்லதானே கட்டிப் போடுவாங்க. அதுக்கு இது தேவலைடா...''

''உளறாதே. இட் ஈஸ் டூ மச். நானா இருந்தா உனக்குத் தெரிஞ்சத பார்... கோர்ட்ல பேசிக்கலாம்னு சொல்வேன்.''

''அதனாலதான் உனக்குப் பசங்களையே கொடுக்கலப் போல இருக்கு ஆண்டவன்.''

''என்னடா சொல்றே...''

''ஜெகதீஷ் நிலைய நினைச்சுப் பாருடா. அவனும் ஒரு மனுஷனா நடமாட வேண்டாமா? அவனோட பொல்லாத நேரம் மனைவி மக்கள் எல்லாரையும் வாயில போட்டுக்கிட்டான்னு எல்லாரும் பேசறாங்கடா. இப்ப இவன் இருக்கற நிலையில சாதனாமாதிரி ஒரு பெண் அவனுக்குக் கிடைக்கிறதும் அபூர்வம்தான். எனக்கு நம்பிக்கை இருக்கு... சாதனாவுக்கு நிச்சயமா நான் காலைக் கொடுத்துடுவேன். அப்புறம் என்ன, ஜெகதீஷ் வாழ்க்கையில ஒரு புது வசந்தம் வந்தமாதிரிதானே?''



''சரியான ஏட்டுச் சுரைக்காடா நீ. ஜீனின்னு எழுதி நக்கினா இனிக்காதுடா. அவ்வளவும் செயல்பூர்வமான விஷயங்கள். பர்ஃபெக்டா நடக்கணும். இதுக்கு ஜெகதீஷ் சம்மதிக்கறதும் ரொம்ப முக்கியம்...''

''என் பிள்ளை நிச்சயம் சம்மதிப்பான்.''— அவர்கள் இருவரும் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது ஜீவாவும், ஜெகதீஷும் அங்கு வந்தனர்.

ஜீவா சந்தோஷமாக ஜம்புநாதனிடம் சொன்னாள். ''சார், இனி உங்க பிள்ளை குடிக்கமாட்டார்...''

''நிஜமாவா?''— ஸ்பெக்ஸை மீறி விரிந்தது அவரது விழிகள்.

''ஆமாம்பா... சாதனாவைப் பார்த்தபிறகும் நான் குடிக்கப்போறதில்லை. மீறி எனக்கு மது நினைப்பு வந்தா இங்க வந்துடுவேன்.''

''வெரிகுட்...'' ஜம்புநாதன் உற்சாகமாய் தட்டிக் கொடுத்தார். பார்வதி கண்ணை மூடி தெய்வத்தை நினைக்க, சாதனாவின் நினைப்பிலோ சண்முகம்தான் இருந்தான்.

''அப்பா, நான் இவங்களை வீட்டுல ட்ராப் பண்ணிட்டு வந்துட்றேன். இவங்ககூட பேசும்போது எனக்குக் கவலை தெரியலை...''— என்று ஜீவாவை சுட்டிக் காட்டி சொன்னான் ஜெகதீஷ்.

''ஓ.கே... கோ அஹெட்!''

ஜம்புநாதனின் அந்த பர்மிஷனைத் தொடர்ந்து இருவரும் கிளம்பினார்கள். காரை நெருங்கினார்கள்.

''திரும்பவும் நீங்க கார் ஓட்டப் போறீங்களா?''— பயந்தாள் ஜீவா.

''அதான் நீங்க பக்கத்துல இருக்கீங்களே. நான் ஒரு தப்பும் பண்ணமாட்டேன்''— என்றபடி காரை ஸ்டார்ட் செய்தான்.

''அப்ப வேற யாராவது இருந்தா தப்பு பண்ணுவீங்களா?''— ஏறிக்கொண்டே கேட்டாள்.

''தெரியாது.''

''சாமர்த்தியமான பதில்...''

— கார் வழுக்கத் தொடங்கியது. ''நான் சொன்னது சாமர்த்தியமான பதில் இல்ல ஜீவா! சத்தியமான பதில்!''

ஜீவா அவன் பக்கம் திரும்பினாள்.

''நீங்க என் வாழ்க்கையில குறுக்கிடலைன்னா எனக்கு என் குற்றமே தெரிய வந்திருக்காது. பாண்டி குற்றவாளியா ஜெயிலுக்குப் போயிருப்பான். நான் குடிகாரனா தொடர்ந்துகிட்டே இருப்பேன். உங்களாலதான் என் வாழ்க்கை திசை திரும்பியது. நான் சாதனாவைப் பார்த்தது உங்களாலதானே? என் குடிப்பழக்கம் அவங்களைப் பார்த்த மாத்திரத்துல என்னைப் பார்த்து கேலி செய்து என்னைவிட்டு ஒதுங்கக் காரணம் நீங்கதானே?''

—அவன் கேட்கக் கேட்க அவள் ஆச்சரிய நதியின் ஆழத்தில் மூழ்கிக்கொண்டே போனாள். 'ஒரு கோபத்தில் நான் மேற்கொண்ட செயலால் இத்தனை நல்ல விளைவுகளா?'

கண்ணில் கேள்வியைத் தேக்கி அவனைப் பார்த்தாள். சட்டென்று சண்முகமும் ஞாபகத்தில் வந்தான். கணத்தில் நிறம் மாறி காதலையே மாற்றிக்கொண்ட அவன் எங்கே? எப்பொழுதோ இறந்தவனுக்காக இன்னமும் தாடியைக் கூட வழிக்காத இவர் எங்கே?

உலகத்தில்தான் எத்தனை வித விதமான மனிதர்கள். அவளிடம் பெருமூச்சு. அந்தப் பெருமூச்சில் மேலாடை நழுவியது. எதார்த்தமாகத் தலையைத் திருப்பியவன் அதைப் பார்த்து சற்று வியர்த்தான். காரின் சீரான வேகத்தை அவன் உணர்வின் வேகம் மீறியது. மதுபாலாவோடு முற்றுப்புள்ளியிட்டுக் கொண்டுவிட்ட காமம் மெல்ல சுமாவாக உருவாகத் தொடங்கியது. அதேசமயம் புத்தியில் எச்சரிக்கை.



''ஜீவா, ப்ளீஸ் உங்க மேலாடையை கரெக்ட் பண்ணிக்குங்க...''— என்றான் தொண்டை வரள. அவள் வெடுக்கென்று சுதாரித்து சரி செய்துகொண்டாள். அவளுக்குக் கூசியது. 'சாரி...' என்றாள் மெல்லிய குரலில். 'ஆமா உங்க வயசு?''— ஜெகதீஷ் தொடர்ந்தான்.

''இருபத்திநாலு...''

''எனக்கு முப்பது.''

''ஓஹோ...''

''ஆமா எப்ப உங்களுக்குக் கல்யாணம்?''

''எனக்கிருக்கட்டும். உங்களுக்குத்தான் கல்யாணம் அவசியம்னு எனக்குப் படுது. இல்லேன்னா மனசோட வெறுமையே உங்களைக் கொன்னுடும். இன்னொருத்தி வந்து ஒரு குழந்தை பிறந்தா உங்க வாழ்க்கை வளமா திசை திரும்பும்னு நான் நம்பறேன்...''

''இந்த துரதிர்ஷ்டசாலியைக் கல்யாணம் பண்ணிக்க யார் சம்மதிப்பா? சமூகத்திலேயும் எனக்கு நல்ல பெயர் கிடையாது...''

''சம்மதிச்சா பண்ணிப்பீங்களா?''

''அது நீயா, சாரி, நீங்களா இருந்தா பண்ணிப்பேன்.''

—ஜீவாவுக்கு உடம்பு இலேசானது. கண்களில் கொப்பளிப்பு.

'ஜெகதீஷ்' என்றாள் வியப்போடு. வழுவழுப்பான சாலையில் அவன் ஒரு புளிய மர நிழலில் காரை நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தான்.

அவள் மெல்ல அவன்மேல் சரிந்தாள்.

அவன் அணைத்துக்கொண்டான்.

# 8

## காதல் என்பது கற்பனையாளர்களின் பட்டாநிலம்!

சாப்பாட்டுக் கேரியருடன் ஜீவா வாசலுக்கு வந்த போது வழக்கம்போல் காத்திருந்தான் சண்முகம். ஜீவாவைப் பார்த்துவிட்டு தலையைக் கவிழ்த்துக்கொண்டான் வீதியில் வழக்கமான நடமாட்டங்கள்.

ஜீவா அவனை வெறுப்புடன் பார்த்தாள். விடுவிடுவென்று நடந்தாள். அவனைக் கடக்கும்போது அவன் அவளைப் பின்தொடர ஆரம்பித்தான்.

அவன் தன்னைத் தொடருவதை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை. ஒரு கட்டத்தில் நின்று திரும்பிப் பார்த்தாள். பார்வையால் பொசுக்கினாள் அவனை.

''ஜீவா, சத்தியமா நான் உன்னைத்தான் லவ் பண்ணினேன்''—என்றான் அவன் வேகமாக.

''ஸ்டாப் இட். முதல்ல திரும்பிப் போறியா இல்லியா...''— உறுதிபட பேசினாள்.

''என்னை நம்பு ஜீவா...''

''உன்னை நான் நம்புறேனோ இல்லையோ சாதனா நம்பறா. இன்னமும் நம்பறா...இப்பவும் நம்பறா! நீ வருவே, பார்ப்பேன்னு தவமிருக்கா. உன் நினைப்புல தான் உயிரோட இருக்கா. அவளுக்கு நீ செய்ய நினைக்கிறது சாதாரண துரோகமில்ல சண்முகம். எனக்கு நீகூட பெரிசில்ல...அவளோட , நட்பும் உசிரும்தான் பெரிசு.



அதை எப்படிக் காப்பாத்திக்கப் போறோம்கற பதைப்புல நான் இருக்கேன். எனக்கு வாழ்க்கையே மிரட்டலா தெரியுது. உனக்கென்னடான்னா விளையாட்டா தெரியுது...''

''மிரட்டல், விளையாட்டு எல்லாம் நாம பார்க்கற பார்வைலதான் இருக்கு. அந்த தொண்டிக்காக நீ இப்படி அலட்டிக்கறத நினைச்சா எனக்கு சிரிப்புதான் வருது.''

''அதிகம் பேசாதே சண்முகம். செருப்பு பிஞ்சிடும். இது ரோடாச்சேன்னு பாக்கறேன்.''

''சரிதான் போடி...நீ இல்லேன்னா எனக்கு இன்னொருத்தி கிடைக்காமலா போயிடுவா?''

''உன்னை மாதிரி ஆட்களுக்குத்தான்யா இது காலம். காதல்னா என்னன்னே தெரியாம, பெண்ணை ஒரு போகப் பொருளா பார்த்து அவ பின்னாடி அலையற உங்களுக்குத் தான்யா காலம்...காதலுக்கு அர்த்தம் தெரியாத உனக்குத் தான்யா காலம்.''

''பெரிய காதல்... என் அகராதில சந்தோஷம்தான் காதல்...சந்தோஷம் தர முடிந்த எல்லாத்தையும் நான் காதலிக்கிறேன்...''

''நீ இப்ப எதுவேணும்னாலும் பேசுவே...நாங்க கேட்டுக்கத்தான் வேணும். வாழ்க்கைல சந்தோஷமோ துக்கமோ எதுவுமே உன் கைல கிடையாது. அது ஆண்டவன் கைல...''

''பாப்போம் பாப்போம், நீ நல்லா இருக்கப்போறியா இல்லை நான் நல்லா இருக்கப் போறேனான்னு...''

''எனக்கென்னய்யா குறை...தங்கமான மனுஷன் எனக்கு புருஷனாகப் போறான். நீ அதைப் பார்க்கத்தான் போறே...''

"உன் தோஸ்தை விட்டுட்டியே...பேசாம அந்த நொண்டியை எங்கயாவது விழுந்து சாகச் சொல்லு." பேசிவிட்டு விறுவிறுவென்று நடக்கத் தொடங்கினான் அவன். ஜீவாவுக்கு அமிலம் குடித்த மாதிரி ஆடிவிட்டிருந்தது. தொடர்ந்து சோர்வாக நடக்கிறாள். எதிரிலேயே ஜெகதீஷ் காரில் வந்துகொண்டிருந்தான். ஜீவாவுக்கு அவனைப் பார்க்கவும் கடவுளைப் பார்ப்பதுபோல் ஒரு திருப்தி. காரை அவள் அருகில் நிறுத்தி ஏற்றிக் கொண்டான்.

"உன்னைப் பார்க்கத்தான் வந்துகிட்டிருக்கேன். இதென்ன கைல டிபன்கேரியர்?"

"சாதனாவுக்கும், அவங்கம்மாவுக்கும்..."

"அவங்களுக்குத்தான் எங்க வீட்ல இருந்து சாப்பாடு போயிடுச்சே..."

"உங்க வீட்ல இருந்தா?"

"ஆமா ஜீவா... அது மட்டுமல்ல. இனிமே சாதனாவோட அம்மா பார்வதி எங்க வீட்டுலதான் தங்கப் போறாங்க. எல்லாம் அப்பாவோட ஏற்பாடு... ஆமா நீ ஏன் டல்லா இருக்கே?"

"ஒண்ணுமில்லீங்க... நாய் ஒண்ணு குறுக்க வந்து ஒரே குலையா குலைச்சுச்சு. அதான் விரட்டிட்டு திரும்பினேன், நீங்க வந்துட்டீங்க."

"பாத்து... நாய் கடிச்சா தொப்புளை சுத்தி ஊசியா போட்டுக்க வேண்டி வந்துடும்."

"அந்த வேதனையைக்கூட தாங்கிக்கலாம். சில மனுஷ நாய்கள் மனசைச் சுத்தி ஊசி போட்றாங்களே அதை எப்படிங்க தாங்கிக்கறது?"

"நீ என்ன சொல்றே?"— காரை லாவகமாகச் செலுத்தியபடி கேட்கிறான் ஜெகதீஷ். நன்றாக ஷேவ் செய்து பார்க்க படு ஸ்மார்ட்டாகத் தெரிகிறான். காரில் கூட உற்சாகமான ஜாஸ்மின் சென்ட் வாசம்.



"ஒண்ணுமில்லீங்க. என் மனசே சரியில்லை. அதான் என்னை அறியாம உளறிட்டேன்"—என்றாள் ஜீவா.

"அதான் நான் வந்துட்டேன்ல. இனிமே மனசு சரியில்லை, உடம்பு சரியில்லைன்னெல்லாம் சொல்லக் கூடாது. உம்...அப்புறமா நாளைக்கு சாதனாவை டிஸ்சார்ஜ் செய்யப் போறாங்க.

புண்கள் ஆற இன்னும் ஒரு மாசம் ஆகலாம். இரண்டு கால்ல ஒன்னை குணப்படுத்தலாம் இன்னொரு காலை ஒண்ணும் பண்ணமுடியாது. கட்டுக்கால்தான்னு சொல்லிட்டாங்க. அதுக்கும் அமெரிக்கா போகணுமாம். அப்பா பிரயாணத்துக்கு ஏற்பாடு செய்ய ஆரம்பிச்சுட்டார். ஒரு சர்ப்ரைஸ் நியூஸ். நீயும் எங்களோட வரே..."

ஜீவா அவனை அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

"நானா...எதுக்குங்க? நிறைய செலவாகுமே?"— ஜீவா ஜில்லிட்டாள். இமை கசிய ஆனந்தமானாள். "ஜெகதீஷ், நான் ரொம்ப கொடுத்து வெச்சவ. ஆனா சாதனாவை நினைச்சாதான்..." இழுத்தாள்.

"ஏன் அவளுக்கென்ன? நிச்சயம் அவளுக்கும் நல்ல வாழ்க்கை அமையத்தான் போகுது."

"நோ ஜெகதீஷ். அவ ஒரு அன்லக்கி வுமன். அவ அதிர்ஷ்டத்தையும் சேர்த்து ஆண்டவன் எனக்குக் கொடுத்திட்டான்..."

"அவளும் அதிர்ஷ்டசாலிதான். நீ பார்க்கத்தான் போறே... சரி, நாம ஒரு சினிமாக்குப் போவோமா..."

"முதல்ல ஹாஸ்பிடல்ல சாதனாவைப் பார்க்கணும். அப்புறம்தான் சினிமா டிராமால்லாம்..."

"ஓ.கே. ஹாஸ்பிடலுக்கே முதல்ல போவோம்..." அவனது ஏசி ஃபியட் ஹாஸ்பிடலை குறிவைத்து சீறத் தொடங்கியது.

''ஆமா... நம்ம விஷயத்தை உங்க வீட்டுல பேசிட்டியா?'' கேட்டான்.

''எப்படிங்க... சாதனா இப்படி இருக்கற நிலையில இதையெல்லாம் பேச முடியுமா?''

''வாஸ்தவம்தான். நமக்காகவாவது சாதனாவுக்கு சீக்கிரம் குணமாகி நல்ல வாழ்க்கை அமையணும்''

''அடேயப்பா... உங்களுக்குள்ளயும் சுயநலமா?''

''தனக்குன்னு ஒருத்தி வரப்போறான்னா யாருமே இப்படித்தான் நினைப்பாங்க. எனக்கு தெரிஞ்சு வாழ்க்கையோட சுவாரஸ்யமே இந்தமாதிரி சுய்நலத்துலதான் இருக்கு. இது தப்பில்லாத சுயநலம்.'' அவன் பேசிக்கொண்டிருக்கும்போதே ஹாஸ்பிடலின் முண்டு முண்டான கட்டிடங்கள் தலைகாட்டத் தொடங்க காரை வளைத்து நிறுத்தி உற்சாகமாக இறங்கினான். இருவரும் உரசிக்கொண்டு நடக்கிறார்கள்.

ஆஸ்பத்திரியே வேடிக்கை பார்க்கிறது. அற்புதமான ஜோடி என்கிற ஸ்லாகிப்பு வேறு. இருவரும் புன்னகை கொப்பளிக்க மருந்து நெடிகளை, நோயாளிகளை, டாக்டர் நர்சுகளைக் கடக்கிறார்கள். ஸ்பெஷல் வார்டை எட்டும்போது வாசலிலேயே தென்பட்டாள் பார்வதி. இருவரின் உரசலான நடையைப் பார்த்து இலேசாக விக்கினாள். ஜம்புநாதனும் கவனித்தார். சாதனாவுக்கு உள்ளே கட்டு பிரித்துக் கொண்டிருந்தார்கள். பார்வதியை நெருங்கினாள் ஜீவா.

''அம்மா, உங்களுக்குப் பிடிச்ச வத்தக்குழம்பு சாதம் கொண்டு வந்திருக்கேன்''— என்றாள் புன்னகை பிரள. பார்வதியிடம் அதற்கு உற்சாகமான அங்கீகாரம் இல்லை.

''ஆமா, நீ எப்படி இவர்கூட சேர்ந்து வரே?'' என்று மட்டும் கேட்டாள்.



''அவர்தாம்மா என் வீட்டுக்கே வந்தார். வந்தபிறகு இரண்டுபேரும் சேர்ந்து வரோம்'' என்றாள்.

பார்வதியின் பார்வை ஜெகதீஷ்மேல் ஏறியது. அவன் புத்தம் புது மனிதனாகத் தெரிந்தான்.

''உங்களுக்காக சாதனா காலையிலிருந்தே காத்துக் கிட்டிருக்கா'' என்றாள் சற்று பொய்யாக.

''எதுக்கு?'' ஜெகதீஷ் ஆவலாகக் கேட்டான்.

''அமெரிக்கா போறதுபத்தி பேசத்தான்.''

''அந்த ஏற்பாட்டை அப்பால்ல செய்யறாரு''

''அது சரி; நீங்களும் வரப்போறீங்கதானே?''

''நான் மட்டுமில்லீங்க. ஜீவாவும் வரா.''

''ஜீவா எதுக்கு?''— அந்தக் கேள்வியை ஜீவாலே சற்றும் எதிர்பார்க்கவில்லை.

''என்னங்க இது? சாதனாவோட ஆத்ம தோழி இவ இல்லாமலா?''

''எப்பவும் அவளை வாங்க போங்கன்னு கூப்பிடுவீங்க. இப்ப என்ன வா போன்னு கூப்பிட்றீங்களே...''

''மனசளவில நெருங்கிட்ட பின்னே எதுக்குங்க போலி மரியாதை.''

அவன் பேசப் பேச பார்வதிக்கு தீப்பிடித்த மாதிரி ஆனது. ஏறத்தாழ ஜீவாவும் அதே நிலையில் இருந்தாள். ஆழமாக கவனித்துக்கொண்டிருந்தார் ஜம்புநாதன். அவரால் சில விஷயங்களை நன்றாகவே புரிந்துகொள்ள முடிந்தது. காதல் என்கிற ஒன்று கண்ணாமூச்சி ஆடத் தொடங்கிவிட்டது என்று நினைத்தவர் தொடர்ந்து கவனிக்க ஆரம்பித்தார்.

''ஜீவா உனக்கு ஆபீசுல லீவு தருவாங்களா?''

—பார்வதியின் அடுத்த கேள்வியே அவளை வராதே என்று சொல்லும் ரகத்தில் இருந்தது. ஜீவாவுக்கும் அது புரிந்தது. ஏன் பார்வதி இப்படிப் பேசுகிறாள் என்பது மட்டும் புரியவில்லை.

''அவளுக்கு லீவு தரலேன்னா போகட்டும். இனிமே அவ வேலைக்குப் போக வேண்டாம்'' என்றான் ஜெகதீஷ் குறுக்கே விழுந்து. பார்வதியின் பார்வை இந்த முறை தீர்க்கமாகவே அவனைப் பார்த்தது. அவன் அதை கவனிக்காமல் ஜம்புநாதனை நெருங்கி ஏதோ பேசத் தொடங்கினான்.

பார்வதி ஜீவாவை சமீபித்து நின்றாள்.

''என்ன ஜீவா உன் போக்கே சரியில்லாத மாதிரி தெரியுதே?'' என்று ஆரம்பித்தாள். ஜீவாவுக்குள் பதைப்பு.

''என்னம்மா சொல்றீங்க?'' என்றாள் நடுங்கும் குரலில்.

''நீ ஜெகதீஷ்கூட இப்படிப் பழகறது சரியில்லைன்னு சொல்ல வரேன்...''

''ஏம்மா?''

''அவரை நாங்க சாதனாவுக்கு நிச்சயிச்சு வெச்சிருக்கோம். உண்மையைத்தான் சொல்றேன். சாதனாவுக்கு அவரைக் கல்யாணம் பண்ணிக்கொடுக்கிறதா இருந்தாத்தான் சமரசத்துல கையெழுத்து போடுவேன்னு சொன்னேன். அவர் அப்பாவும் ஒத்துகிட்டார்...''

''சாதனா இதுக்கு ஒத்துக்கிட்டாளா?''

''அவளுக்கு ஒத்துக்க கசக்குமா என்ன?''

''நிச்சயம் கசக்கும். கேட்டுப் பாருங்க.''

''ஆமா நீ காதலிக்கிறது அவளுக்குத் தெரிஞ்சா கசக்கத்தான் செய்யும். உனக்காக அவ வேண்டாம்னுதான் சொல்லுவா!''



''அம்மா, எனக்காக சொல்லமாட்டாம்மா அவ... அவ ஏற்கனவே ஒருத்தரை காதலிக்கறா...''

''என்கிட்ட சொல்லவேயில்லையே அவ...''

''சொல்ற நிலையில இப்ப அவ இல்லைம்மா.''

''யார் அந்த நபர்... ஏன் சாதனாவை வந்து பார்க்கலை?''

ஜீவா அந்தக் கேள்விமுன் திணறத் தொடங்கினாள். 'என்ன சொல்ல? எதைச் சொல்ல? அவன் ஒரு காமாந்தகன் என்பதையா? துரோகி என்பதையா? இல்லை, தன்னைக் காதலிக்கிறான் என்பதையா? எல்லாவற்றுக்கும் மேலாக அவன் நினைப்பாகவே சாதனா கிடக்கிறாள் என்பதையா? எதைச் சொல்ல? எதை விட?'' ஒருவழியாக அனைத்தையுமே சொன்னாள். பார்வதி அதைக் கேட்டு விரக்தியாகச் சிரித்தாள்.

''என்னம்மா நான் சொல்றதுல உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?''

ஜீவாவின் அந்தக் கேள்விமுன் பார்வதி தீர்க்கமாக நிமிர்ந்தாள்.

''நீ சொல்றதைப் பார்த்தா என் மகளைக் காதலிக்க வேண்டிய எல்லாருமே உன் குறுக்கீட்டினால அவளைக் காதலிக்காம உன்னைக் காதலிக்க ஆரம்பிச்சுடறாங்கன்னு தெரியுது. அப்படித்தானே?''

''அம்மா என்னம்மா இது இப்படியெல்லாம் பேசறீங்க?''

''வேற எப்படிப் பேச? தோழிங்கறவ வாழ்க்கையில உதவியா இருக்கறவ. உபத்ரவமா இருக்கறவ கிடையாது.''

''நான் எங்கம்மா சாதனாவுக்கு உபத்ரவமா இருக்கேன்?''

''எனக்கு அதெல்லாம் தெரியாது. என் பெண்ணோட கல்யாண வாழ்க்கை எனக்குப் பிரதானம். ஒண்ணு என் பொண்ணை விரும்பறவன் அவ கழுத்தில தாலி கட்டணும். இல்லை, நான் விரும்பறவன் அவ கழுத்துல தாலி கட்டணும்.

''அதுக்கு நான் என்ன செய்ய?''

''அந்த சண்முகம் என் மகளைக் கட்டிப்பானா?''

''மாட்டார். கட்டிக்க முன்வந்தாலும் வேண்டாம். அவன் அயோக்யன்.''

''அப்ப ஜெகதீஷ் தாலி கட்ட நீ தடையா இருக்காதே. ஒதுங்கிக்கோ...''

''ஜெகதீஷ் என்னைத்தானே காதலிக்கறாரு.''

''நீ ஒதுங்கிக்கோ... அவர் தன்னால சாதனாவைக் காதலிப்பார்.''

''அம்மா காதல்ங்கறது போட்டுக் கழட்டற சட்டை இல்லை...''

''சாதனாவும் ஊனமில்லாத பெண் இல்ல. போனா போகட்டும்னு ஜெகதீஷை நழுவ விட...''

''அம்மா புரியாம பேசறீங்களே...''

''புரிஞ்சுதான் பேசறேன். உன்னைக் கல்யாணம் பண்ணிக்க யார் வேணும்னா முன் வருவாங்க. ஆனா சாதனாவுக்கு அப்படியில்லை...''

''ஜெகதீஷ் இதுக்கு ஒத்துக்கமாட்டார்.''

''அவர் வெறுக்கும்படி நீ நடந்துகிட்டா நிச்சயம் ஒத்துக்குவார். நாங்க ஒத்துக்க வெப்போம்.''

''ஐயோ...நான் அதுக்கு என்ன பண்ணட்டும்.''

''உன்னைக் காதலிக்கறதா சொன்ன சண்முகத்தை நீ காதலி. உனக்கும் ஒரு வழி பிறக்கும். சாதனாவுக்கும் ஒரு வழி பிறக்கும்.''



''அவன் ஒரு அயோக்யன்.''

''எப்படியோ இருந்த ஜெகதீஷை உன்னால மாறிட்டார். இந்த சண்முகம்தானா மாற மாட்டான்.''

அதற்குமேல் ஜீவாவால் பேசமுடியவில்லை. சோர்ந்து விட்டாள். மெல்ல அங்கிருந்து நடக்கத் தொடங்கினாள்.

''நில்லு...'' தடுத்தாள் பார்வதி.

''ஜெகதீஷ் வெறுக்கும்படி நடந்துப்பேன்னு சத்தியம் பண்ணித்தா...''

''அம்மா இது என்னம்மா சோதனை?''

''சோதனைதாம்மா பெண்களை பெரியவங்களாக்கும் சீதையோட அக்னிப் பிரவேசத்தை விடவா இது பெரிசு. உன் தோழிக்காக நீ இதைக்கூட செய்யலைன்னா எப்படி?'

—ஜீவா நெடுநேரம் எதுவும் பேசவில்லை. கண்களில் தாரை தாரையாக கண்ணீர். ''சரிம்மா...'' என்று அவள் சத்தியம் செய்த மறுவினாடியே ஜெகதீஷ் வந்து நின்றான்.

''நாம கிளம்பலாமா ஜீவா''—என்று கேட்டான்.

''எங்க?''— அவளிடம் திமிரான கேள்வி.

''எங்கையா, சினிமாவுக்கு?''

''நான் எதுக்கு உங்ககூட வரணும்?''

''ஜீவா, என்ன இது உன் டோனே மாறுது?''

''சாரி, மிஸ்டர் ஜெகதீஷ். எனக்கு வேற வேலை இருக்கு. நீங்க போய்ட்டு வாங்க...''

''கொஞ்சம் முந்தி வரேன்னு சொன்னியே...''

''தப்பா சொல்லிட்டேன். ஒரு குடிகாரன்கூட சினிமாவுக்கு வர எனக்கு தைரியமில்லை.''

''நான்சென்ஸ். நான் இப்ப குடிக்கறதில்லை...''

''இனிமே குடிக்கலாம்—யார் கண்டாங்க ''

''ஜீவா ஏன் இப்படி எல்லாம் பேசறே?''

''சாரி உங்ககூட பேச இஷ்டமில்லே...'' பேசிவிட்டு விறுவிறு என்று கிளம்பிவிட்டாள் ஜீவா.

ஜெகதீஷ் நிலைகுலைந்து போய்விட்டிருந்தான்.

பார்வதியிடமோ நிம்மதிப் பெருமூச்சு.

''அவ போனா போறா விடுங்க. சாதனா நடக்க ஆரம்பிக்கட்டும். நீங்க இரண்டுபேரும் ஒண்ணா வாழப் போறதைப் பார்த்து அவ பொறுமியே சாகணும்''—என்றாள்.

ஜெகதீஷ் அதைக் கேட்டு அப்படியே நொறுங்கிப் போய்விட்டான்.

# 9

## காதல் என்பது முதலில் தோற்பது முடிவில் ஜெயிக்கும் அதிசயம்!

**வா**சலில் குப்பை கொட்டலாம் என்று வந்த ஜீவாவுக்கு தூக்கிவாரிப் போட்டது. வாசலில் சற்று தள்ளி கார் மேலே பானட்டில் சாய்ந்து நின்றபடி ஜெகதீஷ்! அவள் நிலை மனதை சுருக்கென்று தைத்தது. இருந்தாலும் பார்வதிக்குக் கொடுத்த வாக்குறுதி நெஞ்சில் முட்டியது. மனதை தேற்றிக்கொண்டு சட்டென்று வீட்டுக்குள் திரும்பிவிட்டாள். ஆனால் எதிலும் ஒன்ற முடியவில்லை. தவித்தாள். மனதில் பொங்கி வழிந்தாள். சுவர் பல்லி ஐயோ பாவம் என்பதுபோல பார்த்தது.

'கஷ்டப்பட்டு ஒரு புதிய வாழ்க்கைக்குத் திரும்பியவனை இப்படியா அலட்சியப்படுத்துவது?— தனக்குத் தானே கேட்டுக்கொண்டு முள்ளைக் கண்ணில் குத்தவிட்டுக் கொண்டமாதிரி அழ ஆரம்பித்தாள்.



''தவமிருந்தாலும் இப்படி ஒருவன் கிடைக்க மாட்டானே?''

—கேள்வி ஏக்கமாய் பரவியது. சாதனா முகம் அந்த ஏக்கத்தை விரட்டியது. 'நொண்டிக்காலோடு அவள் படும் பாட்டை விடவா இது பெரிது?' பதிலில் நிமிர்ந்தவள் நெடுநேரம் கழித்து வாசல் பக்கம் வந்தாள். பழைய நிலையில் துளிகூட மாறாமல் ஜெகதீஷ்! ஜீவாவின் இதயம் மார்பெலும்பில் மோதி சிக்கிக்கொண்டமாதிரி வலித்தது. ''தெய்வமே!'' —உதட்டில் புலம்பல். அப்பொழுது பார்த்து வாசல்பக்கம் சண்முகம் வந்து நின்றான். அவனைப் பார்த்தவளுக்குள் சடாரென்று ஒரு மின்னல்.

''ஹலோ சண்மு...'' —அவனைப் பார்த்துக் கையாட்டியபடி அவனை நெருங்கினாள்.

அவன் திக்குமுக்காடிப் போனான். நேற்று காதல் புனிதம் கத்திரிக்காய் என்று வியாக்கியானம் செய்தவள் இன்று என்ன இப்படி புதிய ரூபம் காட்டுகிறாள். அவன் நினைத்து முடிக்கும்முன் அவனை நெருங்கியவள் ''என்னங்க பயந்துட்டீங்களா?'' —என்றாள் கண்களைச் சிமிட்டியபடி.

இவன் மிடறு விழுங்கினான். அதைப் பார்க்கும் ஜெகதீஷிற்கோ ஏன் பிறந்தோம் என்பது போன்ற வேதனை.

''சண்முகம், நேத்து நான் உங்களை சும்மா சோதிச்சேன். அரண்டுட்டீங்க போல இருக்கே. ராத்திரியெல்லாம் எனக்கு தூக்கமே இல்லை தெரியுமா. என் கண்ணைப் பாருங்க...'' என்றாள்.

சண்முகத்திற்கு காலடியில் உலகம் நழுவியது. ''சண்முகம் எனக்கொரு உதவி பண்ணணும். ஒரு ஆள் என்னைச் சுத்திச் சுத்தி வர்றான். அவனை நீங்க நாலு தட்டு தட்டணும். தட்டுவீங்களா?''

அவள் முடிக்குமுன் சண்முகம் பெரிதாக மார்பை நிமிர்த்தினான்.

''அவன் பெரிய பணக்காரன்— கோடீஸ்வரன். இருந்தாலும் உங்களை நினைச்சுட்ட மனசால அவனை எனக்கு நினைக்கப் பிடிக்கலை...''

—நிஜமாலுமே இந்த டயலாக்முன் சண்முகம் மிக பெருமிதப்பட்டு ''யார் அவன்?'' என்று கேட்டான். ''அதோ கார் மேலே...'' அவள் கை காட்டிய மறுவினாடி அவனை நெருங்கினான். ''என்னடா... எங்க தெருவுல வந்து என் ஆளையே டாவ் அடிக்கிறயா?'' —கேள்வியோடு கையைப் பிசைந்தான்.

ஜெகதீஷிடம் திகைப்பு.

''குத்துனா மூஞ்சி பேந்து போவும். இப்ப எடத்தை காலி பண்றியா இல்லை டாப்பை கழட்டட்டுமா?''— பேச்சோடு பேச்சாக கையை ஓங்கி அவனைக் குத்த எத்தனித்தவனைச் சுற்றி சிலர் சேர்ந்துகொண்டனர்.

''என்ன மாப்ளே. என்னா விஷயம்?''

''நம்ம தெரு பொண்ணை விடாம வெரட்றாம்பா. கார் இருந்தா பெரிய மன்மதன்னு நினைப்புபோல இருக்கு...''

''யாரா இருந்தா என்ன... தர்ம அடி போட்டா தன்னால வழிக்கு வர்றாங்க...'' —எல்லோரும் பேசப் பேச ஜீவாவுக்குள் இடி இடித்து மழையே கொட்டியது. ''ஜெகதீஷ் என்னை மன்னித்துவிடுங்கள்''—என்று மானசீகமாய் அவன் காலைப் பிடித்துக்கொண்டு அவள் அழ ஆரம்பிக்கவும் கூட்டம் ஜெகதீஷை அடிக்க ஆரம்பிக்கவும் சரியாக இருந்தது.

ஒருவழியாக தப்பித்துக் காரில் ஏறி காரைக் கிளப்பியவனுக்குள் ஆவேசமான ஆவேசம். அவமானத்தாலும், அதிர்ச்சியாலும் ஆறுபோல் வியர்வை. கார் அசாத்திய



வேகம் எடுத்தது. உலகில் உள்ள அத்தனைப் பெண்களையும் கட்டிவைத்து தோலை உரிக்க வேண்டும் என்பது வரை நினைத்தவன் ஒரு பார் முன்னால் காரை நிறுத்தினான். திரும்பவும் மது பாட்டில்களைத் தேடி வந்தவனை அந்த பாரின் சர்வர் வியப்போடு பார்க்கிறான். ஜீவாவோ அவன் அடிபடுவதை பார்க்கச் சகிக்காமல் வீட்டுக்குள் ஓடி ஒளிந்துகொண்டிருந்தாள்.

தற்கொலை செய்துகொள்ளலாமா என்றுகூடத் தோன்றியது... கண்களில் கண்ணீரின் வெள்ளம். யாருக்கும் தெரியாமல் சப்தம் போடாமல் அழுவதுகூட எத்தனை சிரமம் என்று அப்பொழுதுதான் அவளுக்குத் தெரிந்தது.

பெண் என்பவளால் மட்டுமே இதுபோன்ற வேளைகளில் உயிரோடு இருக்க முடிகிறது. மற்ற உயிரினங்களுக்கெல்லாம் இப்படி நேர்ந்தால் இதயம் வெடித்து அந்த இடத்திலேயே அல்லவா செத்துப்போவார்கள்?

மிதமிஞ்சிய போதையில் தலைகுப்புற விழுந்த ஜெகதீஷைப் பார்த்துப் பதறிப்போனான். ஓடிப்போய் டெலிபோன் எண்களைச் சுழற்றி மறுமுனையில் ஜம்புநாதனைப் பிடித்தான் சர்வர்.

தப்பித் தவறி பார் பக்கம் வந்தால் தனக்கு உடனே தகவல் தரவேண்டும் என்று அவர் சொன்னதை கச்சிதமாக ஆனால் சற்றுத் தாமதமாக செயல்படுத்தியவன் டெலிபோனை வைத்துவிட்டு வந்து ஜெகதீஷை தாங்கிப் பிடித்துக் கொண்டான். சில நிமிடங்களில் எல்லாம் ஜம்புநாதன் வந்துவிட்டார். கூடவே பாண்டி.

இருவரும் ஜெகதீஷைப் பார்த்து துடித்துப் போனார்கள். சர்வருக்கு நன்றி சொல்லிவிட்டு தங்கள் காரில் அள்ளிக்கொண்டு போனார்கள்.

போர்ட்டிகோவில் காரை பார்க் செய்துவிட்டு அவனை இறக்கி தோளைத் தாங்கியபடி நடந்து விசால மான ஹாலில் நுழைந்தவர்களை அங்கே தங்க வந்திருந்த பார்வதி பார்த்துவிட்டு விதிர்த்துப் போனாள்.

''திருந்திட்டேன்னாரே... என்ன ஆச்சு?''— என்று கேட்டபடி அவர்களைத் தொடர்ந்தவளை பாண்டி வெறுப்புடன் பார்த்தான்.

''சிலரோட சுயநலம் திருந்த விட்டாதானே?'' என்றான். பார்வதியை அந்த பதில் என்னவோ செய்தது. ஜம்புநாதனிடம் எந்த பதிலுமில்லை. அவர் மிகவும் களைத்தவர்போல் தெரிந்தார். தன் மகனின் வாழ்க்கை வானம் விடிந்துவிட்டதாகக் கருதியவர் அதில் திரும்பவும் இப்படி இருட்டடிக்கும் என்று எதிர்பார்க்கவே இல்லை. ஹாலுக்கு வந்து ஈஸிசேரில் மல்லாந்தார். பார்வதி அவரை நெருங்கி வந்து நின்றுகொண்டு கேட்டாள்.

''என்னங்க இது திரும்ப மரமேறிட்டார்?''

''என்னைக் கேட்டா?''—அப்பொழுது அவரது பி. ஏ. உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்.

''சார், நம்ம ஃபேக்டரியோட சூப்பர்வைசர்ஸ் போஸ்ட்டுக்கு நாளைக்கு ஃபைனல் இண்டர்வியூ. செலக்ஷனுக்கு நீங்க வரவேண்டியிருக்கு''— என்றார்.

''எல்லாம் நீங்களே பாத்துக்குங்க...''

''பொலிடிகல் பிரஷர் நிறைய. நீங்க வந்தா சமாளிச் சுடுவோம். இல்லேன்னா சிபாரிசுக் கடிதம் கொண்டு வர்றவனையெல்லாம்...''— அவரைப் பேசவிடாமல் கத்தரித்தது தூக்கிய ஜம்புநாதனின் வலக்கரம்.

''நான் வரேன்''— என்றது உதடு.

''அந்த வெளிச்சூழ்நிலையிலாவது கவலையை மறக்க முடிகிறதா என்று பார்ப்போம்.''



**வா**சலில் நெடுநேரம் காத்திருந்த சண்முகம் பொறுக்க மாட்டாமல் இப்பொழுது ஜீவாவின் வீட்டுக் குள்ளேயே நுழைந்து விட்டான்.

அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்த மனோன்மணி திடுக்கிட்டு நிமிர்ந்தாள். அவனைத் தெரிந்திருந்தும் அதிக பரிச்சயம் இல்லாததால் அரைகுறையாகச் சிரித்தபடி ''வாப்பா...''—என்றாள்.

''ஜீவா இல்லையா?''

''ஆபீஸ் போயிருக்கா...''

''வேலைக்குப் போக ஆரம்பிச்சாச்சா...''

''அவளுக்கு வீட்டுல இருக்கவே பிடிக்கலை. அதான் கிளம்பிட்டா. பாவம் அந்த பொண்ணு சாதனா. தேவதை மாதிரி இவளும் அவளும் சேர்ந்து வேலைக்குப் போறதைப் பார்த்து யார் கண் பட்டதோ... இன்னிக்குதான் என் மக திரும்ப வேலைக்குப் போக நேரம் வந்திருக்கு...''

''அவங்களுக்கு எப்படிங்க இருக்கு?''

''கால் போனாலும் அவளுக்கு நல்ல வாழ்க்கை வந்திருக்குப்பா. கால்கூட வந்துடும்கறாங்க. அவமேல காரை ஏத்தினவனே அவளைக் கட்டிக்கப் போறானாம்! சிலருக்கு அதிர்ஷ்டம் எப்படி எல்லாம் வருது பாத்தியா?''

சண்முகம் சற்று திகைத்தான். ஏறத்தாழ தன் மனதில் ஒரு ஆறு மாத காலம் காதல் வாசம் செய்தவள் இப்பொழுது வேறு ஒருவனுக்கு வாழ்க்கைப்படப் போகிறாளா...பலே—என்றது மனது.

''எப்படியோ நல்லா இருந்தா சரி...''— என்றவன் கிளம்ப ஆயத்தமானான். ''நீ என்னப்பா பண்றே?'' அவள் திருப்பிக் கேட்டாள்.

''பனியன் பிசினஸ்மா. அத்தோட அப்படியே வேலைக்கும் போகலாம்னு. இன்னிக்கு எனக்கு இன்டர்வியூ. அதான் ஜீவாகிட்ட சொல்லலாம்னு வந்தேன்.''

''நல்லதுப்பா...''— அவளின் அனுசரணையான பேச்சைக் கேட்டபடி வெளியே வந்தவன் கெடிகாரத்தைப் பார்த்தான். பத்தாகபத்து நிமிடம் இருந்தது பத்தரைக்கு இண்டர்வியூ. நடுவில் ஜீவாவை சந்திப்பது அசாத்தியம் என்று தோன்றியது. தீவிர யோசனைக்குப் பிறகு உடைகளை மாற்றிக் கொண்டு தனது வாகனத்தில் இண்டர்வியூவிற்குக் கிளம்பினான்.

இண்டர்வியூ ஹாலில் வரிசையாக ஒருவர்பின் ஒருவராக அழைக்கப்பட இறுதியாக சண்முகத்தின் முறை வந்தது. பணிவாக உள்ளே நுழைந்தவனை இண்டர்வியூ ஹாலில் அதிகாரிகளும், ஜம்புநாதனும் தீர்க்கமாகப் பார்க்கின்றனர். ஜம்புநாதனின் தலைக்குமேலே ஜெகதீஷின் கம்பீரமான புகைப்படம்.

அதைப் பார்த்த சண்முகத்திற்கு தூக்கி வாரிப் போட்டது. 'நேற்று இவனைத்தானே நாம் பொறிந்து தள்ளினோம்? —கேள்விப் பிராண்டலோடு அமர்ந்தவன் வரிசையாகக் கேட்ட கேள்விக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டே வந்தான். கடைசியாக ஜெகதீஷின் படத்தைக் காட்டி ஜம்புநாதனிடமே கேட்டான். ''யார் சார் இவர்?''

''இந்த நிறுவனத்தோட சேர்மன்.''

—அவன் தொண்டையில் முள் ஏறினமாதிரி வலி. திரும்பும்போது ஜீவா பற்றின சிந்தனை. இத்தனை பெரிய பணக்காரனின் காதலைவிட என் போலியான காதலை ஜீவா ஏற்றுக்கொள்ளக் காரணம்?

—கேள்வி பெரிதாக அவனைக் குடைந்தது. ஜீவாவின் ஆபீசுக்கு வந்து பார்த்தபோது அவள் பர்மிஷனில் சாதனாவைப் பார்க்க ஆஸ்பத்திரிக்குக் கிளம்பிவிட்டது தெரிய வந்தது. அரை மனதாக ஆஸ்பத்திரிக்கு வண்டியைச் செலுத்தினான். ஆஸ்பத்திரியில் ஏகக் கூட்டம். ஒரு



வழியாக ஸ்பெஷல் வார்டை எட்டியபோது முதலில் தட்டுப்பட்டவர் ஜம்புநாதன்தான். இவர் எங்கே இங்கே? அவருக்குப் பக்கமாக ஜீவா தெரிந்தாள். சண்முகத்தை எதிர்பாராத விதமாகப் பார்த்துவிட்டு அவனை நோக்கி அரை மனதாக நடந்து வந்தாள். ஜம்புநாதன் கனகச்சிதமாகச் சிரித்துவிட்டு வேடிக்கை பார்க்க ஆரம்பித்தார்.

''என்னங்க இங்கே?''

''உன்னைப் பார்க்கத்தான் ஆபீஸ் போனேன். நீ இங்க இருக்கறதா சொன்னாங்க. வந்தேன்.''

''சாதனாவை இப்ப டிஸ்சார்ஜ் பண்ணப் போறாங்க. அவ கண்ணுல பட்டுடாதீங்க. அவளுக்கு இன்னும் உங்க நினைப்பு மாறலை...''

''என்ன சொல்றே ஜீவா. உங்கம்மா என்னடான்னா அவ காரை ஏத்தினவனையே கல்யாணம் பண்ணிக்கப் போறாங்கறாங்க...''

''ஆமாம். ஆனா இந்த விஷயம் சாதனாவுக்கு இன்னும் தெரியாது.''

''ஆமா யார் அந்த நபர்?''

''மிஸ்டர் ஜம்புநாதன் மகன். பேர் ஜெகதீஷ்! நேத்து நீங்க அடிச்சிங்களே அதே ஆள்தான்...''

''மை குட்நெஸ்...இன்னிக்கு அவரோட ஃபேக்டரிக்கு நான் இண்டர்வியூக்கு போய்ட்டு வந்தேன். இவர்தான் என்னை இண்டர்வியூ பண்ணார். வேலை கிடைச்சா சக்கையான சம்பளம். ஆறாயிரம் ரூபாய்...''

''ஏன் உங்க பிசினஸ் என்ன ஆச்சு?''

''அதுபாட்டுக்கு ஒரு பக்கம். ஆறாயிரம் சம்பளத்துல ஒரு வேலை கிடைச்சா கசக்குதா. ஆனா இப்ப அது கிடைக்காதுன்னு ஆய்ப்போச்சே...நேத்தே ஜெகதீஷ்தான் என் சேர்மனாகப்போறவர்னு தெரிஞ்சிருந்தா கை நீட்டியிருக்கமாட்டேனே...''

சண்முகம் புலம்பும் சமயம் ஜம்புநாதன் மெல்ல அவர்களுக்குள் நுழைந்தார்.

''என்னப்பா... ஜீவாவை முன்னையே தெரியுமா? காத்தாலகூட உன்னை இண்டர்வியூவில பார்த்தநா ஞாபகம்...''

''ஆமாம் சார்...''—வழிய ஆரம்பித்தான் சண்முகம்.

''சாரை உனக்கு முன்பே தெரியுமா?'' ஜீவா பக்கம் திரும்பியது அவர் கேள்வி.

''தெரியும் சார்... என் வருங்காலக் கணவர் இவர்''—என்றாள். அப்படிச் சொல்லும்போது குரலில் உடைப்பெடுத்தது. ஜம்புநாதன் பதட்டமின்றி அதைக் கேட்டுக் கொண்டார்.

அப்பொழுது வார்டுக்குள்ளிருந்து ஜீவாவுக்கு அழைப்பு. உள்ளே ஓடினாள். சாதனா மலர்ந்த முகமாக பொட்டெல்லாம் வைத்து தென்பட்டாள்.

''எங்கடி உன்னைக் காத்தால காணோம்.'' உரிமையோடு கோபித்தாள் சாதனா.

''வேலைக்கு போய்ட்டேன்...''

''டூட்டியிலே ஜாய்ன் பண்ணிட்டியா?''

''சொல்லவே இல்லையே...'' —இருவரும் பேசுவது வெளியே பணிவாக நிற்கும் சண்முகம் காதில் நன்றாகவே விழுந்தது.

''ஆமா... இன்னிக்கு அவரைப் பாத்தியா... நாம வேலைக்குப் போகும்போதெல்லாம் தேன் குடிச்ச நரி மாதிரி பார்ப்பாரே...''

''யார்... சண்முகத்தைச் சொல்றியா?''

''வேற யாரடி நான் சொல்வேன். அவரையேதான்!''

''பாத்தேன்.''



''என்னைப்பத்திக் கேட்டாரா... ஏண்டி என்னை பாக்க வரலை...?

—ஜீவா அந்தக் கேள்விக்கு பதில் சொல்லாமல் வெறித்தாள்.

''சண்முகம் பத்தி நான் கேட்கும்போதெல்லாம் நீ இப்படித்தான் உம்முன்னு மூஞ்சியை வெச்சுகிட்டு அழிச்சாட்டியம் பண்றே...''

—ஜீவா முகம் அதைக் கேட்டு கண்ணீரோடு நிமிர்ந்தது.

''சாதனா... நீ சண்முகத்தை மறந்துடிடி''—என்றாள்.

''என்னடி சொல்றே நீ?'' பதறினாள்—சாதனா.

''உள்ளதை சொல்றேன் நான். சண்முகம் சாதாரண மனிதர். ஆனா ஜெகதீஷ் அப்படி இல்லை. பெரிய பணக்காரர். அவரை நீ கட்டிக்கோ காலத்துக்கும் சுகமா இருப்பே...''

''என்னது... ஜெகதீஷை நான் கல்யாணம் பண்ணிக்கறதா...என்னடி அநியாயம் இது. அவர் உன்னை இல்லை காதலிக்கிறாரு...''

—ஜீவா அதைக் கேட்டுத் திகைத்தாள்.

''உனக்கு எப்படி அது தெரியும்?''

''ஒரு நாள் யாரும் இல்லாதப்ப என்கிட்ட மனம் விட்டுப் பேசினப்போ...''

''ஆனா நான் அவரை காதலிக்கலையே...''

''பொய்...நீ சம்மதிக்காம அவர் உன்னைக் காதலிக்கலை. எனக்கு இது நல்லா தெரியும்.''

''இருக்கலாம். ஆனா இப்ப இல்லை. உனக்கு அவரும் அவருக்கு நீயும்தான் சரியான ஜோடி.''

'போடி பைத்தியக்காரி... காசு பணம் உள்ள ஒரு ஆளை எனக்காகத் தூக்கி எறிஞ்சு பெரிய தியாகி ஆகப் பாக்கறியா. நான் உனக்கு ஒரு படி மேல. கட்டிக்கிட்டா என் மனசுல முதல் முதல்ல நினைச்ச சண்முகத்தைத்தான் கட்டுவேன். இல்லேன்னா செத்தாலும் செத்துப் போவேன். ஆனா இன்னொருத்தருக்கு கழுத்தை நீட்ட மாட்டேன். ஜெகதீஷ் போல எத்தனை கோடீஸ்வரன் வந்தாலும் எனக்கு என் சண்முகம்தான் பெரிசு. எனக்காக ஒருநாள் இல்ல இரண்டு நாள் இல்லடி... ஆறு மாசம் காத்துக் கிடந்த அந்த மனிதரோட தவத்தின் முன்னால் இவங்களோட பணம் எனக்குக் கால் தூசுடி!'' —சாதனாவின் பேச்சு சண்முகத்தை ஸ்தம்பிக்க வைத்திருந்தது.

'அடேயப்பா... என்ன ஒரு தியாகம். என்ன ஒரு காதல் பிடிப்பு... இரண்டு பெண்களும் ஒருவரை ஒருவர் எடுத்து விழுங்குகின்றார்களே?'— மெய்சிலிர்த்துப் போய் கை கூப்பியவன் கண்களில் கண்ணீர். அப்படியே துடிப்போடு சாதனா இருந்த அறைக்குள் நுழைந்தவன் சாதனாவைப் பார்த்து பெரிதாகக் கையெடுத்துக் கும்பிட்டபடி அவள்முன் சென்று மண்டியிட்டான். அவன் எதற்காக அழுகிறான் என்பது சாதனாவிற்குத் தெரியவில்லை. தன் நிலைக்காக அழுவதாகக் கருதி அவள் மெய்சிலிர்த்துப் போனாள்.

''இப்பவாவது உங்களுக்கு வரணும்னு தோணிச்சே'' —என்றாள் காதல் கசியும் குரலோடு.

சண்முகத்தின் பார்வை ஜீவா பக்கம் திரும்பியது. அந்தப் பார்வையே என்னை மன்னித்துவிடு என்பது போலப் பார்த்தது.

சண்முகத்தின் அந்த மாற்றத்தைப் பார்த்த ஜீவா நெக்குருகிப் போயிருந்தாள். ஜம்புநாதன் வெளியே கடவுளுக்கு நன்றி சொல்லிவிட்டு ஜீவாவை தனியே அழைத்தார்.



''அம்மா, அவங்களை தனியா விடு. உனக்காக என் மகன் அழுதுகிட்டிருக்காம்மா''—என்றார் உடைந்த குரலில்.

ஜீவாவின் கால்களில் அசுரவேகம் ஒன்று உடனே கல்லியது. ''நில்லும்மா நானே கூட்டிக்கிட்டு போறேன்.'' அவர் அவளை தன் காரில் ஏற்றிக்கொண்டு பறக்க ஆரம்பித்தார். தன் பங்களாவை பத்தாவது நிமிடமே எட்டிப் பிடித்தார். காரை விட்டு இறங்கி இருவரும் உள்ளே ஓடினார்கள். தன் அறையில் ஆளுயர மதுபாலாவின் படத்தையே பார்த்தபடி சிலையாக அமர்ந்திருந்தான் ஜெகதீஷ். பக்கத்தில் காவலாய் பாண்டி.

உள்ளே நுழைந்தவள் ஆளுயர மதுபாலாவின் படத்தின்முன் போய் உயிரோவியமாய் அவனைப் பார்த்தபடி நின்றாள். அவன் திகைத்துப் போனான். நம்பமுடியாமல் அவளைப் பார்த்தான். 'அவள் ஓடிப் போய் அவன் காலடியில் விழுந்தாள். அவன் அவளைத் தூக்கி அணைத்தான். அவன் உடம்பினில் அடிபட்ட இடங்களை எல்லாம் வருடத் தொடங்கினாள்.

ஜம்புநாதனும் பாண்டியும் மெல்ல நழுவினார்கள். என்னை மன்னிச்சுடுங்க. உங்களை ரொம்ப சோதிச்சிட்டேன்.''—என்றாள் உடைந்த குரலில்.

''நீ ஏதோ பிலே பண்றேங்கறது எனக்கு அப்பவே தெரியும். ஆமா இப்ப மட்டும் எப்படி மனசு மாறி திரும்பி வந்தே...''

''சாதனாவுக்கும் ஒரு வாழ்க்கை கிடைச்சிடுச்சுங்க. அவளோட காதலன் வந்தாச்சு.''

''நிஜமாவா?''

''யெஸ்... அவ மனம்போலவே மாங்கல்யம் கிடைக்கப் போகுது... ஆத்மார்த்தமான காதல் வீண் போகாதுங் கறதை நான் நல்லா புரிஞ்சுகிட்டேன்.''—அவள் அவனைக் கட்டிக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் விட்டாள். அவனும் அவளை அணைத்துக்கொண்டு கண்ணீர் சிந்தினான். ஹாலில் நெடுநாட்களுக்குப் பிறகு ஜம்புநாதன் வானில் மிதப்பதுபோல லேசாயிருந்தார். அவரை அழைக்க வேண்டி டெலிபோன் சிணுங்கியது. மறுமுனையில் டிராவல் ஏஜென்ஸியின் குரல்.

''சார், ஸ்டேட்ஸ் போக அஞ்சு டிக்கட் ரெடி சார்...''

''தேங்க்யூ... இப்ப இன்னொரு டிக்கட்டும் வேணும்... சேர்த்து வாங்கிடுங்க...''

''பேசஞ்ஜர் பேர்?''

''சண்முகம்!''— ஜம்புநாதன் டெலிபோனைக் கீழே வைத்துவிட்டு திரும்பியபோது ஜெகதீஷும் ஜீவாவும் ஜோடியாக வந்து அவர் காலில் விழுந்தனர்.

''வாழ்க! வாழ்க!''— அவர் குரலில் உற்சாகம் பீறிட்டது.

# காதலெனும் வானவில்

## 1

### இன்று

''இந்துமதி... இந்துமதி... இந்துமதி...''— மூன்று முறை அந்த அழகிய பெயரை கோர்ட் 'டவ்வாலி' உச்சரித்து முடிக்கவும் அந்த தேக்குச் சதுரக் கூண்டுக்குள் அந்தப் பெயருக்குரியவள் ஏறி நிற்கிறாள்.

இருபத்தைந்து வயது தேகம். கவிழ்ந்த தலை. நெகிழ்ந்த கூந்தலின் இடையை மீறிய வளர்ச்சி! சேலை உடுத்தியிருக்கும் பாங்கில் நிகழ்கால நளினத்தின் ஒட்டு மொத்த குத்தகை தெரிகிறது.

''நீங்கதான் இந்துமதியா?''— நீதிபதியின் கேள்வி முன் அவளது குனிந்த தலை நிமிர்கிறது. இலேசான இடவலமான முக அசைவு. பார்வையாளர் வரிசையில் ஒரு சின்ன துழாவல்...

அதில் அவன் அகப்படுகிறான்.

சிறுத்தை முகம்போல் தெரிகிறது அவன் முகம்!

''உங்க பேர் என்னன்னு கோர்ட்டார் கேக்கறாரு சொல்லுங்கம்மா.''— அரசாங்க வக்கீல் அவளது கவனத்தை இழுக்கிறார்.

''உம்... எம் பேரா இந்து! எஸ். இந்துமதி! நோ நோ ஐ ஆம் ஜி. இந்துமதி பாதர்ஆஃப் கோவிந்தராஜன்!''

அவளது சின்ன திணறலில் திருக்குறள்போல் நிறைய சங்கதி. நீதிபதி துல்லியமாக அதை உணருகிறார். ''நீங்க எஸ். இந்துமதியா, ஜி. இந்துமதியாங்கறது வேற விஷயம். இந்துமதிதானாங்கறது முதல் விஷயம்.''

''யெஸ்...''

''உங்க கணவர் உங்களைக் கொல்ல முயன்றதா போலீஸ்ல புகார் செய்திருக்கீங்க. இந்த வழக்குல அதுக்கு ஏதாவது ஆதாரம் உண்டா?''

''பக்கத்து வீட்டு பார்வதியம்மா இருக்காங்க...அவங்களைக் கேளுங்க...'' அவளின் பதிலைத் தொடர்ந்து பார்வதியம்மா அழைக்கப்படுகிறாள்.

சதுரக் கூண்டில் வெற்றிலைக் குதப்பலான வாயைத் திறக்கிறாள்.

''இந்துமதியை அவ புருஷன் சந்தோஷ்குமார் மாடியில இருந்து கீழே தள்ளிவிட்டு கொல்லப் பார்த்தாரு. நான் துணி காயப்போட என் வீட்டு மாடிக்கு வந்தப்போ இதைப் பார்த்துட்டேன். என்னைப் பார்த்ததும் அவளை தள்ளிவிட்றதை விட்டுட்டு அடிக்க ஆரம்பிச்சிட்டாரு...''

அவள் சாட்சியம் பெரிய அளவில் நீதிபதியால் குறித்துக் கொள்ளப்பட்டது.

''பார்வதியம்மா பொய் சொல்றாங்க. நான் என் மனைவியை அடிச்சது உண்மை கொல்ல நினைக்கலை—மாடியில இருந்து தள்ளிவிடவும் முயற்சிக்கலை...''

கூட்டத்தில் இருந்து திடீரென்று எழுந்து ஆக்ரோஷமாகக் கத்த ஆரம்பித்தான் சந்தோஷ் என்னும் அவளது புலிமுகக் கணவன். கோர்ட்டில் இலேசான சலனம்.



''உங்களுக்கு அழைப்பு வரும்போது கூண்டுல ஏறிப் பேசினால் போதும். இப்படி கத்தக்கூடாது...''—நீதிபதி எச்சரிக்கிறார். அவன் அதைக் கேட்டு ஆசுவாசப்படுகிறான். தனது 'பங்க்' ஸ்டைல் தலைமுடியின் பின் நீட்டத்தை விரல்களால் கோதிக் கொள்கிறான். எல்லோரும் அவனையே பார்க்கிறார்கள். ஸ்டோன் வாஷ், பேண்ட் ஷர்ட், காதில் வளையம், பங்க் ஸ்டைல் ஹேர் கட்' என்று நியூயார்க் நகரத்து ஜிப்சி கருப்பர்களைப் போல் தோற்றம் தருகிறான்.

முகத்தில் ஒருவகை கடூரம். அந்த மூக்கையும், கண்ணையும் அப்படியே பிடுங்கி ஒரு புலிக்கு வைத்துத் தைத்தால் வித்தியாசமே தெரியாது என்னும்படியான ஒரு விதமான முகம். எல்லோருக்கும் வெறுப்பாகப் போகிறது.

''இந்த முகரக்கட்டையை அந்தப் பொண்ணு காதலிச்சுக் கல்யாணம் பண்ணியிருக்கான்னா நம்புவீங்களா?'' —ஒருவர் இன்னொருவரிடம் கேட்கிறார். அவர் முகத்தில் பேயிடம் அடிபட்டமாதிரி ஒரு மாற்றம்

''பாத்து பாத்து செய்யற கல்யாணங்களே இந்தக் காலத்துல உருப்படறதில்லை. இதுல லவ் மேரஜ்லாம் பண்ணினா இப்படித்தான்.''—

இப்பொழுது கோர்ட் சந்தோஷ்குமார் என்னும் அவனை அழைக்கிறது. அவனைக் கைது செய்து வழக்குப் பதிவு செய்த சப்-இன்ஸ்பெக்டர் சுறுசுறுப்பாகிறார். அவன் சார்பில் அட்டெண்ட் செய்ய வந்திருக்கும் வக்கீல் வாதிராஜ் தன் கருப்புக்கோட்டை நெகிழ்த்தி விட்டுக் கொள்கிறார். அவன் சதுரக் கூண்டில் ஏறி நிற்கிறான்.

சண்டாளன். இவன் நூறு கொலைகூட செய்வான் என்று நம்பும்படியான தோற்றம். நீதிபதிக்குள்ளும் அதே இம்ப்ரஷன்!

நான்தான் சந்தோஷ்குமார். பேசறது, பேசப்போறதெல்லாம் சத்தியம். இந்து என் மனைவி, உயிர் மனைவி... எங்களது காதல் கல்யாணம். எங்களுக்குள்ள நிறைய கருத்து வேறுபாடு உண்டு. அது சில சமயம் பெரிசா கைகலப்பாகறது உண்டு. எனக்குக் கொலை பண்ற எண்ணமெல்லாம் கிடையாது. நான் ஒரு ஜென்டில்மேன். கொலை எல்லாம் பண்ணமாட்டேன். எனக்குப் பண்ணத் தெரியாது.''

—அவன் பேசப் பேச நீதிபதி வியப்போடு அதைக் கேட்டுக் கொள்கிறார்.

''ஒருநாள் என் வீட்டுக்கு வந்த மாமனார் சும்மா இல்லாம எங்க சண்டையைப் பார்த்து பயந்துபோய் போலீஸ் கேஸ்னு அடிச்சு நீட்டி என்னை இப்படி அவமானப்படுத்த நினைக்கிறார். பாவம் இந்து! அவளுக்கு இதுல எல்லாம் நிச்சயம் உடன்பாடு கிடையாது.''

சந்தோஷின் பேச்சைத் தொடர்ந்து நீதிபதியின் பார்வை இந்துமதியின் பக்கம் உடனே திரும்புகிறது. அவள் தலைகுனிந்துகொள்கிறாள். மௌனம் சாதிக்கிறாள்.

'அவன் சொல்வது நிஜமோ?' —எல்லோரும் இந்துவைப் பார்த்து அந்தக் கருத்தை வளர்த்திக்கொள்ளுமுன் அவளது வக்கில் குறுக்கிடுகிறார்.

''யுவர் ஆனர்... மிஸ்டர் சந்தோஷ் ரொம்ப சாமர்த்தியமாப் பேசறதா நினைச்சு தங்களுக்குள்ளே இருக்கற கருத்து வேற்றுமையையும் அடிதடி சண்டையையும் கோர்ட் முன்னே ஒத்துக்கிட்டார். அவர் கொல்ல முயற்சி செய்தார்ங்கறதுக்கு சாட்சியமும் நிரூபணமாயிடிச்சு. இத்தனைக்கும் பிறகு தன் செய்கைகளால இந்துங்கற அவர் மனைவி பாதிக்கப்படலைன்னு அவர் சொல்றது அபத்தம்.



மிஸ்டர் சந்தோஷ்குமார் ஒரு சாடிஸ்ட். மோசமான ஆண் வர்கத்தோட பிரதிநிதி. பெண் விடுதலை, பெண் சுதந்திரம் எல்லாம் பெரிதாக பேசப்பட்டு செயல்படுத்தப்படும் இந்தக் காலகட்டத்தில் இவர் மாதிரி நபர்கள் பெண் இனத்திற்கே விரோதி. இவர்களைக் கடுமையாத் தண்டிச்சாதான் மற்றவர்களுக்கு அது ஒரு பாடமா முன்னுதாரணமா இருக்கும். அத்தோட இப்பவே இந்துவுக்கும் மிஸ்டர் சந்தோஷ் குமாருக்கும் விவாகரத்துக்கான உத்தரவையும் விசேஷமான முறையில வழங்கும்படி பணிவோடு கேட்டுக்கறேன்.''

வக்கிலின் வாதத்தைக் கேட்ட நீதிபதியின் முகத்தில் தீர்க்கமான எண்ண ரேகைகள். ஒரு நெடிய சிந்தனை. பின்னர் அழுத்தமான ஒரு பேச்சின் ஆரம்பம்.

''மிஸ்டர் சந்தோஷ்குமார் தன் வாயாலேயே அடிதடி சண்டை, கருத்து வேறுபாடுகளை ஒப்புக்கொண்டதன் மூலம் ஒரு புனிதமான தாம்பத்யம் தங்கள் வரையில் புனிதமில்லாம இருந்ததை ஒத்துக்கிட்டிருக்கார். அவர் கொலை செய்ய முயன்றதும் நிரூபணமாயிருக்கு. சந்தோஷ்குமாரின் செயல்கள் கடுமையாக கண்டிக்கப்பட வேண்டியவை. எந்த ஒரு கருத்து வேற்றுமையிலும் வன்முறை தலையெடுக்கக்கூடாது. அதை அனுமதிக்க முடியாது.

காதலிச்சு திருமணம் செய்துகொண்ட சந்தோஷ்குமார் இப்படி நடந்துகொண்டது காதலுக்கு, கல்யாணத்துக்கு, புனிதமான ஆண் பெண் நட்புறவிற்கு... ஏன், எல்லாத்துக்குமே கேவலம்.

அவருடைய குற்றங்களை வகைப்படுத்திப் பார்த்து அவருக்கு ஆறு மாத கடுங்காவல் சிறை தண்டனை விதிக்கிறேன்.

முறைப்படி வழக்கு தொடர்ந்து இவர்கள் தங்கள் விவாகரத்தை ஊர்ஜிதப்படுத்திக்கட்டும். இங்கேயே இப்பவே இவர்களுக்கு விவாகரத்து வழங்க சட்டத்தில் இடமில்லை.

சந்தோஷ் சிறைவாசத்திற்குப் பிறகாவது திருந்தி மனைவியோடு மகிழ்ச்சியா வாழணும். அதைத்தான் இந்த நீதிமன்றம் விரும்புகிறது.''

நீதிபதி தனது உறையை முடித்துக்கொண்டார்.

''ஆறுமாசமா... எனக்கா? வெரிகுட்! யோவ் நீதிபதி, நீ பொழைச்சிக்குவே... பொம்பளைங்களுக்கு ஜால்ரா போட்டே நீ பொழைச்சிக்குவே...''

சற்று உரக்கவே பேசியபடி போலீசாருடன் நடக்க ஆரம்பித்தான் சந்தோஷ். முகத்தில் கோபச் சிவப்பு. திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடக்கிறான்... ஒரு சோகப் பதுமையாகத் தெரிந்த இந்துவை வெறித்து வெறித்துப் பார்த்தபடி...

இந்து அவனைக் கலங்கிய கண்களுடன் பார்க்கிறாள்.

''இவனுக்காக ஏம்மா இன்னும் அழுதுகிட்டு? முதல்ல விவாகரத்துக்கு கேஸ் ஃபைல் பண்ணுங்க. எண்ணி முன்னாத்தி அறுபத்திஅஞ்சு நாள்ல இந்தக் காட்டானை கழட்டி விட்டுட்டு மறுவேலை பார்ப்போம்''— பக்கத்தில் நிற்கும் அவளது வக்கீல் தேற்றப் பார்க்கிறார்.

இந்துவிடம் பதிலே இல்லை! மௌனம்...மௌனம்... அதுதானே இந்தியப் பெண்களின் அர்த்தபுஷ்டியுள்ள பாஷை? இந்துவின் இந்த மௌனம் சோக மௌனமா? இல்லை வக்கீலின் கருத்துக்கு இழைந்து கொடுக்கும் அர்த்தபுஷ்டியுள்ள மௌனமா? புரியவில்லை.

ஆனால் ஒருவனுக்கு மட்டும் அது மிக நன்றாகப் புரிந்தது.



கோர்ட்டுக்கு வெளியே பூவரச மர நிழலில் தேய்ந்த சோப்புத்துண்டு போன்ற தாடியோடு பைஜாமா ஜிப்பாவில் நிற்கும் அவன் மட்டும் இந்துவை ஒரு புரிந்த பார்வை பார்த்தான்.

அவள் அவனைக் கடந்து சென்றபோது அழைத்தான்.

''இந்து...''

நிமிர்ந்து அவனைப் பார்த்தவளுக்கு கண்ணில் முள் குத்தின மாதிரி இருந்தது.

இவன் பானு...பானு...

# 2

## அன்று

'**கா**தல் என்பது கங்கையல்ல...

கங்கையும் இன்று புனிதமல்ல!

காதல் என்பது காட்டாறு...

கனிந்த மனதைக் கொத்தும் வல்லூறு!

கல்லூரி ஆண்டு மலரில் பாலச்சந்திரன் என்னும் எம். எஸ் ஸி. இறுதியாண்டு மாணவரால் எழுதப்பட்டிருக்கும் அந்தக் கவிதையின் மேலேயே இந்துவின் பார்வை நிலைகுத்தியிருந்தது. பக்கத்தில் அவள் தோழி சச்சு என்னும் சரஸ்வதி.

''சச்சு, யாருடி இந்த பானு?''

''எம்.எஸ்.ஸி. கெமிஸ்ட்ரி ஸ்டூடண்ட். நீ கூட பார்த்திருப்பியே அமிதாப் மாதிரி நல்ல உயரம்டி...''

''இந்த காலேஜ்ல அமிதாப் தர்மேந்திராக்களுக்கா பஞ்சம்? காரக்டர் சொல்லுடி...''

''சரியா சொல்லணும்னா இந்த அமிதாப் ஒரு சரியான ஜிப்பா பைத்தியம். அடிக்கடி ஜிப்பாவோட காலேஜுக்கு வர்ற ஒரே பார்ட்டி. சைன்டிஸ்ட் தாடி இவனோட இன்னொரு ஸ்பெஷல்.''

'ஆங்ங்... ஞாபகத்துக்கு வந்துடிச்சு. ஆமா—இவருக்கு காதல்னா ஆகாதோ?'

''காதல் மட்டுமில்லைடி. காதலிக்கறவங்களையே பிடிக்காது...''

''என்ன காரணம்?''

''யாருக்கு தெரியும். ஆனா அவன் ஒரு வித்யாசமான கேரக்டர். அதுமட்டும் தெரியும்.''

'இந்த மாதிரி ஆட்களோடதான்டி நாம பழகணும்.'

''உனக்கு ஏன்டி இப்படி விபரீத ஆசையெல்லாம்?''

''விபரீத ஆசையெல்லாம் இல்லை. எந்த ஆம்பளையைப் பாரு பார்வையிலேயே நம்பளை ரேப் பண்ணிடறாங்க.'' வாழ்ந்து முடிச்ச கிழவன்கூட நாக்கை சப்பி ஜொள்ளு விடறான். அவ்வளவு மோசமான காலத்துல இப்படிகூட ஒரு ஆளுன்னா அவசியம் சந்திக்கணும் சச்சு.''

அதன்படியே சந்தித்தார்கள். போகன்வில்லா தழுவி விளையாடும் ஒரு மதில் சுவர் ஓரமாக அவன் புத்தகம் படித்துக் கொண்டிருந்த ஐந்து மணி மாலைப்பொழுதில்...

''ஹலோ...'' இந்துவின் வசீகரமான அழைப்பில் பாலச்சந்திரன் என்னும் பானுவிடம் நிமிர்வு.

''ஐ ஆம் இந்து. பி. எஸ். ஸி. ஜுவாலஜி ஃபைனல் இல என் ஃப்ரெண்ட் சச்சுங்கர சரஸ்வதி. இவளும் என் செட்.''

அவன் இணக்கமாக அதை அங்கீகரித்தபடி மில்லிகிராமில் சிரித்து என்ன விஷயம்? என்கிற கேள்வியை



புருவக்கூட்டில் ஏற்றினான். உன்னை எனக்கும் என் மனதுக்கும் நெடுநாளாக தெரியுமே என்கிற உணர்வையும் கண்ணில் பரப்புகிறான்.

''உங்க கவிதையை ஆண்டு மலர்ல பார்த்தேன். வித்யாசமா இருந்தது. அதான் பாராட்டலாம்னு வந்தேன்.''

அவளின் பாராட்டை அளவாக ஏற்றபடி ''நன்றி'' என்றான். சில வினாடி அவளை ஊன்றியவன் திரும்பவும் புத்தகத்துக்குள் வாக்கியங்களை வாசிக்க ஆரம்பித்தான்.

''என்ன சார்...வாயைத் திறந்து வேற எதுவுமே பேச மாட்டீங்களா?'' இந்து விடுவதாகத் தெரியவில்லை.

''பேச என்ன இருக்கு?''— இது பானு.

''என்ன இல்லை? நீங்க கவிஞர்—நான் ரசிகை. ஒன்னு உணர்வு. இன்னொன்று ரசனை. இரண்டும் சேர்ந்தா அதுதானே சரியான கலவை?''

''வாட் டு யூ மீன்?''— பானு அதிர்ந்து போனான்.

''நத்திங்... நீங்க டென்ஷன் ஆகாதீங்க. இரண்டும் சேர்ந்தான்னு சொன்ன உடனேயே நானும் நீங்களும் சேருவதுங்கற அர்த்தம் கிடையாது. நம்ம புத்திஜீவித்தனத்தோட சேர்க்கையைச் சொன்னேன்.''

''நம்ம புத்தி ஜீவித்தனம் ஒண்ணா சேர்ந்து யாருக்கு என்ன ஆகணும்? அதனால மழை பெய்யுமா? பயிர் தழைச்சுடப் போவுதா?''

பானுவின் அந்தக் கேள்விமுன் இந்துவிற்குள் கோபத் தாளிப்பு. சச்சு முனங்கினாள்.

''ரூ சரியான டென் மைனஸ் ஒன்னு கேசுடி...''— என்றாள் காதோரமாக. அது அவன் காதிலும் விழுந்தது. காது விடைத்து கண் சிவந்து உடம்பு நடுங்கும் கோபமாக உடனேயே உருமாறியவன்,

''ஏய், என்ன சொன்னே?''— என்றபடி சீற ஆரம்பித்தான்.

''சுரைக்காய்க்கு உப்பு இல்லை, கண்டெலிக்கு வால் இல்லைன்னு சொன்னேன்.''— என்றாள் சச்சுவும் விடாமல்.

''நீங்க ரைட் சென்ஸ்ல என்ன பாக்கவந்ததா தெரியலை.'' அவன் பேசினது போதும் என்றபடி அங்கிருந்து நடக்க ஆரம்பித்தான்.

''நில்லுங்க சார்... ஏன் ஓட றீங்க, நான் என்ன தப்பா கேட்டுட்டேன். பொம்பளைங்களைக் கண்டு இப்படி பயப்பட றீங்களே?''— இந்து வளைத்துப் பிடித்தாள்.

''ஐ ஆம் சாரி... நான் உங்ககூட பேச விரும்பலை.''

''அதான் ஏன்?''

''வெட்டிப் பேச்சு எனக்குப் பிடிக்காது...''

''எது வெட்டிப் பேச்சு?''

''நீங்க இப்ப பேசறதுதான்...''

''உங்க கவிதை மட்டும் ரொம்ப சுருப்படியோ?''

''அதுல என்ன சந்தேகம்?''

''அது என்ன சார் காதல்னா அப்படி ஒரு இளப்பம்?''

''காமம்தான் இப்ப காதல். என்னால காமத்தை நேசிக்க முடியாது.''

''காமம் நேசிக்கிற விஷயம் கிடையாது சார். நமக்குள்ள எரியற நெருப்பு அது. கட்டுப்படுத்த வேண்டிய விஷயம்— அது...''

''நெருப்பு, பருப்புன்னு கதையடிக்கா தீங்க. எனக்கு அப்படி எந்த நெருப்பும் இல்லை...''

''அப்படின்னா சச்சு சொன்னது சரிதான். நீங்க டென் மைனஸ் ஒன்தான்.''



''இருந்துட்டு போறேன். நீங்க போகலாம்.''

—அவன் பேசிவிட்டு நடையைக் கட்ட இந்துவும் சச்சுவும் தலைமேல் கைவைத்துக் கொண்டார்கள்.

''சச்சு, இந்த ஆளு சரியான பிஸ்கோத்துடி...''

—என்றாள் இந்து சலிப்போடு. அப்பொழுது எங்கிருந்தோ நாலுபேர் கூட்டாகச் சிரிக்கும் சப்தம்.

சற்றுத் தள்ளி பணக்கார வளர்ச்சியில் பன்னீர் மரம். மரக்கிளையில்கூட மஞ்சள் கழுத்துக் குருவிகள். கீழே கல்லூரியின் வாலிப வட்டம். அங்கிருந்துதான் சிரிப்பு சப்தம்.

அங்கிருந்து ஒருவன் நழுவி வந்து இந்து எதிரே தைரியமாக நிமிர்ந்து ''பேசத் துடிக்கற எங்களை கண்டுக்கவே மாட்டீங்க. இப்படி எவனாவது அம்மாஞ்சி சிக்குனா அவனைப் போட்டுக் குடையுவீங்க. உங்க டேஸ்ட்டே புரியலையேடி எங்களுக்கு.''— என்றான்

இந்து அவனை முறைத்தாள்.

''ரொம்ப முறைக்காதே... உனக்கு சின்ன கண்ணு தான் அழகு. அது முட்டைக்கண் ஆயுடப்போகுது.''— என்றான்.

சச்சுவுக்கோ பெரிய மார்பு. அது மேலும் கீழுமாக ஒரு ஆடு ஆடி அவனை வெறித்தது.

''என்னம்மா சச்ச, கழுத்துக்குக் கீழே இப்படி வளர்ந்துருக்கே... அதுக்குள்ளே தனியா எதையாவது சாப்பிடுவியோ?''— அவன் சீண்டல் அவர்களை படுகாயப் படுத்திவிட்டது.

அப்பொழுது யாரோ அவன் தோளைத் தட்டி திருப்பவும் அவன் முகம் அஷ்டகோணல் ஆனது.

''தலைவரே, நீங்களா... சாரி தலைவரே! சாரி வெரி சாரி...''— என்றான்.

''வெரி சாரியெல்லாம் அப்பறம் முதல்ல இவங்ககிட்ட மன்னிப்பு கேள்.''

''சரிங்க தலைவரே... மன்னிச்சிடு சச்சு...''— பேசி விட்டு அவன் அரண்டு ஓட, அவர்களைக் கண்டித்து துரத்திய நபரின் முகத்தில் அசத்தலான புன்னகை உதட்டில் அறிமுகம்...

''ஐ ஆம் சந்தோஷ்குமார். எம்எஸ்சி கெமிஸ்ட்ரி, செட்.''— அவனது நைச்சியமான அறிமுகத்தில் இந்து குளிர்ந்துபோனாள். அவன் தொடர்ந்து பேசினான்.

''ஆக்சுவலா காலேஜ் ஸ்டுடன்ட்ஸ் எல்லாம் ரொம்ப நல்லவங்க. ஒழுங்கா வந்து போயிட்டிருந்தவங்கதான். நம்ம அரசியல்வாதிகளும், சினிமாக்களும்தான் இவங் களை இப்படி ஆக்கிட்டாங்க.

எந்த சினிமாவுலையாவது காலேஜ் ஸ்டுடன்சை ஒழுங்கா காண்பிச்சிருக்காங்களா? காதல் கலாட்டான்னு அவங்க திரியறதா கதை பண்ணிப் பண்ணி, ஸ்டுடன்சும் அதை அப்படியே காப்பி அடிக்க ஆரம்பிச்சிட்டாங்க! நீங்க இதை எல்லாம் ஸ்போட்டிவா எடுத்துக்குங்க...'' என்றான் மிக சாந்தமாக.

அவனது அந்தப் பக்குவமான பேச்சு இருவருக்கும் மிக பிடித்தது. அவனைக் கனிவுடன் பார்த்தார்கள்.

''அப்ப நான் வரேன்...'' என்றபடி கிளம்பினான்.

இந்துவும் சச்சுவும் வாய் பேசமுடியாத மனக் கிளர்ச்சியில் இருநதார்கள்.

''இந்து... நம்ம காலேஜ்லகூட இப்படி ஒரு பர்சனா லிடியுள்ள ஆளாடி?'' சச்சு வாய் பிளந்தாள்.

''ரியலி வெரி இண்ட்ரஸ்டிங் கேரக்டர்.''— என்றாள் இந்து.



—இருவரும் மெல்ல பேசியபடி நடக்க ஆரம்பித் தார்கள்.

''நம்ம காலேஜ் ஒரு சரியான மிருகக்காட்சி சாலை சச்சு. இங்கதான் எத்தனை விதமான மனிதர்கள்.''— வியந்தாள். அப்பொழுது அங்கே தட்டுப்பட்டான் பாலு. புத்தகவாசிப்புக்கு நடுவே ஒரு முறை முறைத்தான்.

''ஹலோ ஜென்டிலமேன்...'' என்று இந்து அவனை வம்பாகச் சீண்டிவிட்டு நடக்கத் தொடங்கினாள்.

இருவரும் கல்லூரி எல்லையை விட்டே வெளியேறி விட்டார்கள்.

பன்னீர் மர நிழலில் குதூகலமாக அந்த நண்பர்கள் வட்டத்தில் இப்பொழுது சுந்தோஷ்குமார்!

''பிள்ளையார் சுழி நல்லா ஸ்ட்ராங்கா விழுந்துடிச்சு மச்சிகளா? எண்ணி நாப்பத்தெட்டு நாள்ள அவளை கன்னிக் கழிச்சுக் காட்டலேன்னா நான் சந்தோஷ்குமார் கிடையாது...'' —என்றான் அங்கே அவன்.

''அது என்ன நாப்பத்தெட்டு நாள்?''

''விரதமிருக்கறவங்க நாப்பத்தெட்டு நாள்தானே இருக்காங்க? எனக்கும் இந்துவை அனுபவிக்கணும்கற ஆசை ஒரு விரதம் மாதிரிதான்!''

—சந்தோஷை எல்லோரும் ஏக்கமாகப் பார்த்தார்கள்.

''உனக்கென்னப்பா தட்டிக் கேக்க ஆளில்லாத ஆள் நீ. கூந்தல் உள்ள மகராசன். எப்படி வேணா அள்ளி முடிஞ்சுப்பே...'' —என்றான் ஒருவன்.

''நீயும் முடிஞ்சுக்கடா... மனசு வெச்சா முடியும். அனுபவிக்கத்தான் வாழ்க்கை. அனுபவிக்கத்தான் இளமை. அனுபவிக்கத்தான் பெண்...''

''சத்தம் போடாதே சந்தோஷ். யாராச்சும் கேட்டா கல்லை விட்டு எறியுவாங்க...''

''கலிலியோவைக் கூடத்தான் கல்லால அடிச்சாங்க. அதுக்காக அவர் பொய்யா சொன்னாரு?''

''அப்படின்னா நீ சொல்றதுதான் வாழ்க்கை சித்தாந்தமா?''

''நிச்சயமா? அனுபவிக்கணும். விதவிதமா அனுபவிக்கணும். இளமை போறதுக்குள்ள அனுபவிக்க முடிஞ்ச அளவு அனுபவிக்கணும். அதுக்காக எதையும் செய்யலாம். தப்பே இல்லை...''

—அவனது விபரீத சித்தாந்தத்திற்கு பன்னீர் மரத்துக் காக்கை கண்டனம் தெரிவிக்கின்ற சாக்கில் எச்சமிட, கோபமானான் சந்தோஷ்.

''ஏய்த் தூ... ஓடு!''

# 3

## இன்று

''பானு... பானு...'' அவள் வரையில், வாழ்க்கையில் இனி நினைத்தே பார்க்கக்கூடாது என்று நினைத்த பெயர்... உச்சரிக்கவே கூடாது என்று உதறித் தள்ளிய பெயர். இதோ பெயருக்குரியவனே எதிரில்...

இந்துவுக்கு அவனைப் பார்த்த மாத்திரத்தில் ஒரு தினுசான அவஸ்தை இதயத்தில் ஒழுங்கில்லாத பம்ப்பிங். முகத்தில் பொட்டு பொட்டாய் வியர்வை...

காதல் என்றாலே விளக்கெண்ணையாகக் கருதி விலகி விலகி ஓடியவன் ஒரு கட்டத்தில் 'இந்து ஐ லவ் யூ' என்று இந்துவின் பின்னால் பித்தாக அலைந்ததை என்னவென்று சொல்ல?



காலம் எதையும் செய்யுமோ?

எவர் எதை எப்பொழுது எப்படிச் செய்வார்கள் என்பதை மனிதர்களைப் பொறுத்தமட்டில் நிர்மாணிப்பதே சிரமமோ?

அன்று 'ஐ லவ் யூ' சொல்லி 'ஐ ஹேட் யூ'— என்கிற பதிலை இந்துவிடம் பெற்றவன், இன்று எதற்காக வந்திருக்கிறான்?

இந்துவின் காதல் வாழ்க்கை கர்ண கடூரமாகி விட்டது இவனுக்கு எப்படித் தெரியும்— சொல்லிவைத்த மாதிரி வந்திருக்கிறானே? எதற்கு? எதற்கு?— இந்து புரியாமல் மிரண்டபடி நடக்கிறாள்.

பானு நெடுநேரம் தூர இருந்தே அவள் நடப்பதை கவனிக்கிறான்.

'நெருங்கி வந்து 'நலமா?' என்று ஒரு வார்த்தை கேட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?'— நினைத்துப் பார்க்கிறான். ஏக்கம் மூச்சில் சுடுகிறது. கண்ணில் பாலிதீனாய் நீர்த்திரை.

ஜிப்பா பாக்கெட்டை கைகள் துழாவுகின்றன. அகப்படுகிறது ஃபில்டர் சிகரெட். பற்றவைத்து புகை கக்கும்போது ஏதோ ஒன்று எங்கேயோ இதமாவதுபோல் ஒரு உணர்வு. சிகரெட்டின் மனித ஆதிக்கத்தின் மர்மமே இந்த உணர்வில் இருப்பதாகவும் ஒரு உள்ளுணர்வு.

வெகுதூரம் சென்றுவிட்ட இந்து ஆட்டோ ஒன்றில் ஏறி அமர்கிறாள். அருகில் அவள் தந்தை. 'திரும்பிப் பார்க்கக்கூடாது...திரும்பிப் பார்க்கக்கூடாது...பார்க்கவே கூடாது' என்று மனதில் மந்திரம்போல் சொல்லிக் கொள்கிறாள். இப்படிச் சொன்னால் எப்பொழுதும் உணர்வு எதிர்மறையாகத்தானே இயங்கும்? கழுத்து இலேசாகத் திரும்புகிறது. ஆட்டோ கிளம்பி வளையவும் நன்றாகவே பார்க்க முடிகிறது.

சிகரெட்டுடன் தென்படுபவனைப் பார்க்க ஆச்சரியத் தொற்றுதல். 'பாக்குகூட போடமாட்டேன் என்று சொன்னவன் ஆயிற்றே?'— கேள்விக் குடைவில் அநாவசியக் கவலை.

நினைவில் மறக்கப்பட வேண்டியவனை, மறந்து விட்டவனை ஏன் திரும்ப நினைத்து உரிமையோடு கவலைப்படுகிறோம். மனதின் விசித்திர இயல்பு அதுதானா?

வாழ்வின் பல நேரங்களில் நம்மை நாமே அறிவதில்லை.

அவள் அந்த உண்மையை எண்ணி வியக்கும்போது அப்பா கேட்கிறார்.

''யாரும்மா அந்த நபர்?''

—இந்துவிடம் ஆச்சரியம். அப்பா இத்தனைக் கூர்மையாகக் கவனித்திருக்கிறாரே?

'என் பழைய கிளாஸ் மேட்...பாலு...பாலசந்திரன்...' என்கிறாள் மிக மெலிதாக.

''உன் கேஸ் விஷயம் தெரியுமா?''

''அது எனக்குத் தெரியாது...''

''வந்த நபர்கிட்ட நீ ஒரு வார்த்தைகூட பேசலியேம்மா?''

''அவன் அவ்வளவு நல்லவன் இல்லப்பா..''

''பாத்தா அப்படித் தெரியலையே...''

''பாத்தால்லாம் தெரியாதுப்பா. பழகணும். நெஞ்சு முட்ட நினைவுகளோட பழகணும். அப்பத்தான் தெரியும். சமயங்கள்ள இந்த காலத்து ஆண்களை அப்பகூட புரிஞ்சுக்க முடியாது. இங்க யார் ராமன், யாரு ராவணன்னே தெரியமாட்டேங்குது.''



சொல்லும்போதே உடைந்துவிட்டாள். கண்களில் பிரவாகம்.

''ஆமா இனி என்ன பண்ணப்போறே?''

''என்ன பண்ணப் போறேன்னா?''

''வாட் யூ திங்க் எபௌட் யுவர் ஃபியூச்சர்? உன் எதிர்காலம் பற்றி என்ன முடிவெடுத்திருக்கேன்னு கேட்டேன்.''

''எதிர்காலம்னா என்னப்பா?''

''நாளைய பொழுதும்மா... ஏன் இப்படி விரக்தியா பேச ஆரம்பிச்சுட்டே...?''

''சந்தோஷமா பேச நான் என்ன இப்ப குதூகல இளவரசியா...? பூ பொட்டுகூட இனிமே நான் ரேஷன்லதாம்ப்பா வெச்சுக்கணும். வாழாவெட்டிக்கு பவிசைப் பாருன்னு கேலி பேசுவாங்கப்பா...''

''நீ தயவுசெய்து உனக்காக வாழணும்... இப்படி அநாவசியமா ஊர் பற்றிக் கவலைப்படக்கூடாது''

''ஊருக்குள்ற இருந்துகிட்டு, ஊரைச் சார்ந்து பிழைச்சுகிட்டு ஊரைப்பற்றிக் கவலைப்படக்கூடாதுன்னா என்னப்பா அர்த்தம்!''

''விதண்டாவாதம் பண்ணாதே! உன் வயசுப் பொண்களுக்கு தெளிவு போதாது. 'கனவு கனவு' இதுதான் நீங்க. எப்பப் பார் கனவுதான். எதுலபார் கனவுதான். எதுலையும் எதார்த்தம் கிடையாது. நிஜம் கிடையாது. அதான் சின்னப் பிரச்சினைன்னாலும் மலை சாய்ஞ்சாப்ல ஒடிஞ்சு போயிடறீங்க...''

''புருஷன் கொடுமை படுத்தறதும் நெருப்பால சுடறதும், குடிக்கச் சொல்றதும், கொலை செய்யவே முயற்சிக்கறதும் சின்னப் பிரச்சனையாப்பா.''

—இந்து இதயம் விம்மத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டாள்.

''யார் காரணம் இதுக்கு? நீ காரணம்... உன் காதல் காரணம். சொல்லச் சொல்ல கேட்காம ஓடிப்போய் அவன் கிட்ட கழுத்து நீட்டினது காரணம். அவனை பெரிய மன்மதன்னு நினைச்சு மயங்கினது காரணம். உன் அறியாமை காரணம். அவசரம் காரணம்... வேலியில போற ஓணானை எடுத்து உடம்புக்குள்ற விட்டுக்கிட்டு இப்ப குத்துதே குடையுதேன்னா என்ன அர்த்தம்...?''

—அவர் பொறிந்து தள்ளிவிட்டார். ஆட்டோ டிரைவருக்கே என்னவோ போலாகிவிட்டது. செயற்கையாக இறுமி ஒரு மூன்றாவது மனிதனாக தான் இருப்பதை வெளிக்காட்டினான்.

அவள் அழுதுகொண்டே வந்தாள். அப்பா சொல்வது வாஸ்தவம்தான் என்பதுபோல் அழுதாள்.

இளமைக்கு அழகு மட்டுமே உண்டு. ஆழ்ந்த அறிவே கிடையாது என்பது தீர்க்கமாகப் புரிந்த மாதிரி அழுதாள்.

இதெல்லாம் தலையெழுத்தா? ஏன் இப்படி விதி மயங்கியது? கேள்விக்கு விடை தெரியாமல் அழுதாள்.

''அழுதது போதும்... அழுகை கையாலாகாதவங்களோட கடைசி ஆயுதம். அழறதை நிறுத்து. வாழ்க்கையைப் பத்தி யோசிச்சு பேசு...''

—அவர் எடுத்துக் கொடுத்தார்.

''நீங்க சொல்றபடி கேக்கறேன்.''— என்றாள் அவள்.

''அப்படின்னா விவாகரத்துக்கு உடனே ஏற்பாடு செய்யறேன். மறுமணத்துக்கு நீ உன்னைத் தயார் படுத்திக்கோ...''

''அப்பா...''— தொண்டையில் மாட்டின் கொம்பு ஏறின மாதிரி விதிர்த்துப்போய் அவரைப் பார்த்தாள்.



''திரும்பவும் எனக்குக் கல்யாணமா?''

''ஆமாம்... அதுதான் உனக்கு சரியான தீர்வு.''

''வேணாம்பா. எனக்குக் கல்யாண ராசியே கிடையாது. போதும்பா ஒரு தடவை பட்ட பாடு...''

''பைத்தியம்... இது கெட்டுக் கிடக்கற காலம். ஆண் துணை இல்லாம வாழ நினைக்கறதும் தற்கொலை செய்துக்கறதும் ஒண்ணு.''

''அதான் நீங்க இருக்கிங்களேப்பா...''

''நான் கிழவன். இன்னும் எத்தனை வருஷம் உயிரோட இருப்பேனோ, யாருக்குத் தெரியும்...''

''அண்ணன் பாத்துக்காதா?''

''அவனுக்கும் குடும்பம் மனைவி மக்கள் உண்டு. அவன் அவங்களை பார்ப்பானா இல்லை உன்னை கவனிப்பானா?''

''நானும் அவன் குடும்பத்துல ஒருத்தி ஆயிட்டா?''

''கஷ்டம்... ரொம்ப கஷ்டம். நடைமுறை சாத்யமில்லாத பேச்சு இது. நீ சொல்றது சில நாளைக்குதான் சாத்யம் வாழ்க்கை முழுவதும் சாத்யமில்லை. மனுஷ மனசைப்பத்தி உனக்குத் தெரியாது...''

''மறுமணத்தை என்னால நினைக்கவே முடியலைப்பா...''

''உன்னோட இந்த நிலையை என்னால நினைக்க முடியலையே.''

—இதற்குள் ஆட்டோ அவள் வீட்டை அடைந்துவிட்டிருந்தது. வீடு திறந்தே இருந்தது. இருவருக்குள்ளும் ஆச்சரியம். அதைவிட ஆச்சரியமாக வீட்டைச் சுற்றி அக்கம் பக்கத்தின் திமுதிமுப்பான கூட்டம். கோவிந்தராஜன் திகைத்துப்போய் கேட்டார்.

''என்ன ஆச்சு... எதுக்காக இவ்வளவு கூட்டம்?''

''உங்களுக்கு விஷயம் தெரியாதா சார்? உங்க மாப்ளை போலீஸ்ல இருந்து தப்பிச்சுட்டார். இங்க வந்து பூட்டை உடைச்சு உள்ள நுழைஞ்சு கிடைச்சதை எடுத்துட்டு ஓடிட்டார். போலீஸ்லாம் வந்துட்டு இப்ப தான் போறாங்க.

—அப்பொழுது ஒரு சென்ட்ரி அங்கு வந்தார்.

''திறந்து கிடக்கற விட்டுக்கு நான்தான் சார் காவல். ஆறுமாச தண்டனையைக்கூட ஒத்துக்க முடியாதபடி தப்பி ஓடி ஆறு வருஷம் இனி உள்ள கிடக்கப் போறான் உங்க மருமகன். விதி யாரை விட்டது! எல்லாம் தலை எழுத்து.'' என்று சலித்துக்கொண்டார் அவர்.

இந்து விறுவிறு என்று வீட்டுக்குள் நுழைந்தாள். பீரோ திறந்திருந்தது. நகை நட்டுக்களைக் காணவில்லை. பாங்கில் ட்ராப் செய்து எடுத்து வந்திருந்த பணத்தையும் காணவில்லை! அவளுக்குள் பதட்டம் பல்லாங்குழி ஆடத் தொடங்கியது.

அப்பொழுது அந்தக் கடிதம் கண்ணில் பட்டது.

அவன்தான் எழுதி வைத்திருந்தான்.

நெருங்கியவளை வெள்ளைத்தாளின் நீல எழுத்துக்கள் என்னை வாசி என்றன.

'இந்து... இனி நீ நிதமும் செத்து செத்துத்தான் பிழைக்கப்போகிறாய். என்னை விலக்கிவிட்டு உன்னால் வாழவே முடியாது. உனக்கும் அதற்கான தைரியம் துளி கூடக் கிடையாது. இந்த தேசத்தில் என்னைப் பொறுத்த வரை பெண்கள் அடிமைகளாகத்தான் இருக்கவேண்டும். அவர்கள் ஆண்களுக்குக் கீழ்படிய மறுத்தால் அவர்களை என்ன வேண்டுமானால் செய்யலாம்.



உன்னையும் நான் என்ன வேண்டுமானாலும் செய் வேன். எப்பொழுது வேண்டுமானாலும் வருவேன்.

இப்படிக்கு
உன் அன்புக் கணவன்
சந்தோஷ்.

வாசித்தவளுக்கு முதலில் கலக்கம் வந்தது. அடுத்து மயக்கம் வந்தது.

16958
329/99

## 4

## அன்று அன்று அன்று

சந்தோஷின் ஸ்டைலைப் பார்த்தபோது யாருக்குமே மயக்கம் வரும். இந்துவுக்கு வந்ததில் ஆச்சர்யப்பட ஒன்றுமே இல்லை. சந்தோஷ் அத்தனை ஸ்மார்ட்டாக இருந்தான்.

பாலசந்தர் பார்த்தால் ஹீரோவாக ஸ்பாட்டிலேயே புக் செய்யும் வசீகரம். மணிரத்னத்தின் புதிய கண்டு பிடிப்பான அர்விந்துக்கு போட்டியான உடல் வாகு.

இப்படித்தான் காலேஜில் பேசிக்கொண்டார்கள். சில பெண்கள் கிழவர்கள் மனதைக்கூட கிள்ளும்படி ரம்யமாக இருப்பார்கள். மார்பிலும் இடுப்பிலும் மனிதக் கூட்டத் தையே வளைக்கும் வல்லமை அவர்களுக்கு இருக்கும்.

எப்பேர்ப்பட்ட சன்யாச மனமும் சபலத்துக்கு உள்ளாகும். அத்தகைய அழகில் ஆண்களும் பெண்கள் கண்ணுக்குத் தென்படுவதுண்டு என்பது அன்றைய தினம் காலேஜில் நிரூபணமாகிக் கொண்டிருந்தது.

லாவகமாக யமஹாவில் வந்து இறங்கியவன் நெற்றி யில் மெலிதாக விபூதிக் கீற்று.

''என்ன இது அதிசயமா விபூதியெல்லாம்?'' —இந்து கேட்கிறாள்.

''அதிசயமா இல்லை... அவசியமா! நான் நம்ம ஊர் ராஜ கணபதி பக்தன் இந்து. அவர் அருளாலதான் இவ்வளவுதூரம் வாழ்க்கைல முன்னுக்கு வந்துருக்கறவன்...''

''கேக்கவே ஆச்சரியமா இருக்கு. உங்களுக்கு இவ்வளவு கடவுள் பக்தியா?''

''என் பக்தி வேஷம் கிடையாது இந்து. அது நிஜம். ஆமா இன்னிக்கு என்ன உங்களுக்கு கிளாஸ் கிடையாதா?''

''எங்க புரொபசர் இன்னிக்கு லீவ். சோ... எல்லாரும் கிளம்பிட்டோம்...''

''எங்க?''

''வீட்டுக்குத்தான்...''

''எங்க வீட்டுக்கு வாங்களேன்.''

''என்ன விஷயம்.''

''சும்மா ஒரு கெட் டுகெதர் தான் இந்து. நீங்கள்ளாம் வந்தா எவ்வளவு நல்லா இருக்கும் தெரியுமா; அதுலையும் நான் இப்ப கொலுவெல்லாம் வெச்சிருக்கேன். நவராத்திரி வேளை.''

''வாட்... நீங்க கொலு வெச்சிருக்கீங்களா.''

''யெஸ் இந்து. பிரம்மச்சாரி கொலுவை வைக்கக் கூடாதா என்ன? கடல்மாதிரி வீடு சும்மா இருக்கற வரைக்கும் கோவில் மாதிரி எப்பவும் பூஜை புனஸ்காரம் தான்... இப்ப வெறிச்சோடிக் கிடக்கிறது எனக்குப் பிடிக்கலை இந்து...''

''ஏன் உங்கம்மா இப்ப என்ன ஆனாங்க?''

அவள் கேள்விமுன் அவன் நெடுநேரம் ஒரு செயற்கை சோக மௌனத்தை அடைகாத்தான். பின்னர் அதிலிருந்து



கண்ணீர் என்னும் குஞ்சுகளை கண்ணின் வழியாக பொறித்தான். பின் மெல்ல வாய் திறந்தான்.

''அம்மா இப்ப இல்லை... சாமிக்கிட்ட போயிட்டாங்க, திடீர் ஹார்ட் அட்டாக்!''

''மைகாட்...அப்ப இனி யார் வீட்டை பாத்துக்குவாங்க...?

''நான்தான். இனி எனக்கு வரப்போற மனைவி தான்.''

''கவலைப்படாதீங்க. உங்களுக்கு நல்ல மனைவி வாய்ப்பா. உங்க மனசு பூ மாதிரி. உங்களுக்கு வரப்போறவளும் பூம் பெண்ணாதான் இருப்பா.''

''உங்க மாதிரின்னும் சொல்லுங்க இந்து...''

''இந்துவுக்கு அவன் அப்படிச் சொன்னதும் ஜாமூன் ஜீராவில் தலைகுப்புற விழுந்ததுபோல் ஒரு பிரமிப்பு. அடுத்து பேச வார்த்தை வரவில்லை. மனதில் எதிர்பாராத சந்தோஷ டிராஃபிக் ஜாம்.

''சரி வர்றீங்களா?'' சந்தோஷ் யமஹாவை கிளப்பிய படி கேட்டான்.

''கட்டாயம் வரேன்...'' இந்துவிடம் ஒப்புதல்.

''அப்ப ஏறிக்குங்க...''

''நோ...நோ...நானும் தாரிணி, பார்வதி எல்லாரும் சேர்ந்து வரோம்...''

''ரொம்ப தாங்க்ஸ் நான் போய் பக்கத்து வீட்டு மாமியைக் கொண்டு டிபன்லாம் அரேஞ்ஜ் பண்றேன்.''

''ஓ...சந்தோஷ் அதெல்லாம் வேண்டாம் ப்ளீஸ்...''

''நோ சிந்து...நல்ல நாளும் அதுவுமா என் வீட்டுக்கு தேவதைகள் வரப்போறாங்க. அவங்களை வெறும அனுப்பிடறதா?'' பேசிவிட்டு பதிலுக்காகக் காத்திராமல் யமஹாவை விரட்டினான்.

அது கூட்டத்தைக் குடைந்து புகை துப்பி நெளிந்த விதத்தில் அசாத்ய வாலிப வேகம். இந்துவுக்குள் புதிதாக ஒரு உற்சாகம். சந்தோஷ் மனதில் நிரம்பித் ததும்பத் தொடங்கிவிட்டன.

அவனையே நெடுநேரம் பார்த்துக் கொண்டிருந்தவள் எதார்த்தமாகத் திரும்பியபோது பாலு!

பெண் என்றால் பேய் என்ற முடிவுக்கே வந்துவிட்ட மாதிரியான அதே பாலு. இந்துதான் பாலுவைப் பார்த்தாள். ஆனால் அவன் இவளைப் பார்க்காமல் புத்தகத்திலேயே கண்ணாக இருந்தான்.

''சுத்த ரசனை கெட்ட ஜென்மம்.'' என்று அவனை வாய்விட்டு சபித்தாள் இந்து. அது அவன் காதில் விழாமல் இல்லை. இதயத்தில் வலி ஏற்படாமலும் இல்லை.

கனேபரமான வீடு.

அவிழ்த்துவிட்ட கன்றுக்குட்டிபோல் போகன் வில்லா காம்பவுண்டு வாலில் துள்ளிப் பரவியிருந்தது. பெங்களூரின் மலர்த்தாவரம் அனைத்தும் மண் சாடிகளில் ஊட்டமாக வளர்ந்திருந்தன. சிலுசிலுவென்ற சூழ்நிலை. உள்ளே விஸ்தீரணமான ஹாலில் பதிமூன்று படி அடுக்கில் கொலு பொம்மைகள். முன்னாலே பஞ்சமுக விளக்கு. ஹால் முழுக்க தசாங்க வாடை. பக்கத்து வீட்டு மாமி சமையல் கட்டில் கேசரி கிண்டிக்கொண்டிருந்தாள்

''ஏம்ப்பா சந்தோஷ்... உனக்கெதுக்குப்பா இந்த கொலுவும் பூஜையும்? எல்லாம் கல்யாணத்துக்குப் பிறகு செஞ்சிண்டா என்ன?''

அவள் குரல் ஹாலை ஒட்டிய அறையில் மாமியின் ஒரே மகள் ராதிகாவை அணைத்தபடி இருக்கும் சந்தோஷின் காதில் விழுந்தபோது அவனிடம் சிரிப்பு.

''உங்கம்மா சொல்றதைக் கேட்டியா?'' அவன் ராதிகாவைப் பார்த்துக் கேட்கிறான்.



அவள் காமத்தீயில் உருகிக்கொண்டிருந்தாள். அவன் அணைப்பில் மார்புப் பழம் நசுங்கிப் பிதுங்கி அவனை கிளறிக்கொண்டிருந்தது. அவனுக்கு பதில் சொல்வதைவிட அவனை அதிகம் அணைப்பதில் ஆர்வம் செலுத்தினாள்.

கதவு வசதியாக தாழிடப்பட்டிருந்தது.

''சந்தோஷ்... எத்தனை நாளைக்கு இப்படியே... சீக்கிரமே ஓடிப்போய்...''

அவன் அவள் வாயை உடனே பொத்தினான்.

''வாலிபப் பருவத்துல சில்மிஷம் நிறைய பண்ணனும். வயசு போனதுக்கப்புறம் நினைச்சுகூட பார்க்க முடியாது. அடுத்த பிறப்புல நீ இதே ராதிகாவா, நான் சந்தோஷா பிறக்கறதும் சாத்யமில்லாத விஷயம். ஆகையால் கல்யாணம் அது இதுங்காம அனுபவிக்கணும். அனுபவிச்சுகிட்டே இருக்கணும்...''

''அப்ப கல்யாணம்?'' அவள் பதறிப்போய் கேட்டாள்.

''அவசரப்படாதே... மெள்ள பண்ணிக்கலாம். கல்யாணம்கிறது என்ன? காம விளையாட்டுக்கு சமூகம் கொடுக்கற லைசென்ஸ்தானே அது? லைசென்சோட விளையாடறதுல திரில்லே இல்லை ராதி...''

''உங்க பேச்சே எனக்குப் பிடிக்கலை. ஒரு பக்கம் பாத்தா நீங்க விவேகானந்தர். இன்னொரு பக்கம் பார்த்தா சரியான மதன காமராஜன். உங்களைப் புரிஞ்சுக்கவே முடியலை...''

''அவன் அதற்குமேல் அவளைப் பேசவிடாமல் தன் உதட்டாலேயே அவள் உதட்டை மூடினான். இரண்டு கைகளையும் இடைப்பக்கம் கொண்டு சென்று பாவாடைக் கட்டைக் குடைந்து கீழிறக்கமாக எதையோ துழாவத் தொடங்கினான்.

அவள் நெருப்புப் பிடித்த மாதிரி ஆனாள். அவன் தோளை இறுக்கிக்கொண்டாள். பெண்ணின் இந்த மாதிரி மெழுகுத்தனத்தை உத்தேசித்தே சமூகம் தீர்க்கமாக பல கட்டுப்பாடுகளை விதித்திருந்தும், அதையும் மீறி உருகும் பெண்ணை அந்த அறையின் செட்டியார் பொம்மை வேடிக்கை பார்த்தது. செட்டியார் முகத்தில் அழியாத சிரிப்பு. இப்படி முறையில்லாமல் பிடிக்கும் நெருப்பால் தான் எத்தனை பெண்மை கரைந்துபோயிருக்கின்றன?

இருவரும் நரம்புச்சூட்டோடு தகித்துக் கொண்டிருந்த சமயம் முதலில் கேசரியின் அதீத மணம் மூடிய கதவின் இண்டு இடுக்கில் நுழைந்து அவர்கள் கவனத்தைப் பிடித்து இழுத்தது. அடுத்து வாசலில் வந்து நின்ற ஆட்டோ!

ஆட்டோவிலிருந்து இந்து, தாரிணி, பார்வதி என்று ஒரு கல்லூரி பட்டாளமே இறங்கியது. கிழட்டு ஆட்டோ டிரைவர் இளமையான மூடில் செம கிக்கோடு தென் பட்டார்.

சப்தம் கேட்டு இருவர் பிடியும் இளகின. ராதிகா கலைந்து போயிருந்த ஸ்டிக்கர் பொட்டை திருத்திக் கொண்டு ரவிக்கை ஊக்கை மாட்டி தாவணியை சரி செய்துகொண்டு சுதாரிக்கப் பார்த்தாள். சந்தோஷ் உட னேயே சகஜ நிலைக்கு வந்துவிட்டான். கதவைத் திறந்து கொண்டு ஹலோ என்றபடி அவர்களை வரவேற்கத் தொடங்கினான்.

வந்தவர்கள் கொலுவைப் பார்த்து, வீட்டைப் பார்த்து மாமியைப் பார்த்து, மாமி டெல்லி பிளேட்டில் வைத்துத் தந்த கேசரியை சுவைத்து, வாய் பிளந்து, 'சந்தோஷ் நம்மை காதலிக்க மாட்டானா?' என்கிற சபல வயப்பட்டு, பெருமூச்சு விட்டு, மார்பைத் தாலாட்டி, முகத்தில் பிரகாசத்தை தேக்கின சமயம் ராதிகா அறையை



விட்டு புன்சிரிப்போடு வெளியே வந்தாள். சந்தோஷின் சினேகிதிகளைப் பார்த்து ஒரு துண்டுச் சிரிப்பு சிரித்தாள். மாமிக்கு ஆச்சரியம்.

''நீ எப்படி இங்க வந்தே?''

''இப்பதான்... இவாள்ளாம் வந்ததைப் பார்த்து...''

ராதிகாவிடம் காதல் நிமித்தம் சஜகர்ண பொய். தாரிணிக்கு அது துல்லியமாகப் புரிந்தது. 'நாம் வீட்டுக்கு வந்த வினாடி முதல் யாரும் வாசப்பக்கமாய் உள்ளே வரவேயில்லையே...?'

தாரிணியின் பார்வை ராதிகாவை அளக்க ஆரம் பித்தது. அவள் சந்தோஷை போய்வரவா? என்பதுபோல் பார்க்கிறாள்.

''ராதிகா நீ கேசரி சாப்பிட்டியா?''— அவன் கேட்கிறான்.

'உன்னே நீ அள்ளிக் கொடுத்த இன்பம் அதைவிட இனிப்பானது காதலனே...'— அவள் மனதுக்குள் பதில். ஆனால் உதட்டில் சொல்லும் தைரியமில்லாத சற்று மருண்ட முகநிலை.

''போடி... போடி. போய் படிக்கற வழியைப் பாரு. பெரிசா மேத்ஸ் சப்ஜெக்டை ஆசைப்பட்டு எடுத்துட்டா போதுமா? படிக்கறதை விட்டுட்டு இங்க என்ன வேலை உனக்கு...''

மாமியிடம் கண்டிப்பு. சந்தோஷ் குறுக்கிடுகிறான்.

''மாமி ராதிகாவை திட்டாதீங்கோ. இங்க எனக்கு ஒரு தங்கை இருந்தா எப்படியோ அப்படித்தான். ராதிகாவும்...''

சந்தோஷின் பேச்சில் ராதிகாவிடம் இடி இறங்கின மாதிரி அதிர்ச்சி. மாமியோ உச்சி குளிர்ந்து போகிறாள். ''ஒரே பொண்ணு... பையனே இல்லாம போயிடுத்தேன்னு

வாய்க்கு வாய் எங்காத்துக்காரர் புலம்புவார். நீ வந்துட்டப்பா எனக்கு மூத்த பிள்ளையா...'' என்று அவனை திருஷ்டி கழிக்கிறாள். இந்துவிடம் அதைக் கேட்டு வியப்பான வியப்பு. இந்த சந்தோஷ்தான் என்ன ஒரு விசித்திரமான பர்சனலாடி உள்ள மனிதன்?

''அடேயப்பா... நிமிஷத்துக்கு நிமிஷம் ஆளைக் கவர இவனால் எப்படித்தான் முடிகிறதோ?''— இந்து மாய்ந்து போகிறாள். ஆனால் ராதிகாவோ அமிலத்தில் ஒரு மடக்கு குடித்த மாதிரி ஆகிவிட்டிருந்தாள். வேகமாக அந்த வீட்டை விட்டும் நீங்கினாள்.

தாரிணியிடம் சரியான குழப்பம். 'இங்கே என்னவோ நடக்கிறது? ஏதோ மர்மம் இருக்கிறது!'

ஒருவழியாக எல்லோரும் சொல்லிக்கொண்டு கிளம்ப, வெற்றிலை பாக்குடன் பட்டு ரவிக்கைத் துண்டையும், ஒரு எவர்சில்வர் பாத்திரத்தையும் குங்குமச்சிமிழையும் வைத்து அனைவர்க்கும் மாமி மூலம் தந்தான் சந்தோஷ்.

பார்வதி வானில் மிதக்கத் தொடங்கிவிட்டாள்.

''சந்தோஷ். உங்களைக் கட்டிக்கப்போறவ ரொம்ப கொடுத்து வச்சிருக்கணும். இப்பவே இவ்வளவு காரியம் செய்யறீங்களே. இதெல்லாம் எங்க வேலை.''

''வேலைல ஆண் வேலை, பெண் வேலைன்னுல்லாம் இருக்கா என்ன... என்வரையில எல்லாராலேயும் எல்லா வேலையும் பாக்கமுடியும். பாக்கணும்...''— சந்தோஷின் சமத்துவப் பேச்சில் அவர்கள் முகம் மத்தாப்பானபோது மாமி நுழைந்தாள்.

''சந்தோஷ்... அப்ப நீ ஒரு பிள்ளையைப் பெத்துக் கொடேன் பார்க்கலாம்...''

எல்லோரும் அதைக் கேட்டு சிரித்தபடி விடைபெற்றுக் கொண்டார்கள். ஆட்டோ திரும்பக் கிளம்பியது. நாலி ரண்டு எட்டு பெண்களின் வளையல் கரத்தின் டாட்டா



வோடு அது திரும்பிச் செல்வதை பார்த்துக்கொண்டே இருந்தான் சந்தோஷ். மாமி புடவைத் தலைப்பில் கை யைத் துடைத்தபடி ''நான் அப்ப கிளம்பறேன்... பாலைக் காய்ச்சி வெச்சுட்டேன். ராத்திரி மறக்காம சாப்பிட்டுட்டு படு...'' என்றாள்.

சந்தோஷ் உற்சாகமாக அதைக் கேட்டு தலையாட்டி னான். மாமி கிளம்பிவிட்டாள், உள்ளே வந்து கதவைக் கூடச் சாத்தாமல் விசில் ஒலியில் ராக்கம்மா கையைத் தட்டு... என்று இசைந்து கரைய வாசல்பக்கம் கதவு அடைபடும் சப்தம். திரும்பினவன் எதிரே ராதிகா.

கண்களில் நீர் மாலை...

''ஏய்... என்ன இது இப்பதான் போனே... அதுக்குள்ற?''

விசில் சப்தம் நின்று அவன் உதட்டில் கேள்வி.

''ஆமா நான் உங்களுக்குத் தங்கை மாதிரியா?''— எடுத்த எடுப்பில் ராதிகா கேட்டாள். சந்தோஷிடம் லேசான மிரட்சி.

''ஏய் அது வந்து அது வந்து சும்மா விளையாட்டுக்குச் சொன்னது'' சமாளிக்கப் பார்த்தான்.

''தங்கைன்னா என்ன மீனிங்'' தெரியுமா சந்தோஷ்...''— வெடித்துவிட்டாள் ராதிகா.

''நெருப்புன்னா வாய் வெந்துடுமா ராதி... சும்மா சொன்னேன்...'' சந்தோஷிடம் வழிசல்.

''ஸ்டுப்பிட். நெருப்புன்னா வாய் வேகாது. ஆனா சில சொற்கள் வாழ்க்கையையே வேக வெச்சுடும். நீங்க எப்படி அப்படிச் சொல்லப்போச்சு?''

''சுத்தி எல்லாரும் இருந்தாங்க. அதான் அப்படிச் சொன்னேன்.''

''யார் இருந்தா உங்களுக்கு என்ன? நீங்க என்னை லவ் பண்றீங்க. தைரியமா அதை வெளிக்காட்ட என்ன தயக்கம்?''

''நீ படிச்சுகிட்டிருக்கற பொண்ணு. நானும் காலேஜ் ஸ்டூடண்ட். இது நம்மளை பாதிக்கும்...''

''ஸ்டூடண்ட்டான நாம காதலிக்கறது மட்டும் சரியோ?''

''அதுவேற ராதி... இளமையோட ஒரு பார்ட் அது?''

''அப்ப கல்யாணம்?''

''அது வேலை கிடைச்சதுக்கப்புறம்.''

''கட்டாயம் நடக்கும்தானே?''

''ஷ்யூர்...'' பேசிவிட்டு அந்த தகிப்பான வேளையிலும் அவளை அணைத்தான். அவள் இளகத் தொடங்கினாள். அடங்க ஆரம்பித்தாள். 'தேவனே... தேவனே...' என்று ஆழ்மனதில் நம்பிக்கைப் பாட்டு படித்தாள். நாளை இவன் ராட்சசனா மாறக்கூடியவன் என்கிற விழிப்போ, கணிப்போ இல்லாத கரைவு அவளிடம்.

பெண்மையின் மென்மைக்கு இப்படி ஒரு நம்பிக்கை கூடவே கூடாது.

ஆட்டோவில் இருந்து எல்லோரும் இறங்கிக் கொள்ள கடைசியாக இந்து இறங்கிக்கொண்டாள். வீட்டுக்குள் நுழையும்போது ஏகாந்தமான உணர்வு. அதைப் பார்க்கவும் அப்பா கோவிந்தராஜனிடம் துல்லியமான ஒரு கணிப்பு.

''எங்கம்மா போய்ட்டு வரே?''

''என் ஃப்ரெண்ட் வீட்டுக்கு...''

''நெத்தியில குங்குமம்லாம் பளிச்சுன்னு...''

''யெஸ்ப்பா... கொலு வெச்சிருந்தாங்க, அதான்!''



''குட்... ரொம்ப சந்தோஷமாத் தெரியறியே?''

''ஆமாப்பா... சில ஆண்கள் ஐ மீன் எங்க காலேஜ்ல ஒருத்தர் என்னை ரொம்ப வியப்படைய வைக்கறார். வாட் எ கிரேட் பர்சனாலிடி...''

''அப்படியென்னம்மா அந்தப் பர்சனாலிடி?''

''ராமாயணத்து ராமனேதாம்பா...''

''ராமனா யாரும் இந்தக் கலியுகத்துல இருக்க முடியாதும்மா...''

''ஏம்ப்பா நீங்க இல்லியா?''

''யாரும் இருக்க முடியாதுன்னா நானும்தாம்மா...''

''என்னப்பா குண்டைத் தூக்கிப் போட்றீங்க...''

''நான் குண்டைத் தூக்கிப் போடலை. நீதான் போடறே. இந்தக் காலத்துப் பசங்களை ராமன் கிருஷ்ணன்னு நம்பி மோசம் போயிடாதே...''

—அவர் எச்சரிக்கைக்குத் கெடிகார மணி ஒத்துழைப்பு தந்து சப்திக்க ஆரம்பித்தது.

## 5

## இன்று இன்று இன்று

**சோ**கமான அந்த வீட்டின் நடுஹாலில் வெட்டப் பட்ட மரம்போலக் கிடக்கிறாள் இந்து. தாடையை வருடியபடி அருகில் கோவிந்தராஜன்.

கெடிகாரம் மட்டும் பலனை எதிர்பார்க்காத பணியில் டக்...டக்...டக்... மணி மூன்றாகி விட்டிருந்தது. பசி மறந்து, தாகம் மறந்து, எவ்வளவு நேரம்தான் இப்படிக் கிடக்க?

'ஏம்மா இப்படியே உக்காந்துக்கிட்டிருந்தா எப்படி?' அவரே ஆரம்பிக்கிறார்.

''என்னப்பா பண்ண, பேசாம செத்துடலாமா?'' அவரிடம் திகைப்பு.

''என்ன பொண்ணும்மா நீ... இப்ப சாகவேண்டிய அவசியம்?''

''வாழறதுல என்னப்பா அர்த்தம் இருக்கு. இந்த ஆளு இப்படி ஜெயிலுக்குப் போகாம தப்பி நம்மளையே மிரட்ட ஆரம்பிச்சுட்டாரே...''

''ஓ... அதான் கலக்கமா? அவன் ஒரு பங்கு மிரட்டினா நீ அவனை இரண்டு பங்கு மிரட்டு...''

''எனக்கு அந்தமாதிரி லாங்வேஜே வராதுப்பா...''

''வரணும்... கட்டாயம் வரணும்... வந்தாத்தான் வாழ்க்கை!''

''அடிக்கு அடி. வெட்டுக்கு வெட்டு... எப்படிப்பா சரியாகும்?''

''மனுஷங்களுக்கு சரியாகாது. ஆனா மிருகங்களுக்கு அதுதான் சரி...''

''எனக்கு அதையெல்லாம் நினைக்கவே பிடிக்கலைப்பா...''

''அப்பப் பிடிக்கறதை நினை...''

''எனக்கு இப்ப தனிமைதான் பிடிச்சிருக்கு...''

''நோ... தனிமை உன்னைக் குழப்பிடும். நீ இப்பத்தான் கூட்டத்தோடு இருக்கணும்.''

அவள் நெடுநேரம் மௌனம் காத்தாள். பின்பு கொஞ்சமாக அழுதாள். 'இப்படி ஆகிவிட்டதே'—என்று நினைத்து நினைத்து அழுதாள்.



'கந்தர்வன், சௌந்தர்யன், வசீகரன் லட்சணன், மன்மதன், மந்திர புருஷன்' என்றெல்லாம் எண்ணி தன்னையே எழுதி வைத்தவனுக்கு, கல்யாணமாகி ஆறு மாதம் வரை அன்பு மழை பெய்தவன் ராதிகா விவகாரத்தில்தான் முதலில் அம்பலமானான்.

''அக்கா...'' —ராதிகாவின் அழைப்பின்போது சமையல்கட்டில் பூண்டு குழம்பிற்கு வெங்காயம் உரித்துக் கொண்டிருந்தாள் இந்து.

''வா... ராதி என்ன விஷயம்?'' —கேட்டு முடிக்குமுன் அங்கேயே வயிற்றைப் பிரட்டி எடுக்க வாயில் எடுத்தாள் ராதிகா.

''என்னாச்சு உடம்புக்கு?'' —பதறினாள் இந்து.

''உடம்புக்குள்ற உடம்புக்கா! அதான் இந்தப்பாடு...'' —ராதிகாவிடம் கலங்கியக் கண்களோடு பதில்.

''என்ன சொல்றே ராதி?'' —பூண்டு வாசத்துடன் அவளை அணைத்தவளை ராதிகாவின் கண்ணீர் விழிகள் பனிப்போடு பார்க்கின்றன.

''அக்கா நான் இப்போ அம்மா ஸ்டேஜ்ல இருக்கேன்.''

''என்னம்மா சொல்றே...''

''எனக்குள்ள ஒரு உசிர் வளர்றது!''

—இந்துவிடம் திகைப்பு. விழியில் ஏரிபோல் விரிவு. மூச்சில் நூலாட்டம் சுவாசம்.

''என்ன ராதி சொல்றே நீ?''

''ஆமாக்கா, நான் இப்ப மூணு மாசம் முழுகாம இருக்கேன்...''

''அடிப்பாவி... யாருடி காரணம்?''

''அதைத் தெரிஞ்சு என்னக்கா பண்ணப்போறே. நீ யாவது நல்லா இரு...''

''நீ என்ன சொல்றே?''

''ஒண்ணுமில்லைக்கா... எனக்கு யார் கிட்டேயாவது வாய்விட்டு அழணும்போல இருக்கு. அதான் வந்தேன்.''

''டீ... என்னென்னமோ பேசறியே. என்ன ஆச்சு உனக்கு. யாருன்னு சொல்லு. நான் உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கறேன்.''

''அது உன்னால முடியாதுக்கா'' —என்றபடி வாந்தி எடுத்த சாத விழுதுகளை கையால் வழித்து எறிந்து தண்ணீர் விட்டுக் கைகழுவ ஆரம்பித்தாள்.

''ஏன் முடியாது ராதி?''

''முடியாதுன்னா முடியாதுக்கா... நீ அதைவிடு. ஆமா உன் புருஷன் உன்கிட்ட எப்படி நடந்துக்கறார்?''

''அவருக்கென்ன குறை, நல்லாத்தான் நடந்துக்கறாரு.''

''நல்லான்னா எப்படிக்கா?''

''எதுக்கு இதை எல்லாம் கேக்கறே?''

''காரணமாத்தான்...''

''எனக்கு ஒரு குறையும் இல்லைம்மா...''

''நல்லா யோசிச்சு சொல்லுக்கா. எனக்கு உண்மை தெரிஞ்சா கேவலம்னு எதையும் மறைக்காதே...''

''ராதி. உன் பேச்சு பெரிய புதிரா இருக்குடி. சத்தியமா சொல்றேன். சந்தோஷ் என்னை சந்தோஷமாத்தான் வெச்சிருக்கார்... ஆனா அப்பப்ப குடிக்கச் சொல்றார்.''

''எப்பவும் நீங்க இப்படி இருக்க முடியும்கற நம்பிக்கை இருக்கா?''

''ராதி... நேரடியா விஷயத்துக்கு வா...''

—இந்துவின் குரலில் மெல்ல பதட்டம் பரவத் தொடங்கியது.



''அக்கா... நான் மோசம் போயிட்டேன்கா. ராமன் லட்சுமணன்னு நம்பி உன் புருஷனை உனக்கு முன்பே காதலிச்சு ஏமாந்து இப்ப கர்ப்பமாகி நிக்கறேன்கா...'' ராதிகா அப்படிச் சொன்னபோது இந்துவிற்குக் கண்ணில் முன் ஏறினமாதிரி ஆகிப்போனது.

ஒரு ப்ளஸ் டூ படிக்கும் பெண்ணின் அந்தப் பேச்சில் இதயம் எண்ணைச் சட்டியில் விழுந்தமாதிரி ஒரு பொறிப்பு.

''ராதி நிஜமாவா சொல்றே?''

''சத்யமாக்கா. நீ ஜாக்கிரதையா இருக்கணும். அதுக்காகத்தான் இதைச் சொல்றேன். உன் வாழ்க்கைல குறுக்கிட்றுவேன்னு பயப்படாதக்கா. நான் யார் வாழ்க்கையிலயும் குறுக்கிட விரும்பலை.

செக்ஸ் ரொம்பப்பேரை சாய்க்கற விஷம்கா. அந்த விஷம்தான் என் வாழ்க்கையையும் விளையாடிடுச்சு. வயசுக்கு மீறின என் செயலே எனக்கு எமனாயிடுத்து.

புஸ்தகம், சினிமா எல்லாம் என்னைப்போன்ற பெண்களுக்குள்ள எரியற காமத்துக்கு எண்ணை விடற ஐட்டங்கள். அந்த நெருப்புல குளிர் காயத்தான் இந்த தேசத்துல எத்தனைபேர்... எத்தனைபேர்?

ஒரு பொணம்கிட்ட ஒரு பெண் அம்மணமா நின்னா அதுகூட எழுந்து நின்னுடும்கா. அவ்வளவு மோசம்கா இப்ப இருக்கற காலம்.

சந்தோஷைச் சொல்லிக் குத்தமில்லைக்கா. எல்லாத்துக்கும் காரணம் நான்தான். எனக்குக் கட்டுப்பாடு இல்லை. என்கிட்ட தெளிவு இல்லை. தப்பு சரியை புரிஞ்சுக்கற அறிவு இல்லை. நான் என்னை தொலைச்சுட்டேன். என்னை தொலைச்சுட்டேன்கா...'' விக்கி, வெடித்து அவள்மேல் ராதிகா விழுந்து புரண்டு அழுத

போது வாசல்பக்கம் யமஹா நிற்கும் அரவம். சந்தோஷ் தான் இறங்கி வந்தான். உள்ளே இருவரையும் பார்த்து லேசாக விதிர்த்தான். ராதிகா அவனை நிமிர்ந்து பார்த்து விட்டு தலையை கவிழ்த்துக்கொண்டாள். இந்துவின் பார்வையில் நெருப்புப் பூச்சிகளின் படபடப்பு. சாட்சாத் அந்த ராமபிரான் என்று நினைத்தவன் இப்படிக் கிருஷ்ண லீலா கண்ணனாகி விட்டானே... என்றால் இத்தனைக் காலமும் நம்மீது காட்டிய பரிவும், பாசமும் பொய்யா? தவிப்பில் காது மடலில்கூட வியர்வை. கூந்தலின் ஒரு கற்றை கண்முன் விழுந்து ஒரு சின்ன ஆட்டம் போட்டுக் கொண்டிருக்க ராதிகா அங்கிருந்து நழுவ ஆரம்பித்தாள்.

''உன்னை நான் டாக்டரைப் பார்க்கச் சொன்னேனே பார்க்கலையா நீ?'' —நழுவ ஆரம்பித்தவளைப் பார்த்துக் கேட்டான். குரலில் துளிகூட பதட்டமில்லை. அவளோ நின்று அவனை முறைத்தாள். இந்துவிடம் அதைக் கேட்க ஸ்தம்பிப்பு. ராதிகா எதுவும் பேசாமல் முறைப்போடு நடக்கத் தொடங்கினாள்.

''ஏய்...காலாகாலத்துல போய் வயித்தை கழுவிக்கோ. இல்லேன்னா எனக்கு ஒண்ணும் நஷ்டம் இல்லை. எனக்கு எதுவும் தெரியாதுன்னு சத்தியம் பண்ணக்கூட நான் தயங்கமாட்டேன்.''

—அவன் பதில் ராதிகாவின் காதில் விழவில்லை. ஆனால் இந்துவின் காதில் தீர்க்கமாகவே விழுந்தது.

''சந்தோஷ்...''— என்றாள் குரல் நடுங்க—

''தோ பார் இந்து...நீங்க என்ன பேசியிருப்பீங்கன்னு எனக்கு நல்லா தெரியும். நீ தேவையில்லாம அலட்டிக் காதே. எப்பவும் நீதான் என் மனைவி. யாரையும் நான் மனைவியாக்கிக்க மாட்டேன். பயப்படாதே...''

—அவன் பேச்சில் அவளுக்குள் கழுகு வட்டம். ''சந்தோஷ் நீங்களா இப்படி நடந்துகிட்டது? நீங்களா இப்படியெல்லாம் பேசறது?''



''தோ பாரும்மா, இந்த தேசத்துல நூத்துக்கு தொண்ணூறு பசங்க என் மாதிரிதான். ஏன் உன் மாதிரி பெண்கள் மட்டும் என்ன? நம்ம மாதிரிதான்...''

''நம்ப மாதிரின்னா?'— இந்துவின் குரலில் ரௌத்ர மான தொனி.

''நம்ம மாதிரின்னா வாழ்க்கை வாழ்லதற்கே டைப்.''

''அப்படின்னா?''

''ஏய் என்ன தெரியாத மாதிரி பேசறே? ஒரு ஆணும் பெண்ணும் விரும்பினா ஜாலியா இருக்கறதுல தப்பே கிடையாது இந்து...''

''அப்ப மொராலிடிக்கு என்ன அர்த்தம் சந்தோஷ்''— உடைந்த குரலில் கத்தலாகக் கேட்டாள் இந்து.

''மொராலிடியா? அப்படின்னா என்ன இந்து. எனக்குத் தெரிஞ்சு கிளாரிட்டி, பர்சனாலிடி, குவாலிடி இதெல்லாம்தான் உண்டு.''

''வல்காரிடின்னும் ஒண்ணு உண்டு. அது தெரியுமா உங்களுக்கு...''

''சரி, என்ன அதுக்கு?''

''உங்ககிட்ட அது நிறைய இருக்கு.''

''இருந்துட்டு போகட்டும். நீ ஏன் அலட்டிக்கற?''

''எனக்கு என் புருஷன் ராமனா இருக்கணும்?''

''இம்பாஸிபிள் இந்து. இந்த ராமன் கிருஷ்ணன் கதை எல்லாம் கப்சா. நம்மளோடது டார்வின் தத்துவம் தான். மிருகங்களுக்கு கற்பு கிடையாது—அதெல்லாம் கெட்டா போச்சு?

செக்ஸ் வந்து பார்ட் ஆஃப் தி லைஃப்மா. உடம்புல தெம்பு இருக்கற காலத்துல விதம் விதமா வகை வகையா அனுபவிச்சுக்கறதுல தப்பே கிடையாது.''

''அப்ப நான் யார்கிட்ட வேணா போகலாமா?''

''அது கல்யாணத்துக்கு முந்தின்னா ஓ.கே. கல்யாணத்துக்குப் பிறகுன்னா நான் உன்னைத் திருப்திப்படுத்தலைன்னா தான் இப்படி நினைக்கனும் நான்தான் டெய்லி மூணு...''

''பாவி...என்ன பேச்சு பேசறே நீ... உருப்படுவியா?''

''நிச்சயமா...நான்தான் சூப்பரா இருப்பேன்.''

—சந்தோஷ் அப்படிச் சொன்னபோது பக்கத்து வீட்டில் இருந்து ஓங்கலான அலறல். என்ன என்று ஓடிப் போய்ப் பார்த்தபோது ராதிகா தூக்கில் தொங்கிக்கொண்டிருந்தாள்!

முகம் கழுவி நெற்றியில் விபூதிக் கீற்றோடு வந்த கோவிந்தராஜன் சிலைபோல் உட்கார்ந்து உலகை மறந்துவிட்டிருந்த இந்துவைப் பார்த்து திரும்பக் கவலையானார்.

''இந்து. என்ன இது.ச எலி குப்பை கூளங்களைக் குடைஞ்சு அதுக்குள்ள நுழைஞ்சுக்கற மாதிரி உன் மனசை பழைய நினைவுக்குள்ளேயே திருப்பித் திருப்பி சோர்ந்து போறியே. உனக்கு ஏற்பட்டிருக்கிற சோகம் இந்த உலகத்து பிரச்சினைகளோடு ஒப்பிடும்போது சுண்டைக் காய். மனசை நிமிர்த்து. நல்ல வாழ்க்கை இருக்குன்னு நம்பி செயல்படத் தொடங்கு...''

—அவளை உசுப்பிவிட்டார். இந்து, நிமிர்ந்தாள். ''ராதிகா ஞாபகம் வந்துடுச்சுப்பா...'' என்றாள் அவள். அதைக் கேட்க அவர் முகத்திலும் ஆசிட் பட்ட மாதிரி கசகசப்பு.

''ஹும் பாவம் அந்தப் பொண்ணு...''—என்று உதடு முணு முணுக்கிறது.

''அவ மட்டுமாப்பா...?''



''ஆமாம்மா... உன்னைப் பார்த்து நான் பாவப்பட மாட்டேன். அவ உலகத்தை விட்டே போயிட்டவ. நீயோ வாழப்போறவ. உன்னைப் பார்த்து நான் பாவப்படக் கூடாது. அது உனக்குக் கெடுதல்.''

''புதுசா இனி ஒரு கெடுதல் என்னப்பா நடக்கணும்?''

''கொஞ்சம் வாயை மூடிக்கறையா? வாயைத் திறந்தா புலம்பல்தானா? பட்டுப்போன மரம்கூட துளிர்க்கற காலம்மா இது. மனோசக்தி பத்தி உனக்கு என்ன தெரியும்...''

''மனசே இல்லை, சக்திக்கு எங்கப்பா போக?''

''லுக் இந்து நீ பழைய குப்பையைக் கிளறக்கூடாது. நீ நல்லா வாழுவே. வாழப்போறே. நான் பாக்கப் போறேன். உன் மனசை அதுக்கு தயார் படுத்திக்கோ...''

—அப்பொழுது வாசல் பக்கம் யாரோ நிழல்போலத் தெரிய, கோவிந்தராஜன் பார்வை அந்தப் பக்கமாகச் சென்றது. வாசல்பக்கம் பானு! இந்து... இந்து... என்று பித்தாக அலைந்து இந்துவால் ஒரு பிய்ந்த செருப்பைப் போல் தூக்கி எறியப்பட்ட அதே பானு.

அது ஒரு அநியாயமான சோகக் கதை.

## 6

### அன்று அன்று அன்று....

'சத்தியமாய் காதல் காமமே...
சதைப் பசிக்கு இப்படியொரு புனிதப் பெயரா?
காதலை அன்பென்கிறது அகராதி.
அன்பு அனைவர்க்கும் பொது அல்லவா?

கணிகையை காதலிப்பவர் ஏன்
காக்கை குருவியை காதலிப்பதில்லை?
கன்னியை வசப்படுத்த துடிப்பவர் ஏன்
கன்னிமை கடந்தோரை வசப்படுத்துவதில்லை?
காதலை பொதுவில் வையுங்கள்.
அன்பான அனைவரையும், அனைத்தையும்
காதலியுங்கள்...
சதைநேசம் காதலாகாது...இப்போதெல்லாம்
சத்தியமாய் காதல் காமமே!

—பாலச்சந்திரன்

கல்லூரி கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற அந்தக் கவிதை நோட்டீஸ் போர்டில் டிஸ்ப்ளே செய்யப்பட்டு எல்லோராலும் விமர்சிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

"பாலுவோட கவிதையை நான் ஒப்புத்துக்கறேன்." என்று தொடங்கியிருந்தாள் தாரிணி.

"என்னடி இது... அந்த லூஸ் கவிதையைப் பத்தி ஒப்புத்துக்கறேங்கறே..."—ஒருத்தி கேட்டாள்.

"நான் ஆளைப் பார்த்துக் கவிதையை எடைபோட விரும்பலை. கவிதையில இருக்கற கருத்தைப் பார்த்து சொல்றேன்."

"அப்படி என்ன பெரிய கருத்து?"

"இப்பல்லாம் காதல்ங்கறது காமம் தாண்டி, ஐ ஹெல் நோ டவுட்."

"எல்லாரும் ஒண்ணும் அப்படி கிடையாது..."

"நோ... எல்லாரும் அப்படிதான்."

"ஒத்துக்கமாட்டேன். நம்ம காலேஜ்ல எவ்வளவோ ஜெண்டில்மேனெல்லாம் உண்டு. ஏன் நம்ம சந்தோஷை எடுத்துக்கயேன்."



ஒருத்தி சந்தோஷைப் பிடித்து இழுக்கவும் அங்கே சிந்தனையில் இருந்த இந்துவின் தலை சட்டென்று நிமிர்ந்தது. அப்பொழுதுதான் அவன் அவள் மனதை ஆக்ரமித்திருந்த ஆரம்பக் காதல் நிலை.

"சந்தோஷா, இருந்தாலும் சரி, இதை எழுதின பாலுவாலே இருந்தாலும் சரி பொம்பளை விஷயத்துல செக்ஸ்ல கண்ணியமால்லாம் நடந்துக்கமாட்டாங்க. நடந்துக்க முடியாது..."

"எதை வெச்சு அப்படிச் சொல்றே?"

"இப்போதைய கால கட்டத்தை வெச்சு..."

"எந்த கால கட்டத்துலேயும் நல்லதும் இருந்துருக்கு. கெட்டதும் இருந்துருக்கு. மாதவி வாழ்ந்த காலத்துல கண்ணகி வாழலையா என்ன?"

"நீ சம்பந்தமில்லாம எங்கேயோ போறே. இப்போ காதல்னா காமம்தான். என் அனுபவத்துல அதைச் சொல்றேன். என்னை ஒருத்தன் டாவ் அடிச்சான். நீ இல்லாம என்னால உயிர் வாழமுடியாதுன்னு சொன்னான். ஏன்னு கேட்டேன். உன்னைப் பாக்காம இருக்க முடியலை. உன் நினைப்பு உருக்குதுன்னு சொன்னான். அதான் ஏன்னு கேட்டேன். எனக்கு உன்பேர்ல காதல்னான். அப்படின்னா என்னன்னு கேட்டேன். அன்புன்னான். உலகத்துல எல்லாரும் எல்லார் பேர்லையும் அன்பு செலுத்தணும். ஈ எறும்பைக்கூட நேசிக்கணும். அதனால அதுல ஒண்ணும் தப்புல்ல. ஆனா அப்படி அன்பு செலுத்தறதுக்கும் என்னைப் பாக்காம இருக்க முடியலைங்கறதுக்கும் சம்பந்தமில்லையேன்னு சொன்னேன்.

அந்த அன்பு வேற இந்த அன்பு வேறன்னு சொன்னான். அன்புலகூட டபுள் ரோலான்னு கேட்டேன். ஆமா இது வாலிப அன்பு—அதாவது காதல்னு சொன்

னான். அப்ப என்ன போன்ற எல்லா பெண்கள் மேலையும் காதலான்னு கேட்டேன். இல்லை, எனக்கு யார் அழகுன்னு படுதோ அவங்க மேலைன்னு சொன்னான். அழகு, உடம்பு சம்பந்தப்பட்டதாச்சேன்னேன். யெஸ்...நீ எல்லோரா ஓவியம். அஜந்தா சிற்பம்னான். அப்புறமாக நிலவே மலரே குயிலே குரங்கேன்னு ஒரே பினாத்தல்...என் பர்சனாலிடி எனக்குத் தெரியாதா? இருந்தும் எனக்குள்ற அவன் வர்ணனைகளால் மயக்கம். எங்க வீட்ல என்னை மூதேவின்னு திட்டுவாங்க. அவனோ ஸ்ரீதேவின்னான். சினிமாக்கு கூப்பிட்டான். போனேன். முதல்ல கையை தொட்டான். தோள்ள கை போட்டான். அப்புறம் நண்டு மாதிரி ஊற ஆரம்பிச்சுட்டான். ஏய் இதெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம்னு சொன்னேன். பரவால்ல... இப்பகூட வெச்சகக்கலாம்னு . சொல்லி என்னை பாடா படுத்திட்டான். போதும்போதும்னு ஆயிடிச்சு. ஐயா சாமி என் வயித்தை நிரப்பி விஷம் குடிக்க வெச்சுடாத... நான் நீ நினைக்கிற டைப் இல்லைன்னு சொன்னேன்...ஒண்ணும் ஆயிடாது. கர்ப்பம் தரிக்காம என்ஜாய் பண்ண எவ்வளவோ வசதி வந்திடிச்சுங்கறான்... எப்படியிருக்கு கதை? இதாண்டி இந்த காலத்துக் காதல்...''

''ஏய் இவ ஒரேடியா ஓட்றா... இவ சந்திச்ச அந்தக் காஞ்சமாடு வேணும்னா அப்படி நடந்துகிட்டு இருக்கலாம். நானும்தான் ஒருத்தரை லவ் பண்றேன். என்னை அவர் டச் பண்ணதே கிடையாது.''

''பின்னாடி ஒரேயடியா போட்டு பொறட்டி எடுத்துடலாம்னு நினைக்கறானோ என்னவோ?''

''கல்யாணத்துக்கு அப்புறம் நீ என்ன வேணா செஞ்சுக்கோ... அதுக்கு முந்தி செஞ்சாதானே தப்பு?''

''அதுக்காகவே காதலிக்கறது, கல்யாணம் பண்ணிக்கறது எல்லாமே தப்புதான்.''



''அப்ப பெரியவங்க பாத்து பண்ற கல்யாணத்துல இது இல்லியா? பஸ்ட் நைட்டுன்னு எதுக்கு வைக்கறாங்க?''

''இதோ பாரு... செக்ஸ் தப்பு கிடையாது. காமம் ஒரு நெருப்பு. அதை அடுப்பை எரிச்சு சமையல் செய்யுற மாதிரி அழகா பயன்படுத்திக்கதான் கல்யாணம். அப்படி இல்லேன்னா சாமியாரா போயிடறது நல்லது.''

''அழகா சொன்னே... அந்த நெருப்பை அழகா எரிக்கணும். சினிமா தியேட்டர், பார்க், பப்ளிக் ப்ளேஸ்னு கண்ட இடத்துல அதை எரிக்கக்கூடாது. அப்படி எரிக்கறதே வாழ்க்கையும் கிடையாது.''

''இப்ப முடிவா என்ன சொல்றீங்க. பானு எழுதினது சரியா தப்பா?''

''அது ஒரு சரியான தப்பு...''

''இது என்ன புதுமையான விமர்சனம்.''

''ஆமா... தப்புன்னு பார்த்தா தப்பு. சரின்னு பார்த்தா சரி... இளமை பிராயத்துல ஒரு த்ரில்லுக்காக அப்படியும் இப்படியுமா இருந்துக்கறதுல ஒரு தப்பும் இல்லை. இந்தக் காலத்துல புலனடக்கம் சாத்யம் இல்லை.

வீட்டை விட்டு வெளியே கிளம்பினா கண்ல பட்ற காட்சியெல்லாம் செக்ஸை தூண்டற மாதிரிதான் இருக்கு. நாம போட்டுக்கற அரைகுறை டிரெஸ், சுவத்துல ஒட்டற சினிமா போஸ்டர், புத்தகங்கள்ள வர்ற ப்ளோஅப் படங்கள், கதைகள்ள வர்ற சம்பவங்கள், பாக்கற சினிமாவுலயும் கவர்ச்சியான காட்சின்னு நம்ம மனசையும் அதோட உறுதியையும் சோதிக்கற காலம் இது... இங்க நாம சாப்பிட்ற சாப்பாட்லயும் உப்பு காரம் அதிகம். உடம்பு எப்படி பெட்டி பாம்பா சுருண்டு கிடக்கமுடியும்? அது சீறத்தான் செய்யும். பேசாம அமெரிக்கா மாதிரி

ஒபன் செக்ஸ்ல நம்பளை விட்டுடலாம். மூடிமூடி வெச்சு என்னத்தை சாதிச்சோம். காதலும் காமமும் அதிகரிச்சது தான் மிச்சம்'' பாலுவின் கவிதை பலத்த விவாதத்தில் அடிபட்டுக் கொண்டிருந்தபோது பாலுவே அங்கு வந்தான். எல்லோரும் அவனை ஒரு தினுசாகப் பார்த்தனர்.

''ஹலோ பாலு, உங்க கவிதைதான் இங்க இவங்க வாயில வதைபட்டுகிட்டு இருக்கு...''— என்றாள் தாரிணி.

''கவிதைன்னா விமர்சனம் இருக்கத்தான் செய்யும். விமர்சனம் தானே வளர்க்கும்.''— பாலுவின் பதிலில் வாயைப் பிளந்தாள் தாரிணி,

''சில விமர்சனங்கள் நம்மளை வளர்க்காது சோர் வடைய வெச்சுடும் பாலு. ஆமா காதலைப்பத்தி எப்பவும் எதிராவே சிந்திக்கிறீங்களே ஏன்?''

''யார் சொன்னா? நான் எதிரா சிந்திக்கலை. சரியா சிந்திக்கறேன்!''

''காதல் காமங்கறது சரியான சிந்தனையா?''

''இப்ப அதுதானே உண்மை?''

''ஏன் காமமில்லாத காதலே இப்ப கிடையாதுங்கறது உங்க முடிவா?''

''இருக்கலாம்... அங்க ஒண்ணு, இங்க ஒண்ணு.''

''அப்ப அதை மெச்சி ஏன் எழுதக்கூடாது?''

''எப்பவும் அதிகமாக பாதிக்கற ஒண்ணைதான் எழுதணும்.''

''சரி, விஷயத்துக்கு வரேன். உங்களால காமம் கலக்காம காதலிக்க முடியுமா?''

''முடியும். நான் காதலிச்சுகிட்டும் இருக்கேன்.''



''பாலுவின் அந்தப் பதிலில் தாரிணி அதிர்ந்து போனாள். இந்த மூஞ்சுக்குள்ளும் காதலா? இந்த மனிதனின் இதயம்கூட காதலிக்கக் கூடியதா? வியப்பு சுதந்திர தின ஜார்ஜ் கோட்டை கொடிபோல தாரிணிக் குள் மேலேறியது

''யாரைன்னு தெரிஞ்சுக்கலாமா?''

''சாரி... அது சஸ்பென்ஸ் அவன் பதில் அருகில் இருந்த இந்துவையும் ஆச்சரியப்படுத்தியது. அவளும் அவனிடம் ஊன்றினாள். பாலு அதை லாகவமாக கவனித்தான் மெலிய சிரித்துக்கொண்டான். 'என் காதலியே நீ தானே?'— என்பதுபோலப் பார்த்தான். ஆனால் அவளால் அதைப் புரிந்துகொள்ள முடிய வில்லை.''

''என்ன பெரிய சஸ்பென்ஸ் சும்மா சொல்லுங்க பாலு... —தாரிணி விடுவதாகத் தெரியவில்லை.

''சாரி, இது ஒரு தலைக்காதல். நான்தான் அவளைக் காதலிக்கிறேன். அவ இன்னும் என்னை காதலிக்கலை. அவ என்னைக் காதலிக்க ஆரம்பிக்கட்டும். பிறகு சொல்றேன்.''

''ஆமாம், அவளுக்குத் தெரிஞ்சாதானே அவ காதலிப்பா.''

''அவளுக்கு மட்டும் தெரிவிப்பேன்.''

''அவ மறுத்திட்டா?''

''நான் ஒரு நல்ல காதலனா இன்னொரு பெண்ணை நினைச்சுகூட பார்க்கரமக் காத்திருப்பேன் தாரிணி.''

''எதுக்குக் காத்திருக்கணும்... அவதான் காதலிக் கலையே...''

''ஒருக்கால் பின்னால காதலிக்கலாம் இல்லியா?''

''எப்ப? கிழடு தட்டிட்ட பிறகா?''

"ஒய்நாட்? ஏன் கூடாது தாரிணி..."

"வாலிபம் போன பின்னே காதலிக்கறதுல அர்த்தமே கிடையாது பானு..."

"நான் செக்ஸுக்காகக் காதலிச்சா நீங்க சொல்றது தான் சரி... நான் காதலிக்கறது அவ மனசை."

"மனசைக் காதலிக்க காதலனா இருக்கணும்கற அவசியம் இல்லையே... ஒரு அண்ணனா நினைச்சுக்கூட அன்பு செலுத்தலாமே?"

தாரிணியின் இந்த மடங்கலான கேள்விமுன் பானு சற்று திணறித்தான் போனான்.

வாஸ்தவம்தானே? சரீர பிரக்ஞை இல்லாத பட்சத்தில் நாம் செலுத்தும் முன்பு சகோதரத்துவத்தில் அமைவது பவித்ரமான ஒன்றுதானே? ஆனால் அந்த வார்த்தையை நினைத்துப் பார்க்க நெஞ்சில் கூச்சம் நிலவியது. இனம் புரியாத ஒரு ஆக்ரமிப்பு இந்து என்பவள் தனக்கு மட்டுமே உரியவளாக இருத்தல் வேண்டும் என்பதுபோல் அவனை நினைக்கவிட்டது.

சகோதர அன்பை யார் வேண்டுமானாலும் செலுத்த லாம். ஆனால் தனது அன்பு அதனினும் மாறுபட்டது. அதற்காக அது காமத்தை அடிப்படையாகக் கொண்ட தென்றும் கூற முடியாது.

நினைவுக்குள் பானு தெளியத் தொடங்கிவிட அவனை அப்படி சிக்கலில் சிக்க வைத்த கேள்வியைக் கேட்ட தாரிணியிடமோ பெருமிதம்.

இந்துவும் கூர்ந்து கவனித்துக்கொண்டேயிருந்தாள். பானுவின் மனப் போராட்டத்தைப் பார்க்கப் பார்க்க அவளுக்கும் ஆச்சரியம்.

"இவன் காதலி யாராக இருப்பாள்?" இந்து கேள்வி யில் ஊஞ்சல் கட்டியபோது சந்தோஷ் நுழைந்திருந்தான்.



"ஹாய்...என்ன எல்லோரும் சீரியஸா ஏதோ சிந்திச்சு கிட்டிருக்காப்பல தெரியுதே..." அவனிடமும் கேள்வி.

"வாங்க சந்தோஷ். இன்னிக்கு மிஸ்டர் பானுவால காதல் பத்தி ஒரு காரசாரமான விவாதம்..." தாரிணி எடுத்துக் கொடுத்தாள்.

"பானு எழுதின கவிதையை பேஸ் பண்ணியா?"

"எப்படி அவ்வளவு கரெக்டா சொல்றீங்க?"

"எல்லாம் ஒரு ஐக்யூதான். எனக்கே அவர் கவிதை விஷயத்துல நிறைய கருத்து வேறுபாடு. காதல்னாலே காமம்கறது அவர் கருத்து. அவர் வேணும்னா காதலைக் காமமா நினைக்கலாம். ஆனா நான்லாம் என் காதலை துளிக்கூட காமத்தோட தொடர்புபடுத்தி நினைக்கவே யில்லை."

சந்தோஷின் கருத்தில் இந்து முகத்தில் மத்தாப்பு சொலிப்பு, 'வாரே வா... இத்தனை தெளிந்த இதயமோ நினக்கு!"— என்னும் ஆச்சரியப் பார்வை வேறு.

பக்கத்தில் நின்றுகொண்டிருந்த பானுவுக்கு சந்தோஷிற்கு பதில் சொல்வதில் எல்லாம் விருப்பம் இல்லை என்பதுபோல் பார்வை. சந்தோஷிற்கும் அது புரிந்தது. அவனது அந்த அலட்சியம் லேசாக அவனை கவலைப்படவும் வைத்தது.

மனித மனங்களுக்கு பல சமயங்களில் காசு பணத்தை விட 'பொருட்படுத்துதல்' என்பது ஜீவனுக்குச் சமமான விஷயம். பானுவின் இந்த அலட்சியம் சந்தோஷிற்குள் வேறுவிதமாக அவனைக் கிள்ளித் தள்ளியது. அதை பேச்சில் கொட்டினான்.

''எப்ப இப்படியெல்லாம் எழுதறாங்களோ அவங்க கிட்ட சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமே இருக்காது. காதல் காமமானதுன்னு கவலைப்படறவங்க அவங்க காதல் விஷயத்துல காமம் இல்லாம இருக்கமாட்டாங்க.''

''நோ... நான் உன்னைமாதிரி கிடையாது. என் காதல்ல காமம் கிடையாது.''— பாலு பதிலுக்குக் கத்தினான்.

''மொதல்ல உனக்குக் காதலியே கிடையாது. அப்புறம் தானே அவகிட்ட உனக்குக் காமம் இருக்கா இல்லையான்னு பாக்க...''

—பாலு அதைக் கேட்டு சிவந்துபோனான்.

''நான் ஒருத்தியைக் காதலிக்கிறேன். அவளும் என்னைக் காதலிப்பா! அடைஞ்சா அவளை நான் மனைவியா அடைவேன்! உடம்பு எனக்கு ஒரு பொருட்டே கிடையாது. அப்படி அடையலேன்னா நான் காலம் பூரா சன்யாசியாவே இருந்துடுவேன்!''

''ஹேய், இந்தப் பீலாவெல்லாம் விடாதே... விதி ரொம்பப் பெரிசு தம்பி! உன் சவால்ல நீ தோத்துடப் போறே...''

''தோக்கமாட்டேன்... என் மன உறுதி எனக்குத் தெரியும்.''

''அப்படின்னா நீ இனி காலம் பூரா சன்யாசிதான். நான் அதுக்கு உறுதி தரேன்.''

''என்னை யாரும் காதலிக்கமாட்டான்னு நினைச்சு தானே இப்படிச் சொல்றே?''

''காதலிச்சாலும் உன் காம உணர்வினால் நீ அவளை இழந்துடுவேன்னு சொல்றேன்.''

''பார்க்கலாமா'?'

''பார்க்கலாம்...''



—இருவரும் கட்டைவிரலை உயர்த்தி பந்தயக் குதிரைகள் ஆகிவிட்டதைச் சுற்றி நின்று பார்த்தவர்கள் ஸ்லாகித்தனர்.

''தேவையில்லாத பந்தயம். ஒரு கவிதை விவாதம் இப்படி சூடு பிடிக்கத் தேவையில்லை என்று கருதிக்கொண்டார்கள். இந்து மட்டும் சரியான போட்டி என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டாள்.

# 7

## இன்று இன்று இன்று

''வாங்க சார்... வாங்க...''— வாசல்புறம் நின்று கொண்டிருந்த பாலுவை கோவிந்தராஜன் உள்ளே அழைக்கிறார். இந்துவுக்கோ அவனைப் பார்க்கவே பிடிக்காத மாதிரி ஒரு வேதனை.

திடும்மென்று வந்து நிற்கிறானே!

''காதலுக்கு இலக்கணம் சொன்னவன்—காதலிப்பவளையே கைபிடிப்பேன்—இல்லையென்றால் காலம் முழுக்க சன்னியாசியாக இருப்பேன் என்று சவால் விட்டவன்—நடுவிலேயே காதலும் காமமும் ஒன்று என்கிற மாதிரி இருட்டில் தன்னைக் கட்டிப்பிடித்து கெடுக்கப் பார்த்த பரம சண்டாளன்—இன்று எதற்கு வந்திருக்கிறான்?''

—மனதுக்குள் அலைமோதும் உணர்வுடன் அவள் குனிந்த தலை நிமிரவேயில்லை. உள்ளே நுழைந்தவன் கோவிந்தராஜனைக் கனிவாக ஒரு பார்வை பார்த்தான். அவர் வாய் திறந்தார்.

''உங்களைப்பற்றி இந்து நிறைய சொல்லியிருக்கா.'' —என்றார்.

"நல்லவிதமாவா, கெட்டவிதமாவா?"

—அவன் அப்படிக் கேட்பான்னு அவர் சற்றும் எதிர் பார்க்கவில்லை. இருந்தும் சுதாரித்தார்.

"பொதுப்படையா பேசியிருக்கா. தப்பா பேச ஏதாவது இருக்கா என்ன?"

"நிறைய இருக்கு சார்..."

"போகட்டும் காத்தாலையே உங்களை கோர்ட் வாசல்ல பார்த்தேன். இப்ப வீட்டுக்கே வந்திருக்கீங்க. வாட் டு யூ வான்ட்?"

"ஐ வான்ட் இந்துஸ் பீஸ் ஆஃப் மைன்ட்."

"ரொம்ப சந்தோஷம். அவ சந்தோஷமா இருக்கணும்னு நீங்க நினைக்கக் காரணம்??'

"நான் அவளை நேசிக்கற ஒருத்தன்."

"அவ இன்னொருத்தன் மனைவி சார்!"

"நான் இல்லைங்கலை. அடுத்தவன் மனைவி நல்லா இருக்கணும்னு நினைக்கறது தப்பா சார்."

"எல்லோரும் நல்லா இருக்கணும்னு நினைச்சா அது நல்ல நினைப்பு. ஒரு குறிப்பிட்ட நபர் மனைவி நல்லா இருக்கணும்னு நினைச்சா?"

"நீங்க கேக்க நினைக்கறது எனக்கு புரியுது சார். நான் இந்துவை ஒரு காலத்துல மனசாரக் காதலிச்சவன். காதல்னா புனிதம்கறது என் கருத்து. ஆனால் உலகம் அதைக் காமமா ஆக்கிட்டு வருது. என் கருத்துக்கு பலத்த சோதனை வந்தது. இந்துவை நான் அநியாயமா இழந்துட்டேன். அதைப்பற்றிகூட எனக்குக் கவலை அதிகமா இல்லை. அவ சந்தோஷ் என்கிற நரிகிட்ட சிக்கினதுதான் பெரிய வேதனை. இருந்தும் நல்லா இருப்பான்னு நம்பினேன். அவ வாழ்க்கை இப்ப எவ்வளவு மோசமா இருக்குன்னு நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை!"



"எல்லாம் சரி... இவ வாழ்க்கை இப்படி ஆகி இவ விஷயம் கோர்ட் வரை போனது உங்களுக்கு எப்படித் தெரியும்?

—கோவிந்தராஜனின் இந்தக் கேள்விமுன் பாலு ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினான். கடிதத்தை விரித்தவருக்கு ஆச்சரியம் காத்திருந்தது. சந்தோஷ்தான் கடிதத்தை எழுதியிருந்தான்.

பாலுவிற்கு!

சவாலில் என்னிடம் தோற்றுப் போனவனே... எப்படி இருக்கிறாய்? என்னிடம் சவால் விட்டமாதிரி சன்யாசியாகத்தானே? நீ சன்யாசியாக இருப்பது மட்டுமல்ல, நீ மிகவும் ஆசைப்பட்ட இந்து என்னிடம் சந்தோஷமாக இருந்தால் அதைப் பார்த்து பொறாமைப்படும் சராசரி மனிதனல்ல நீ. இந்து என்னிடம் கொடுமைப்படுவதை நீ பார்க்க வேண்டும் அப்பொழுதுதான் உன் வேதனை அதிகமாகும். அந்த வேதனை தாளாமல் நீ தற்கொலையே செய்துகொள்ள வேண்டும். அப்பொழுதுதான் எனக்கு மகிழ்ச்சி. வா... வந்து பார் நாளை கோர்ட்டுக்கு. நான் இந்துவை படுத்திய பாட்டை ஓரளவு அறியலாம் நீ.

நீ காதலித்தவள் இனி நித்யகண்டம் பூர்ண ஆயுசு என்று வதைபடப் போகிறாள். அதுமட்டுமல்ல அவள் என்னை விவாகரத்து செய்யப் போகிறாளாம்!

நான் கசக்கி எறிந்த அந்தக் கனியை ஒரு மடையன் கூட திரும்ப மணக்கமாட்டான். நீயும் மணக்க முடியாது. உன் யோக்யதைதான் அவளுக்குத் தெரியுமே.

நீங்கள் இரண்டுபேரும் ஒருவரை ஒருவர் பார்த்து நொந்து வெந்து சாகவேண்டும். அதுதான் இனி எனக்குத் தேவை.

—இப்படிக்கு

சந்தோஷ்குமார்

—கடிதத்தைப் படித்து முடித்த கோவிந்தராஜன் பாலுவை கலங்கின விழிகளுடன் நிமிர்ந்து பார்த்தார்

"நான் இப்போ திருச்சியில் இருக்கேன். ஏறத்தாழ சன்யாசியின்னே வெச்சுக்கோங்களேன் திடீர்னு இந்த லெட்டர் நேத்து கிடைச்சது. எனக்கு ஒரே ஆச்சரியம். சந்தோஷ், இந்து இவங்களை நான் ஏறத்தாழ மறந்துட்ட நேரத்துல இப்படி ஒரு கடிதம். நான் திருச்சியில இருக்கறதை தெரிஞ்சிக்கிட்டு, எப்படியோ அட்ரஸைக் கண்டு பிடிச்சு சந்தோஷ் இதை எழுதியிருக்கான் புண்ணைக் கிளர்ற மாதிரி மகா மட்டரகமான செயல் இது."

—பாலுவின் விளக்கத்தைக் கேட்டு இந்து சட்டென்று கோவிந்தராஜன் கைக் கடிதத்தைப் பிடுங்கிப் படித்தாள். சிறிதுநேரத்தில் நெற்றியில் கைவைத்தபடி சற்றுத் தள்ளிப் போய் உட்கார்ந்துவிட்டாள்.

"அப்பா, எதுக்கப்பா இவர் இப்படி நடந்துக்கறாரு. நான் என்ன தப்பு பண்ணினேன்? இவர் மற்ற பெண்கள் கிட்ட தொடர்பு வெச்சிருக்கறது தெரிஞ்சும், ராதிகா தற்கொலையே செய்துகிட்டும் இவரை விடாம நேசிச்சேனே அதுக்கு இதுதான் எனக்குப் பரிசா?"

—அவள் உதட்டில் அருவிப் பிரவாகமாய் புலம்பல்.

"அவன் என்னிக்குமே நல்லவனா இருந்ததில்லை இந்து. காலேஜ் லைஃப்லயே அவன் ஒரு நடிகன். நீ தாமதமாகூட புரிஞ்சுக்கலை. அவன் மனுஷனே கிடையாது..."— பாலுவிடமிருந்து வந்த பதிலை வெறுப்புடன் காதில் வாங்கிக்கொண்டாள் அவள்.

"மனிதப் பிறப்புல எவ்வளவோ விசித்திரங்கள்! சிலருக்கு உருவம் குரூரம்... இவன் மாதிரி கேரக்டருக்கு உள்ளம் குரூரம். என்னை என்னம்மா பண்ணச் சொல்றே? நாங்க ஏதாவது பேசினா உபதேசம்னு ஒதுக்கிடற நாகரீக மக்களாச்சே நீங்க..."



—கோவிந்தராஜன் அந்தத் துக்கப் பிசைவிலும் தன் மகளை சொல்லாமல் கொள்ளாமல் கிள்ளினார்.

"வாஸ்தவம்தாம்ப்பா... எங்க ஜெனரேஷனுக்கு எதுலயும் டெப்த் கிடையாது. நாங்கள்லாம் சரியான நுனிப்புல் கூட்டம். எனக்கு இது பத்தாதுப்பா. இன்னமும் வேணும்."

—முகத்தால் கைகளை மூடிக்கொண்டு அழ ஆரம்பித்தவளை பாலு சோர்ந்துபோய் பார்த்தான்.

"அழாதே இந்து... போனதை நினைச்சு அழறதை விட நடக்கப்போறதை நினைக்கறதுதான் வீரியமுள்ள வாலிபத்துக்கு அழகு..."— என்றான்.

"நான் அழுவேன்...சிரிப்பேன்... நீங்க அதை நினைச்சு கவலைப்பட வேண்டாம் மிஸ்டர்! ப்ளீஸ் லீவ் மீ அலோன்."— என்றாள் அவனைப் பார்த்து. கோவிந்தராஜனை அது என்னவோ செய்தது.

"இந்து, இப்படி அடமண்டா பிஹேவ் பண்ணாதே. உனக்காக வருந்தி திருச்சியில இருந்து வந்திருக்கற ஆளு இவர்."

"எங்க இருந்து வந்தாலும் கவலையில்லைப்பா, இவர் ஒரு சரியான வேஷக்காரன்."

"இருந்துட்டு போகட்டும். இப்ப அதுக்காக இப்படி நடந்துக்கலாமா? இந்த தேசத்துல யார்தான் வேஷம் போடலை. அழுதுகிட்டே நான் சிரிக்கற வேஷம் போடறேன்... ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு வேஷம் போடாம இல்லை இந்து."

"எனக்கு விளக்கம் வேண்டாம். இவரை வெளிய போகச் சொல்லுங்க..."— இந்துவின் பிடிவாதத்தைக் கண்டு பாலுவே மெள்ள பின்வாங்க ஆரம்பித்தான்.

''சாரி இந்து...நானே போயிடறேன்! நானே போயிடறேன் சார்...'' என்றபடி திரும்பி நடக்கத் தொடங்கினான். அவனைப் பின்தொடர்ந்தார் கோவிந்தராஜன். வாசல் தாண்டி படியிறங்கி காம்பவுண்டு வால் பாதா மர நிழல் கடந்து வீதியைத் தொட்டவனை தொடர்ந்து சென்று பிடித்தார்.

''மிஸ்டர் பாலு ஒரு நிமிஷம்...''—என்றபடி அவன் தோளைப் பிடித்து நிறுத்தினார். அவன் கலங்கலாக அவரைப் பார்த்தான்.

''வாங்க, நடந்துகிட்டே பேசுவோம். ஆமா உங்க பேர்ல ஏன் இந்துவுக்கு அவ்வளவு வெறுப்பு? உங்களைப் பார்த்தா தப்பு பண்றவர் மாதிரி தெரியலை. அதனால தான் கேக்கறேன்''— நடந்தபடி கேள்வி கேட்டவரை வறட்டுச் சிரிப்புடன் பார்த்தான்.

''பரவால்ல சார், நீங்களாவது என்னைப் புரிஞ்சிக்க முயற்சிக்கறீங்களே'' என்றான்.

''அதெல்லாம் பிறகு. உங்கபேர்ல இந்துவுக்கு ஏன் வெறுப்பு? காரணம் என்ன?''

''அது அன்று நடந்த ஒரு தர்மசங்கடமான கதை சார்!''

''அதுதான் என்ன?''

# 8

## அன்று அன்று

கல்லூரி வளாகம் கலகலத்து கிடக்கும் காலைப் பொழுது. டை கட்டிய புரொபசர்களின் கர்வமான நடை. காளைத்தனமான மாணவ தேகங்களின் கொத்துக் கொத்தான கூட்டம். வகுப்புகளில் பெஞ்ச்சின்மேல் தாளம் போட்டபடி நண்பர்களுடன் அரட்டை திளைப்பு... என்கிற கல்லூரி குணாம்சங்களில் இந்து மட்டும் அளவிற்கதிகமான மௌனத்தில் இருந்தாள்.



மனதில் ஸ்லோமோஷனில ராஜகுமாரன் உடுப்பில் சந்தோஷ் டூயட் பாடி 'வா இந்து சேர்ந்து பாடு...'' என்று அழைப்பது போன்ற பிரமை. பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் தாரிணி அது புரிந்த மாதிரி சிரிக்கிறாள்.

''காலேஜ்ல இப்பல்லாம் பட்டத்தைவிட சுலபமா காதல் கிடைச்சுடுநு. டிகிரியைவிட சுலபமா புருஷன் கிடைச்சுடறான்...'' என்றாள் சற்று இளக்காரமாக.

''யாரை நினைச்சுடி நீ பேசறே?''— பார்வதியிடம் இருந்து எதிர்க்கணை.

''எல்லாம் நம்ம இந்துவை நினைச்சுதான். சந்தோஷை நெனைச்சு பனிக்கட்டியா உருக ஆரம்பிச்சுட்டாடி.''— என்றாள்.

''அது எப்படி உனக்குத் தெரியும்?''

''ஆங்—எனக்கு எப்படித் தெரியுமாவா? நான் சப்ஜெக்ட்ல் வீக்கா இருக்கலாம்டி. ஆனா காலேஜ்ல யார், யாரை டாவடிக்கறாங்க, சினிமா போறாங்க, சீரியஸா கட்டிப்பிடிச்சு டூயட் பாட்றாங்கங்கறதை நோட் பண்றதுல இங்க ஒரு கூட்டமே எக்ஸ்பர்ட். நான் அதுல மெம்பர்.''

''அது சரி... இவளை சந்தோஷ் லவ் பண்றானா?''

''ஆமா... எறும்புக்கு வெல்லம் கசக்குமா என்ன?''

''நாமல்லாம் கூடதான் வெல்லம்...''

''இருக்கலாம். ஆனா கறுப்பு வெல்லத்துக்கும், மஞ்ச வெல்லத்துக்கும் வித்யாசம் உண்டுல்ல?''

''அப்படின்னா நாம கறுப்பு வெல்லமா?''

"ஏதோ ஒன்னு. இப்ப அம்மா ஐயாவை நெனைச்சு உருக ஆரம்பிச்சுட்டாங்க. ஐயாவும் வர்ற நேரம்..."—என்று தாரிணி சொன்னபோது கல்லூரியின் தார்ச் சாலையில் சந்தோஷின் சந்தோஷச் சவாரி யமஹாவில்!

நீலச்சட்டை, நீல பேண்ட் என்று வானவண்ணம் காட்டியபடி பைக்கை விட்டு இறங்கியவனை நிறைய கறுப்பு, மஞ்சள் வெல்லங்கள் பார்க்கின்றன.

அவனோ தனது படை கொட்டமடிக்கும் பன்னீர் மர நிழலைப் போய்ச் சேர்ந்தான்.

"வா மாப்ள... என்ன ப்ளூகலர்ல ஒரே அசத்தலா வந்துருக்கே?"

"நம்ம லெச்சரர் ரேணுகாவுக்கு ப்ளூகலர்னா ரொம்ப இஷ்டமாமே..."

"அடப்பாவி... ஆட்டைக்கடிச்சு மாட்டைக் கடிச்சு கடைசியில வாத்யாரம்மாவைக் கடிக்க ஆரம்பிச்சுட்டியா?"

"அமையற எல்லாத்தையும் அமைச்சுக்கணும் மச்சானுங்களா..."

"ஆமர் இந்து என்ன ஆனா? 48 நாள் விரதத்துல ஏதாவது முன்னேற்றம் உண்டா?"

"இப்பதான் என்னை நெனைச்சு டூயட் பாட ஆரம்பிச்சுருக்கா. ஒரு வாரம் போகட்டும். அவளாவே லெட்டர் எழுதி அனுப்புவா பாரு."

"அது எப்படிம்மா காதல் அகராதியல அவ்வளவு கச்சிதமா நீ கணக்கு பண்றே?"

"எல்லாம் பூர்வ ஜென்ம புண்யம் பக்தா!"

"இந்துவோட காதல் மட்டுமா இல்லை கல்யாணமுமா?"



"நம்ம அகராதியில யாரையும் கல்யாணம் செய்துக் கற ஐடியாவே கிடையாது...அப்படி மீறிக் கல்யாணம் பண்ணிக்கறதா இருந்தா ஸ்ரீதேவி, கௌதமி, குஷ்பு இவங்கள்ள யாரையாவது பண்ணிக்கிட்டா உண்டு."

"ஆமா தலைவா, உன்னைக் காணோமுன்னுதான் அவங்களும் ஏங்கிட்டு இருக்காங்க..."

"டேய் தலைவரோட மச்சம் பத்தி உனக்கு என்ன தெரியும்? அது ரம்பா ஊர்வசியையே முடிஞ்சுக்கற மச்சம்டா... இருந்தாலும் இந்துவை நிச்சயம் கல்யாணம் பண்ணிப்பார் பாரேன்..."

—பேச்சுக்குப் பேச்சு வளர்ந்துகொண்டே போன போது பானுவின் ஊடுருவல் அவனைப் பார்க்கவும் பேச்சிலும் திசை மாறல்.

"மாப்ள... இந்தப் புலவன்கூட எவளையோ லவ் பண்றதா சொன்னானே, எவள்டா?"

"சும்மா ரீல் விட்டுறுப்பான். இவன் அழுக்கு ஜிப்பா நாத்தத்துக்கே பயந்து பிச்சைக்காரிகூட ஓடிடுவா. இவரைப் போய் ஒருத்தி லவ்வப் போறாளாக்கும்."

"ஒருதலைக் காதல்னுதான் சொல்லிட்டால்ல. அப்புறம் நம்ம காலேஜ் ராணிகளைப்பற்றி எதுக்கு வெட்டிப் பேச்சு. இவன் லவ் பண்ற அந்த மகாராணி யார்? யாருக்காவது தெரியுமா? தெரிஞ்சு வந்து சொல்றவங்களுக்கு ரூபாய் ஆயிரம் பரிசு... என்ன சந்தோஷ், உன்னால கண்டு பிடிக்க முடியுமா? உன்னால பொம்பளைகளை வளைக்கத் தான் முடியும். இவனை மாதிரி ஆளுங்களை ட்ரேஸ் பண்ணி விஷயத்தை தெரிஞ்சுக்க முடியுமா? முடிஞ்சா ஆயிரம் ரூபா தர்ரேம்மா..."

—ஒருவன் சந்தோஷைப் பெரிதாகக் கிள்ளினான். சந்தோஷை என்று இல்லாமல் எந்த ஆண்களையும் பார்த்து முடியுமா? சாத்யமா? என்றெல்லாம் கேட்டு

விடவே கூடாது. முடியாது என்று முன்பே தெரிந்தாலும் முட்டிப் பார்க்கத் துடிப்பது இளமையின் விசித்ரமான சுபாவம். சந்தோஷையும் அந்த சுபாவம் ஒரு ஆட்டு ஆட்டத் தொடங்கியது.

''இந்த பானு என்ன பெரிய திருவள்ளுவனா இல்லை வால்மீகியா? இவரைப் புரிஞ்சுக்கறதும், இவர் மனுசுல இருக்கிறதை தெரிஞ்சுக்கறதும் பெரிய விஷயமா என்ன?''

''தோ பாரு, நீ சேலஞ்ஜ் பண்ணியிருக்கற இந்த பார்ட்டி ஒண்ணும் அன்னுமுடி கேஸ் கிடையாது. நாங்க ஒண்ணும் காரணமில்லாம ஆயிரம் ரூபா பந்தயம் கட்டலை...''

—பதிலைத் தொடர்ந்து சந்தோஷ் உடனேயே பானுவை நெருங்க ஆரம்பித்துவிட்டான்.

''ஹலோ கவிஞரே...''— என்றபடி தோளில் கை போட்டான். பானுவிற்கு அது பிடிக்காவிட்டாலும் தட்டி விடாமல் பதிலுக்கு சிரித்தான்.

''சேலஞ்ஜ் பண்ணி இரண்டுபேரும் களத்துல இறங்கிட்டோம். காதல் ஜெயிக்கப்போவுதா இல்லை காமம் ஜெயிக்கப் போவுதான்னு காலேஜ் முழுக்க பேச்சு... பிரின்ஸ்பால் காதுக்குகூட விஷயம் போயாச்சு...'' சந்தோஷின் பேச்சைக் கேட்டு பானுவிடம் ஒரு வெற்றிச் சிரிப்பு.

''யார் காதுக்கு போனாலும் போகலைன்னாலும் நான்தான் ஜெயிக்கப்போறவன்''— என்கிற பதில் உதட்டில்.

''முதல்ல காதலிக்கணும்... அப்புறம் வெற்றி தோல்வி பத்தி பேச...?''

''அது என்பாடு. உனக்குக் கவலை வேண்டாம்.''



''ஏய், இதென்ன வெட்டிப் பேச்சு. முதல்ல ஒரே ஒருத்திக்கு தைரியமா ஐ லவ் யூ சொல்லி அவளையும் நீ ஐ லவ் யூ சொல்ல வை. நான் அப்பவே பந்தயத்துல இருந்து விலகிக்கறேன். நீ ஜெயிச்சுட்டதா அறிவிக்கிறேன்.''

''அதுக்கு நேரம் காலம் இருக்கு. இப்ப நாம படிக்க வந்துருக்கோம். போய்ப் படிக்கற வழியைப் பார்...''

''அதானே பார்த்தேன்...'' உனக்காவது காதல் வர்றதாவது. ஏதோ உணர்ச்சி வேகத்துல பந்தயம் வெந்தயம்னு இறங்கிட்டே. உனக்கு சரியா நானும் களத்துல இறங்கினேன் பாரு, என்னைச் சொல்லணும்.'' இளக்காரமான சந்தோஷின் இந்த வார்த்தைகள் பானுவைப் பெரிதாகக் கீறின. ஆழ்மனதில் அவனுக்குள் சேமிக்கப்பட்டிருந்த காதல் எண்ணங்களும் விருப்பங்களும் உடனேயே நாவை நோக்கி ஓடிவரத் தொடங்கின.

''நான் ஒருத்தியை காதலிக்கறது நெஜம்...சத்யம். நீ இதை நம்பினா நம்பு. நம்பாட்டி போ...''—என்று அவனை நோக்கிக் கத்தினான்.

''நீ மனசுக்குள்ள கற்பனையில ஆயிரம் பேரைக்கூடக் காதலிக்கலாம். நான்கூட நம்ம குஷ்பூவை உயிருக்குயிரா என் கற்பனையில் காதலிக்கிறேன். அதெல்லாம் காதலாயிடுமா? நிஜத்துக்கு வா...''

''பாவம் குஷ்பு...நான் உன் மாதிரி இல்லே சந்தோஷ். என் காதலி ஒரு அறிவு ஜீவித்தனமான பொண்ணு. உடல் அழகு மட்டுமில்ல உள்ள அழகும் உடையவ...''

''அப்படின்னா அவ யாருன்னு சொல்லு...''

''உன்கிட்ட சொல்ல வேண்டிய அவசியமில்லை...''

''பந்தயம் கட்டினவன்கிட்ட சொல்லாம வேற யார்கிட்டே சொல்லப்போறே? எனக்குதானே தெரியணும். முதல்ல நீ காதலிக்கறது தெரியணும். அப்புறம் நீ காதலிக்

கற பொண்ணு உன்னைக் காதலிக்கறாளான்னு தெரியணும். அதுக்குப் பிறகு இதெல்லாம் தெரிஞ்சாதானே பந்தயத்துல நீ ஜெயிக்கறதும் தோக்கறதும் தெரியும்...''

—பாலு அதைக் கேட்டு நெடுநேரம் பேசவில்லை. ஏதோ உணர்ச்சி வேகத்தில் சந்தோஷிடம் மாட்டிக் கொண்டு விட்டதுபோல் ஒரு உள்ளுணர்வு அவனுள் நிரடியது. காதலிப்பவள் பெயரை இவனிடம் சொல்வதில் நவறில்லை. ஆனால் இவன் இதைக் கல்லூரி முழுக்க டமாரம் போட்டுவிடுவான். நம்மை இன்னமும் காதலிக்காத அந்தப் பெண்ணுக்கும் அது அவமானமாகிவிடக் கூடும். காரியமும் கெட்டுவிடும்''—ஒரு வழியாக வாயே திறப்பதில்லை என்ற முடிவிற்கு வந்தவன் எதுவும் பேசாமல் அங்கிருந்து நடக்க ஆரம்பித்தான். சந்தோஷிற்கு அவன் போக்கு எரிச்சலை மூட்டியது.

''ஏய்...என்ன பேசப் பேச போய்கிட்டேயிருக்கே...?'' —நான் உன்னை விடுவதாக இல்லை என்பதுபோல் அவன் முன்னே கேள்வியோடு போய் நின்றான்.

''நீ எனக்கு நம்பிக்கையான ஆள் கிடையாது. உன் கிட்ட என்னால என் காதலி பற்றி பேச முடியாது. அவ என்னை காதலிக்கறது உறுதியாகட்டும். அப்ப இரண்டு பேருமா வந்து பேசறோம். இப்ப ஆளை விடு...''—இது பாலு.

'அவ எப்ப உன்னைக் காதலிக்க... அது எப்ப எனக்குத் தெரிய. அதுவரைக்கும் பந்தயம் என்ன ஆகறது?'—இது சந்தோஷ்.

''பெரிய பந்தயம். வேணும்னா பந்தயத்தை நான் இப்பவே வாபஸ் வாங்கிக்கிறேன். உன்கிட்ட பந்தயம் கட்டின உணர்ச்சி வேகத்துக்கு நான் ரொம்ப வருத்தப் பட்றேன். அதைவிட வாபஸ் பண்றதுல எனக்கு வருத்தம் வந்துடாது. பந்தயத்துல நீயே ஜெயிச்சதா இருக்கட்டும். ஆளை விடு...''



—பேசிவிட்டு பாலு போயே போய்விட்டான். சந்தோஷிற்கு அவன் முயற்சியில் முதல் தோல்வி. அந்த புலிமுகத்தின் கண்களில் அசாத்ய வெறி. சுற்றி நிற்கும் நண்பர்கள் அவனை கேலியாகப் பார்ப்பதுபோல் பிரமை. கல்லூரி வளாகத்தில் தனது கம்பீரம் ஒரு கார்ட்டூன் பொம்மையாகிவிட்டது போல் ஒரு உணர்வு.

நகத்தைப் பற்களால் கடிக்க ஆரம்பித்தான்.

நெடுநேரம். மிக நீண்ட நேரம்... அருகில் கெமிஸ்ட்ரி வகுப்பில் ஆசிட்டுகளைப் பற்றிய விளக்கம் மெலிதாக காதில் விழுகிறது.

தொலைவில் கான்டீனில் வெங்காய வடை எண்ணெயில் பொறிந்து வாசம் கமகமக்கப் பறந்து வருகிறது.

தோளில் சில நண்பர்களின் கரங்களும் விழுகின்றன. என்ன மாப்ள...பாலு உன்கிட்ட மாட்டுனானா, இல்லை நீ அவன்கிட்ட மாட்டினியா?''

''ஆள் சோகமா இருக்கிறத பார்த்தா ஆயிரம் ரூபாய் நமக்கு மிச்சம்தான்னு தோணுது. நான்தான் அப்பவே சொன்னேனே, உன் வித்தையெல்லாம் பொம்பளைங்க கிட்டதான். அவன்கிட்ட பலிக்காதுன்னு...''

நண்பர்கள் பேசப் பேச சந்தோஷிற்குள் முதல் தடவையாக தோல்வி ஜுரம் நிமிறெடுத்த ரத்தத்தில் சரளைக் கற்கள் நரநர என்று கறிக்க ஓடுவதுமாதிரி ஒரு எண்ணம்.

தேய்ந்துபோன நகத்தின் பிசிறுகளைப் பற்களில் தேடத் தொடங்கினான்.

''தோக்கறதுங்கறது என் அகராதியில கிடையாது''—என்றான் கடூரமாக. அவன் கடூரத்தைக் கலைப்பதுபோல் இந்து வந்துகொண்டிருந்தாள்.

போனிடைல் ஹேர் ஸ்டைலில் ஆர்கண்டி சாரியில் அழகிப் போட்டி மேடையில் அன்ன நடை நடக்கும் விதத்தில் அவள் வருவதைப் பார்க்கவும் சந்தோஷிற்குள் ஜுரமும், பிரமையும் மெல்ல கிழிறங்கத் தொடங்கியது.

''சரி சரி, நகந்துக்குவோம். இந்து வரா...'' என்றபடி நண்பர்களும் பேக்கடித்தனர்.

நெருங்கி வந்தாள் இந்து. ஹலோ சொன்னாள். ''ஏன் ஒரு மாதிரி இருக்கிங்க?''—என்று ஆரம்பித்தாள். அவனுக்கு அவளது நைச்சியம் மிகத் தேவைப்பட்டது. ஒரு வாரம் பத்து நாள் கழித்து அவளை நெருங்கலாம் என்கிற அவனது உட்கருத்தைத் தூக்கி உடப்பில் போட்டுவிட்டு அப்பொழுதே நெருங்க ஆரம்பித்தான்.

''மனசே சரியில்லை...''—என்றான்.

''ஏன்...என்ன ஆச்சு?''

''இந்த பாலுகிட்ட பந்தயம் கட்டிட்டதை நினைச்சு தான்...''

''பந்தயத்துல நீங்கதான் ஜெயிக்கப்போறீங்க, அதுல உங்களுக்கு சந்தேகமென்ன?''

''நான் ஜெயிக்கக்கூடாது இந்து. பாவம் பாலு மனசு! உடைஞ்சிடுவான்தான்...'' சந்தோஷின் அந்தப் புதிய தந்திர வளைப்பில் இந்து நெகிழ்ந்துபோனாள்.

''ரியலி நீங்க ஒரு ஜென்டில்மேன்'' என்றாள்.

''புகழ்ச்சி எதுக்கு இந்து. அவன்கிட்ட பந்தயம்லாம் வேண்டாம்னு சொல்லிடலாம்னு பாக்கறேன். என் வாயால அதைச் சொல்ல தயக்கமா இருக்கு.''

''வேணும்னா நான் போய்ச் சொல்லிடவா?''

''நிஜமாவா... அப்படியே அவன் யாரைக்காதலிக்கறான்னு தெரிஞ்சா வசதியாயிருக்கும்.''

''அது நமக்கு எதுக்கு?''



''அப்படி இல்லை இந்து. என்ன இருந்தாலும் அவன் நம்ப செட்டுல ஒருத்தன். அவன் ஒரு தலைக் காதல்லவீன் போயிடக்கூடாது. அவன் காதலிக்கற பெண் யாருன்னு தெரிஞ்சா நாமளே அந்தப் பெண்ணைப் பார்த்து பாலு பத்தி நல்லவிதமா சொல்லி அவன் காதலை என்கரேஜ் பண்ணலாமில்லையா?''

—சந்தோஷ் பேசப் பேச இந்துவின் பருத்த மார்பும் அகண்ட விழிகளும் பொங்கி விரிந்து பின் தாழ்ந்து கசிந்து, ''சந்தோஷ் உங்க கேரக்டர் என்னைப் பிரமிக்க வைக்குது...''— என்றும் சொல்லவிட்டது.

''என்னைப் பார்த்து பிரமிக்க ஒண்ணுமே கிடையாது இந்து. எல்லோரும் காதலிக்கற இந்த உலகத்துல என்னை காதலிக்கதான் யாருமில்லை.''— என்றான் அவன் படு இரக்கமாக. இந்துவுக்கு அவன் வார்த்தை சுருக்கென்று தைத்தது.

''நான் இருக்கேன் சந்தோஷ்...''—என்றாள் படு வேகமாக.

''நெஜமாவா இந்து?''

''கடவுள் சத்யமா...''

''இந்து நான் ரொம்ப கொடுத்து வெச்சவன்''

''நானும்தான்...''

''அப்ப இந்த பாலு விஷயத்தைக் கொஞ்சம் வேகமாக முடிச்சிடேன். இந்தக் காதல் சந்தோஷத்தை நாம நம்ம ஆடிட்டோரியம், சினிமா தியேட்டர்ல வெச்சு அனுபவிப்போம்.''

''சுட்டாயமா...''— அவனைப் பார்த்துப் புன்னகையுடன் பேசிய இந்து பாலுவைத் தேடி நடந்தாள்.

பாலு கல்லூரி வளாகத்தில் லைப்ரரிக்கு வெளியே அசோக மர சிமிண்ட் பெஞ்ச் ஒன்றில் புத்தகத்தில் மூழ்கியிருந்தான்.

''ஹலோ...'' —குயிலைப் போன்ற அழைப்போடு நெருங்கினாள். பாலுவிடம் பனிப் புதையலில் சிக்கிய மாதிரி ஒரு திகைப்பு. அவளைப் புன்னகையோடு ஏறிட்டான்.

''என்ன விஷயம் இந்து?''—என்றான்.

''நீங்க சந்தோஷ்கிட்ட பந்தயம் கட்டியிருக்கறது எனக்கென்னமோ சரியா படலை. அவரும் அதை ரும்பலை. பேசாம அதை ட்ராப் பண்ணிடுங்களேன்.''—

''நான் பண்ணிட்டேனே!'' பட்டென்ற பதில் பாலுவிடம்.

''எப்ப?''

''இப்பதான். ஆமா நீ எதுக்கு இந்து இதைக் கேக்கறே?''

''என்ன இருந்தாலும் நாமல்லாம் ஒரு செட். நமக்குள்ளேயே பந்தயம் மோதல்லாம் சரியா படலை. அதுதான்.''

''அதனால்தான் அதை நான் பெரிசா நினைக்காம விட்ட்ராப் பண்ணினேன்.''

''அப்படின்னா ரொம்ப சந்தோஷம்! ஆமா நீங்க நெஜமாலுமே யாரையாவது லவ் பண்றீங்களா?''—இந்துவின் இந்தக் கேள்விமுன் நெடுநேரம் மவுனம் காட்டினான் பாலு.

'என் காதலியே நீதானே? நீயா இப்படிக் கேட்பது? இப்படிக் கேட்பதும் நல்லதற்குதான். தனியாக உன்னைத் தேடி வந்து 'ஐ லவ் யூ' என்று சொல்லும் அவசியத்தை நீயே இப்பொழுது இங்கே உண்டாக்கிவிட்டாயே...'



—எண்ணிப் பார்த்தவன் ''யெஸ் இந்து, நான் ஒரு பெண்ணை லவ் பண்றேன்''— என்றான் மிக மெலிய.

''யார் அந்த அதிர்ஷ்டசாலி?''

''சொன்னா கோவிச்சுக்கமாட்டியே?''

''நோ...நோ... உங்களுக்கு உதவி செய்யத்தான் நான் வந்திருக்கேன்.''

''என் காதலியே எனக்கு உதவி செய்ய வந்திருக்கான்னா நான் அதிர்ஷ்டம் செய்திருக்கணும்.''

—இந்துவிடம் அதைக் கேட்கவும் வானம் அப்பளமாய் நொறுங்கி தரை தட்டின மாதிரி ஒரு அதிர்ச்சி.

''பாலு, என்ன சொல்றீங்க?''

''ஐ லவ் யூ இந்து. நான் காதலிக்கறது உன்னைங்கறேன்.''

''பட் ஐ டிப் நாட் லவ்யூ...''

—இந்துவின் பதிலில் பாலுவிடமும் பேரதிர்ச்சி. நெடுநேரம் அந்த அதிர்ச்சியின் பரவல். அருகாமையில் லைப்ரரிக்குள் போவோர் வருவோரின் நடமாட்ட சப்தம் தவிர வேறு ஏதுமில்லா மௌனம்.

அசோக மரத்தில் வாலாட்டிக் குருவி ஒன்று வந்து அமர்ந்துகொண்டு கீழே இறுக்கத்தில் கிடக்கும் இருவரையும் பார்க்கிறது.

''அதனால் பரவால்ல இந்து. ஆனா நான் உன்னை காதலிக்கிறது நெஜம். இப்ப மட்டுமில்ல எப்பவும்...''—ஒருவழியாக சக்தியைத் திரட்டி நூலைப் புரட்டுகிறான் பாலு

''தப்பான முடிவு. நான் உங்களைக் காதலிக்கலை. சந்தோஷைக் காதலிக்கிறேன். அவர் மாதிரி ஒரு ஜென்டில்மேனைப் பார்க்க முடியாது. நயவுசெய்து உங்க

எண்ணத்தை மாத்திக்குங்க. காதல்ங்கறதே காமம்கற கட்சியைச் சேர்ந்தவங்களை எல்லாம் என்னால எந்த நாளும் விரும்ப முடியாது பாலு!''

—இந்துவும் மடமடவென்று பேசிவிட்டு நடையைக் கட்டத்தொடங்கினாள். போகிற அவசரத்தில் கைவசம் எடுத்து வந்த புத்தகத்தை அந்த சிமிண்ட் பெஞ்சிலேயே வைத்துவிட்டதை பிறகுதான் பாலு பார்த்தான்.

—அதைக் கைகளில் எடுத்தான். இந்து என்று அவள் பெயர் தமிழில் எழுதப்பட்டிருந்தது. அதன்மேல் பாலுவின் கண்ணிலிருந்து இரண்டு சொட்டு நீர் விழுந்து எழுத்தை மூடியது. மனம் அவள் காதலுக்கு வாழ்த்துச் சொல்லும் பரஸ்பரத்தையும், பண்பாட்டையும் ஞாபகத்துக்குக் கொண்டு வந்தது. இந்துவைத் தேடிப் புத்தகத்தை கையில் எடுத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினான்.

போன வேகத்தில் திரும்பின இந்துவை ஆவலாக வரவேற்கிறான் சந்தோஷ்.

''இந்து போன காரியம் சக்ஸசா...? பாலுவோட லவ்வர் யாரு...?'' அவன் ஆவலுக்கு வேகமான பதில் இல்லை இந்துவிடம் மாறாக அவள் முகத்தில் அனல் பூத்து அடங்கின மாதிரி ஒரு சோகம்.

''கேக்கறேன்ல...'' சந்தோஷிடம் உலுப்பல். ''சாரி சந்தோஷ். நான் ஏன் போனேன்னு ஆயிடிச்சு. அந்த பேக்கு முண்டம் என்னைதான் லவ் பண்ணியிருக்கான்...''

—இந்து இப்படிச் சொல்லவும் சந்தோஷிற்கு தூக்கி வாரிப்போட்டது— உள்ளுக்குள் சற்றுமுன் நேரிட்ட பரபரப்பும் ஜுரமும் அப்படியே வெற்றியாக உருமாறி அவனை நோக்கி திசை திரும்புகிற மாதிரி ஒரு சந்தோஷம்.

'உன் காதலிதானா என் காதலி?'— எக்காளமான கேள்வி வேறு உள்ளுக்குள்.



''இனி என் காதலியை வைத்தே உன்னை தண்ணி காட்டுவேன்... கிரங்க அடிப்பேனே... உன் காதல் சபதத்தை நாற அடிப்பேனே...''—மனதிற்குள் கணக்கிற்கு மேல் கணக்கு போடத் தொடங்கிவிட்டான் சந்தோஷ்.

''என்ன சந்தோஷ் திகைச்சுட்டீங்க. இந்து, நீ பாலுவையே லவ் பண்ணுன்னு பெருந்தன்மையா சொல்லி என்னை அழ வெச்சுடாதீங்க...''— அவள் பேச்சு சந்தோஷைச் சிரிக்கவிட்டது.

தனது அணுகுமுறைதான் இவளை என்னமாய் ஏமாற்றிவிட்டது. 'டேய் சந்தோஷ் நீ சரியான நடிகர் திலகம்டா'—என்று தனக்குள் தன்னைத்தானே பாராட்டியும் கொண்டான்.

மனதில் ஒரே உற்சாகம். அதற்கு தோதாக இந்து தழையத் தழைய கட்டியிருக்கும் ஆர்க்கண்டி புடவை அவள் இடுப்பின் அழகை தொப்புள் சுடரோடு காட்டி அவனைக் கிண்டியது.

மாராப்பில் வேறு செழுமை. சந்தோஷிற்குக் காமப் பந்து வாலிபால் ஆட ஆரம்பித்தது.

''இந்து நாம கொஞ்சம் தனியா மனசு விட்டு பேசுவோமா?'' என்றபடி அவளைப் பார்த்தான்.

''நம்ம இன்டோர் ஆடிட்டோரியத்துக்குப் போவோமா?''

இந்துவே அப்படிக் கேட்டதை சந்தோஷ் துளியும் எதிர்பார்க்கவில்லை. அந்தக் கல்லூரியின் இன்டோர் ஆடிட்டோரியம் காதலர்களுக்கு சரியான ஒதுங்கல் இடம். மின் விளக்கு இல்லாவிட்டால் யாரும் யாரையும் பார்த்துக் கொள்ள முடியாதபடி கரிக்கும் இருட்டுக்கு சொந்தமான இடம்.

பாட சம்பந்தமான எஜுகேஷன் ஃபிலிம்ஸ், சிலைட்ஸ், சமயங்களில் சினிமாப் படம் என்று பல விஷயத்துக்குப் பயன்படும் இடம்.

பெரும்பாலும் மூடியே கிடக்கும். வாட்ச்மேன் இருப்பான். ஐந்து ரூபாய் கொடுத்தால் ஆடிட்டோரியத்தையே பத்திரத்தில் எழுதிக் கொடுத்துவிடுவான்.

ஐந்துக்கு பத்தாக அழுதுவிட்டால் உள்ளே முதலிரவு வேறு நடத்திக்கொள்ளலாம். அத்தனை பாந்தமான இடம்.

அங்கே இருவரும் நுழைகின்றனர். தலைக்கு மேலே மங்கலான வெளிச்சம் துப்பும் குமிழ் விளக்குக்குக் கீழே குஷன் இருக்கையில் சரிகின்றனர்.

பேச்சில் தன்னை மறக்கின்றனர்.

வெளியே பாலு! வாட்ச்மேனிடம் கெஞ்சலாக கேட்கிறான். ''இந்து சந்தோஷ் இந்தப் பக்கம் வந்ததா சொன்னாங்க. உள்ற இருக்காங்களா?''

''ஏன் அவங்க ஜல்சாவைப் பாக்கணும்னு உனக்கு ஆசையா இருக்கா?''—இது வாட்ச்மேன்.

''யோவ் அளந்து பேசு. இந்த புக் அவளோடது, கொடுத்துட்டுப் போக வந்தேன்...''

''வெளியே வந்தபிறகு கொடுத்துடு. உள்ள யாரையும் விடாதேனு சந்தோஷ் சொல்லியிருக்கான். பாவம் அந்தப் பொண்ணு...'' வாட்ச்மேனின் பதிலில் பாலு முகத்தில் அமிலம் எரிகின்ற நமைச்சல். மனதில் பரபரப்பு. ''இந்து இத்தனை சீக்கிரம் இப்படி எல்லாம் நடந்துகொள்ள ஆரம்பித்துவிட்டாயே...'—என்கிற பதைப்பு வேறு.

வாட்ச்மேனைப் பிடித்துத் தள்ளிவிட்டு உள்ளே நுழைந்தபோது மெல்லிய இருளில் இருவரும் தெரிந்தனர். எதேச்சையாகத் திரும்பவும் பாலு வருவதைப் பார்த்தான் சந்தோஷ்.



'சிவ பூஜையில் கரடி எதற்கு?'—மனதில் கோபத்துடன் எழுந்துகொண்டான்.

''இந்து பாலு வரான்'' என்றான். இந்துவிடமும் அதைக் கேட்டு இலேசான பதட்டம்.

''ஐ ஹேட்யூன்னு சொல்லியும் என்னை விடமாட்டேங்கிறானே வரட்டும், அவனை ரெண்டுல ஒண்ணு பாத்துடறேன்''—என்று இந்துவும் நிமிர்ந்தாள்.

''சரி...நீ பேசும்போது நான் பக்கத்துல இருக்கறது நல்லதுக்கு இல்லை. நான் வெளிய போறேன். அவனைப் பேசி அனுப்பு முதல்ல...''— என்றபடி வெளியேற ஆரம்பித்தான்.

பாலு அவள் ஆசனத்தை சமீபித்துவிட்டான். புத்தகத்தை அவள் எதிரே நீட்டினான்.

''உங்க காதலுக்கு என் வாழ்த்துக்கள்...''—என்றான் மிக விரக்தியாக...

''ஏன் இதை நாளைக்கோ மறுநாளோ சொல்லக் கூடாதா?''—இந்துவிடம் கோபமான ஆரம்பம்.

''இந்து, நீ இப்படி இந்த இடத்துல சந்தோஷைச் சந்திக்கறது கொஞ்சம்கூட நல்லது இல்லை. அவன் அவ்வளவு நல்லவன் இல்ல. பார்த்து...''—பாலுவின் எச்சரிக்கை இந்துவிடம் சிரிப்பைத் தந்தது.

''உங்க உபதேசத்துக்கு நன்றி. நீங்க போகலாம்'' என்றாள் கோபமாக. அப்பொழுது பார்த்து அந்த மெல்லிய குமிழ் விளக்கும் அணைந்துபோனது. சுற்றிலும் கண்ணை கரிக்கும் இருட்டு.

இந்து திணறத் தொடங்கும்போது அவள்மேல் இரண்டு கை விழுந்தது. அது கன்னம் கழுத்து என்று ஓடி மார்பை நச்சென்று பிடித்தது. இந்து உடனேயே கத்த ஆரம்பித்துவிட்டாள்.

"டேய் பாலு, விட்றா என்னை, விட்றா என்னை..."

—கைகள் மேலும் முன்னேறி இடையை வளைத்து பிருஷ்டத்தை வருடத் தொடங்கின. இந்து தொண்டை கிழிய கத்தத் தொடங்கினாள்.

"ஐயோ என்னை விட்டுடு. என்னை விட்டுடு..." அந்தக் கரங்கள் அவளை வாரி அணைத்து இம்சிக்கப் பார்த்தது. இந்து இருட்டில் முடிந்த மட்டும் பலத்தோடு அந்தக் கரத்துக்கு உரிய உருவத்தைப் பிடித்துத் தள்ளினாள். குஷன் இருக்கைமீது ஏறி வேகமாக காலில் அடிபட ஓட ஆரம்பித்தாள்.

சட்டென்று ஆடிட்டோரியம் எங்கும் கண்ணைப் பறிக்கும் வெளிச்சம். ஒரு சீட்டின்மேல் இந்து நிலை குலைந்துபோய் சேலை கலைந்து நிற்க அருகில் பேயறைந்த மாதிரி பாலு நிற்க..." என்னாச்சு இந்து என்னாச்சு?"— என்று பதட்டத்தோடு வாசல் கதவு வழியாக சந்தோஷ் வந்துகொண்டிருந்தான்.

"சந்தோஷ் இந்த ராஸ்கல் இருட்டுல என்னை ரேப் பண்ணப் பார்த்தான்."—என்று பாலுவை நோக்கிக் கை காட்டினாள்.

பாலுவிடம் சப்த நாடியும் நொறுங்கிவிட்டது.

"நோ..." ஆடிட்டோரியமே நொறுங்கும் வண்ணம் [illegible]று.

1658
3293198

## 9

## அன்று இன்று

அன்னைக்கு அந்த ஆடிட்டோரியத்துல எதிர் பாராம நடந்த அந்த சம்பவம்தான் இன்னிக்கும் இந்து என்னை வெறுக்கக் காரணம்."



சரசரக்கும் இலை உடக்கும் வாதநாராயண மரச் சாலையில் மெல்ல நடந்தபடியே நடந்ததைச் சொல்லி நிறுத்திய பாலுவை கோவிந்தராஜன் சிந்தித்தபடியே பார்க்கிறார்.

"ஆமா. அவளை யார் அப்ப கெடுக்கப் பார்த்தது? நீங்க இல்லியா?" கேட்கிறார்.

"இது அந்த சந்தோஷ் வேலை சார். என்னைப் பழி வாங்க இந்துவை என்கிட்ட இருந்து அழுத்தமா பிரிக்க அவன் செய்த செயல்தான் இது. பழி என்மீது. ஆனா பாவம் அவனை சும்மா விடாது.."— சொல்லும்போதே பாலுவின் கண்களில் கண்ணீரின் பனிப்பு. அந்தக் கண்ணீரே அவன் ஆத்மார்த்தமாகப் பேசுவதைச் சொல்லாமல் சொன்னது.

"போனது போகட்டும்... என் பெண் இனிமே அந்த சந்தோஷோட வாழறது சாத்யமில்லை. மறுவாழ்வு தர உங்களுக்குச் சம்மதமா பாலு?" கோவிந்தராஜன் அப்படி ஒரு கேள்வியைக் கேட்பார் என்று பாலு எதிர்பார்க்கவே யில்லை திக்குமுக்காடிப் போனான். என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை.

"என்ன பாலு, பதிலைக் காணோம். நீங்க இந்துவை மனசாரக் காதலிச்சது நிஜம்தானே? அந்தக் காதல்ல சரீர பிரக்ஞை இல்லைதானே? உங்க கருத்துப்படி நீங்களே இல்லேன்னா எப்படி?"

"சார்... நான் நேசிக்கறது பெரிசில்ல...இந்து என்னை நேசிக்கணும் சார்" என்றான்.

"அதுக்கு நான் பொறுப்பு பாலு. அவ வாழணும். இனியாவது ஏமாறாம வாழணும். அந்த சந்தோஷ்ங்கற பாதகன்கிட்ட இருந்து தப்பி வாழணும். வாழ்ந்து காட்டணும். அதுக்கு நீங்க உதவி செய்யணும்."

''நிச்சயமா... என் காதலை இந்து புரிஞ்சு எத்துக்கிட்டா.''

''எத்துப்பா. நீங்க கொஞ்சம் பொறுமையா இருக்கணும். சந்தோஷோட சுயரூபம் இப்ப அவளுக்குத் தெரிஞ்சுபோச்சு. அதேமாதிரி உங்க நல்ல மனசும் தெரியாமலா போயிடும்.''

''தெரிஞ்சாலும் தெரியலைன்னாலும் நான் காத்திருப்பேன் சார். காத்திருந்தால்தான் சார் காதல்...''

''ரொம்ப சந்தோஷம் பாலு. என் பெண் வாழ்க்கை அஸ்தமிச்சு போச்சேன்னு நினைச்சேன். சூரியன் மாதிரி இப்ப உங்களைப் பார்க்கறேன். என் மகிழ்ச்சிக்கு இப்ப அளவே இல்லை.''

கோவிந்தராஜன் அப்படிச் சொன்ன வினாடியில் அவர் தோள்மீது ஒரு கை விழுந்தது. திரும்பியவருக்கு தூக்கிவாரிப் போட்டது. கைக்குச் சொந்தமாக தென்பட்டவன் சந்தோஷ்!

''என்ன மாமா... மாப்ள உயிரோட கல்லு குண்டாட்டம் இருக்கும்போதே உங்க பெண்ணுக்கு இன்னொரு மாப்ளை பார்க்க ஆரம்பிச்சுட்டீங்களே. பலே!''—என்றான்.

சாலையில் அவ்வளவாய் நடமாட்டமில்லை. அங்கே அவன் தென்பட்டதும் பேசியதும் கோவிந்தராஜனை குமுறவிட்டது. பாலுவோ கோபத்தின் உச்சிக்கே போனான்.

''சந்தோஷ் நீ மனுஷன்தானா? இல்லை மனுஷ உருவத்தில் இருக்கிற பிசாசா... உன்னை மாதிரி ஒரு சாடிஸ்டை நான் பார்த்ததே இல்லை. ஏன் இப்படி நடந்துக்கறே?''

—பாலுவின் கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல பிரியமில்லாதவனா இருவரையும் ஊன்றிப் பார்த்தான்.



''டேய் நீ நல்ல ஆண் பிள்ளையா இருந்தா இந்து கழுத்துல தாலிய கட்டிடு பார்ப்போம். பிறகு பேசிப்போம்.''—என்றான்.

''அவ கழுத்துல நான் தாலிய கட்றது இருக்கட்டும். நீ ஏன் இப்படி நடந்துக்கறே... இந்து என்ன பாவம் செய்தா?''

''ஒரு பாவமும் செய்யாம என்னை அனுசரிக்கிறாளே அதுதான் அவ செய்யற பெரிய பாவம். நீதான் சொல்லிட்டியே, நான் ஒரு சாடிஸ்ட்டுன்னு... சாடிஸ்டுகள் இப்படித்தான் நடந்துப்பாங்க...''

''ஒழிப்பாங்க. எங்க கை பூப்பறிக்காது சந்தோஷ். உன் கொட்டத்தை அடக்கறேனா இல்லையா பார்''—என்று கர்ஜித்தபடி முன்வந்தார் கோவிந்தராஜன்.

''நான் காட்டுப்புலி. எந்த வேட்டைக்காரனாலும் என்னை ஒண்ணும் பண்ண முடியாது.''

''அதையும் பார்க்கறேன். பாலு இவனை வளைச்சுப் பிடிங்க. இப்பவே போலீசுக்கு தகவல் தரேன்.''

கோவிந்தராஜனின் பேச்சைத் தொடர்ந்து புயல் வேகத்தில் இருவரையும் பிடித்துத் தள்ளியவன் கண் இமைக்கும் நேரத்தில் அங்கிருந்து மறைந்துவிட்டான்.

''சார், இவன் எப்படி சார் இங்க வந்தான். எதுக்கு வந்தான், ஏன் வந்தான்?''— பாலுவிடம் பதைப்பு.

''தெரியலையே பாலு... காலைச் சுத்தின பாம்பு கடிக்காம விடாதுங்கற மாதிரி இருக்கே இவன் போக்கு.''

''சார், இவன் நடவடிக்கைல ஏதோ மர்மம் இருக்கு.''

''மர்மமா. புரியலையே நீங்க சொல்றது...''

''இவன் காதலிச்சு கை பிடிச்ச பெண் இந்து. அவகிட்ட இவன் ஏன் இவ்வளவு வெறுப்பைக் கொட்டணும். இதுல என்னை ஏன் சம்பந்தப்படுத்தணும்.''

''சாடிஸ்ட்டுன்னு முடிவு பண்ணின பின்னால காரணம் கேக்கறதுல அர்த்தமில்லை பானு.''

—கோவிந்தராஜன் திரும்பி நடக்கத் தொடங்கினார்.

''கொஞ்சம் சீக்கிரமா நடப்போம். அங்க வீட்ல இந்து தனியா இருப்பா. இவன் அங்கபோய் அவளையும் மிரட்டலாம்...''— பேசிக்கொண்டே காலில் வேகம் கலந்தார்.

பேசியபடியே நெடுந்தூரம் வந்து விட்டிருந்தார்கள். பானுவும் அவர் வேகத்துக்கு ஈடு கொடுத்தான்.

காதலித்துக் கைப்பிடித்தவன் ஏன் இப்படி நடந்து கொள்கிறான்? எதற்காக வம்பிற்கு வருகிறான்? ஏன் வம்பினை வளர்க்கிறான்?

இந்து வீட்டின் பின்புறம் அவரைக் கொடி படர்ந்த மதில்சுவர்மேல் கோவிந்தராஜன் ஊகித்தபடியே சந்தோஷ்! சுற்றிச் சுற்றிப் பார்த்தபடி காலெல்லாம் பின் பக்கத்து சாக்கடைத் திப்பிகள் ஒட்டியிருக்க எகிறிக் குதித்தவன் பின் பக்கக் கதவைப் படபடவென்று தட்டினான்.

பயந்துகொண்டே திறந்த இந்து எதிரே ரவுடித்தன மான சிரிப்போடு உள்ளே நுழைந்தான்.

''எனக்கு எதிரா கோர்ட்ல சாட்சி சொல்லி ஆறு மாசம் ஜெயில் தண்டனையா வாங்கித் தந்தே...ஒன்னை சும்மா விடமாட்டேன்டி''— என்றபடி எட்டி அவள் தலைமுடியைப் பிடித்தான்.

அலறத் தொடங்கிய அவள் வாயைத் தன் உறுதியான கரத்தால் இறுகப் பொத்தினான்.

அவளிடம் மூச்சுத் திணறல்.



இதற்குள் வாசல் வழியாக கோவிந்தராஜனும் பானுவும் உள்ளே நுழைந்துவிட்டனர். அவர்கள் வேகமாக ஓடிவருவதைப் பார்த்தவன் தன் பாக்கெட்டிலிருந்த கத்தியை எடுத்து இந்துவின் கழுத்துக்கு நேரே பிடித்தபடி,

''நெருங்கினா இவ கழுத்தை ஒரே சீவா சீவிடுவேன்.'' என்றான். அவர்கள் இருவரும் ஸ்தம்பித்த மாதிரி நின்றார்கள். அடுத்து என்ன செய்வதென்று தெரியாத விழிப்பில் ஸ்தம்பிக்க, அவனிடம் கொக்கரிப்பு.

''இந்த நிமிஷம் இவளை கொன்னுட்டு பழியை உங்க மேல போட முடியும். அன்னிக்கு ஆடிட்டோரியத்துல இருட்டுல இவளை ரேப் பண்ண முயற்சி செய்து பழியை உன்மேல போட்ட அதேமாதிரி இப்பவும் என்னால செய்ய முடியும். கிட்ட நெருங்காதே... கிட்ட நெருங்காதே...''

அவன் உடைத்த அந்த உண்மையைக் கேட்டு இந்து திக்குமுக்காடிப் போனாள். அடுத்த வினாடியே பானுவைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

பானு வினாடியும் தாமதிக்காமல் அவன் இலேசாகக் கழுத்தை திருப்பிய சமயமாகப் பார்த்து அவன்மேல் பாய்ந்து அந்தக் கத்தியைத் தட்டிவிட்டான்.

சந்தோஷ் உடனேயே சுதாரித்து வாசற்பக்கம் ஓட ஆரம்பித்தான். ''இந்து உன்னை நான் நிம்மதியா வாழ விடமாட்டேன்டி...''— என்கிற ஓங்கலான அலறலுடன்.

—வாசல் பக்கம் காவலிருந்த சென்ட்ரி சற்றுத் தள்ளி பீடி புகைத்துக்கொண்டிருந்தார். சந்தோஷ் தலை தெறிக்க ஓடுவது பார்த்துத் திக்குமுக்காடிப் போனார். இன்ஸ்பெக்டர் மட்டத்தில் டோஸ் விழுமே என்கிற பயம் வேறு.

"சார் இவன் எப்படி சார் இந்தப் பக்கம் வந்தான். குரல் கொடுத்துருக்கக்கூடாதா?" கத்தினார்.

கோவிந்தராஜன் முகத்தில் தீர்க்கமான கவலை ரேகைகள். பானுவும் கலங்கிப் போயிருந்தான். இந்துவோ கேவிக் கேவி அழுதுகொண்டிருந்தாள்.

குறிப்பாக அவன் ஆடிட்டோரியம் குறித்துப் பேசிய பேச்சில் அவள் இதயம் எண்ணெயில் பொறிந்ததுபோல் ஆகிவிட்டிருந்தது.

'இந்த பானுதான் எத்தனை பொறுமைசாலி!

இவன்தான் எத்தனை தீர்க்கமான தெளிவான கவிஞன்!

—நினைத்து நினைத்து விசும்பத் தொடங்கினாள்.

"இந்து அழாதே... நீ அழறதைப் பார்க்க சங்கடமா இருக்கு..."—பானுதான் ஆறுதல் கூறுகிறான்.

"ப்ளீஸ் என்னை அழவிடுங்க... உங்களை சந்தேகப் பட்ட பாவத்துக்கு இந்தக் கஷ்டமெல்லாம் எனக்குப் பத்தாது. இன்னமும் வேணும். இன்னமும் வேணும்..."

"நோ... இது நீ அழற நேரமில்ல... சந்தோஷப்பட வேண்டிய நேரம்."—கோவிந்தராஜன் குறுக்கே புகுந்தார்.

'அப்பா என்ன சொல்றீங்க, அவன் வந்து மிரட்டிட்டுப் போறான். எல்லோரும் மிரண்டு நிக்கற இந்த பொழுதா நான் சந்தோஷப்படற நேரம்."

"நிச்சயமா... இந்த வினாடியில நீ பானுவைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதம்னு சொல். மத்ததை நான் பாத்துக்கறேன்."

"அப்பா, கல்யாணங்கறது என்ன விளையாட்டா..."

"இல்லேம்மா, அது ரொம்ப பவித்ரமான விஷயம்..."



"அப்படித் தெரிஞ்சும் இப்படி என் கல்யாணத்தைப் பத்தி திரும்பத் திரும்பப் பேசறீங்களே?"

"என்னம்மா பண்ண? உனக்கு இன்னும் பவித்ரமான கல்யாணம் நடக்கலையே..."

"அப்படின்னா சந்தோஷ் கட்டின தாலிக்கு என்ன அர்த்தம்?"

"உன்னை ஏமாத்தி துரோகம் பண்ணி உன்னை வசப் படுத்திக்கிட்டதுக்கான சாட்சி அது. அவ்வளவுதான்."

"இருக்கலாம். முதல் தடவையே ஒரு பவித்ரமான விஷயத்துக்கு நான் தகுதியில்லாமப் போனதாலத்தான் இப்படி நடந்துருக்கு. இன்னொரு முயற்சி எதுக்குப்பா?"

"உனக்கு இப்பத்தான் பாதுகாப்பு அவசியம். இப்பத் தான் உனக்கு உயிரையும் கொடுக்கற ஒரு ஆண் துணை அவசியம். அதுக்காகத்தான் இந்த முயற்சி."

"நீங்க இருக்கீங்களே பத்தாதா?"

"நிச்சயம் பத்தாது. சந்தோஷை திகைக்க வைக் கணும். அவன் திமிருக்கு, சாடிச புத்திக்கு சாவு மணி அடிக்கணும்னா உனக்கு புருஷன்கற ஒரு துணை அவசியம். இந்த தேசத்துல ஒரு தாலி ஒரு புருஷன்கற மரபு, நிர்கதியாயிட்டவங்களுக்குப் பெருந்தாதும்மா. அந்தக் காலமாயிருந்தா உடன்கட்டை ஏறலாம். கல்லா னாலும் கணவன், புல்லானாலும் புருஷன்னு தலைல தூக்கி வைக்கலாம். அதையே தப்புன்னு விவாதிக்கிறோம் இப்ப. வாழத்தான் வாழ்க்கைன்னா துரோகங்களை ஜெயிச்சு ஒரு புது வாழ்க்கை வாழறது தப்பில்லை இந்து

பழம்பெட்டித்தனமா சிந்திக்காதே. உன்னை நீயே ஏமாத்திக்காதே..." —கோவிந்தராஜனின் பேச்சில் உண்மைகளின் மின்னல் கிளைகள். பதில் பேச முடியாத அர்த்தபுஷ்டியுள்ள மௌனம் இந்துவிடம்.

''சார், எதுவும் இயல்பா நடக்கணும். நடி கொண்டு பழக்க வைக்கக் கூடாது'' —என்கிறான் பானு.

மணி ஆறு என்று மணிச் சப்தமிடுகிறது சுவர் கெடிகாரம்.

அடுத்து என்ன செய்ய? —கோவிந்தராஜனுக்குப் புரிய வில்லை. அப்பொழுது பார்த்து போலீஸ் கூட்டத்தின் உட்பிரவேசம்.

''சார், அந்த சந்தோஷ் இங்க வந்தானாமே?'' —பதட்டமான கேள்வி அவர்களிடம்.

''ஆமாம் சார் வந்தான். கத்தியைக் காட்டி மிரட்டி னான். பானுவால தப்பிச்சா என் பொண்ணு. எங்களை எல்லாம் பிடிச்சு தள்ளிட்டு ஓடிட்டான்...''

''உங்க மாப்ளை தப்புமேல தப்பு பண்றாரு. காலம் முழுக்க ஜெயில்ல இருக்க ஆசைப்படறார் போல இருக்கு... அவருக்கென்ன பைத்யமா. ஏன் சார் இப்படி நடந்துக் கறார்? கொலைகாரன்கூட சந்தோஷமா இருக்க ஆசைப்படறக் காலத்துல இந்த ஆள் போக்கே புரியலையே... சரியான மென்டல்...''

—சப்-இன்ஸ்பெக்டரின் ஆவேசம் எல்லோரையுமே பிடித்தாட்டுகிறது.

சந்தோஷ் மன நோயாளியா என்ன?

அவினாஷ் மருத்துவமனை...

கால் நிறைய சேற்றுத் திப்பிகளோட தப்பி ஓடிவந்து மூச்சுக்காற்று முட்டும் களைப்போடு, டாக்டர் அவினாஷ் எதிரே தலை நிமிர்த்துகிறான் சந்தோஷ்... உதட்டோர மாய் ரத்த ஒழுகல்.

டாக்டர் அவினாஷிடம் பதைப்பு...



''என்ன சந்தோஷ்... என்ன இது அலங்கோலம்? உங்க உடம்புக்கு நீங்க ஓடவே கூடாதுன்னு சொல்லி யிருக்கேனா இல்லையா?''

டாக்டரின் கேள்விமுன் விரக்தியான சிரிப்பு சந்தோஷிடம்...

''இப்ப நான் ஓடித்தான் தீரணும். இப்ப நான் இப்படி ஓடலைன்னா ரொம்பப்பேர் வாழ்க்கை ஒழுங்காவே ஓடாது டாக்டர்.''

அவன் பதிலால் டாக்டரிடம் விசிரிப்பு...

''முதல்ல வந்து பெட்டுல படுங்க'' —என்று படுக்க வைத்து சுவாசத்தை சீர்படுத்தி, இடது புஜத்தில் இஞ்ஜெக்ட் செய்து அவன் படுக்கை அருகே நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு அவனையே ஊன்றி கவனிக் கிறது அவினாஷின் முகம்...

—அந்த முகத்தில் கவலை ரேகைகளின் கிளைகள்... —கண்களின் ஊடுருவும் பார்வை...

''சந்தோஷ், நீங்க ஒரு பெரிய புதிர். மரணம் துரத்தும் மனுஷனா இருந்தும் அதுக்கு கவலைப்படாம, பெட்ல இருக்கவேண்டிய நீங்க எப்பப் பார் ஓடறதும் நினைச்சா திரும்ப வர்றதும் கொஞ்சம்கூட சரியில்லை. இப்படி எல்லாம் நீங்க நடந்துகிட்டா மாசக் கணக்குல இருக்கற உங்க வாழ்க்கை நாள் கணக்குல சுருங்கிடும்.'' மிகுந்த கவலையோடு விவரிக்கிறார் டாக்டர் அவினாஷ்.

''சுருங்கட்டும் டாக்டர். அதான் எனக்கு வேணும்.''

''இப்படி எல்லாம் சாகப்போற பேஷண்டுங்க விரக்தி யில பேசறது எனக்கு ஒண்ணும் புதுசு கிடையாது. ஆனா இந்தமாதிரி கட்டத்துல மனதுல தைரியத்தோட பல நல்ல காரியங்கள்ள ஈடுபடணும்.''

''நானும் ஈடுபட்டுக்கிட்டுத்தான் இருக்கேன் டாக்டர். அதெல்லாம் சரியானபடி நடந்துகிட்டுத்தான் இருக்கு...''

"எல்லாம் சரி... உங்க மனைவி யார்? நீங்க குடி இருக்கீங்கங்கற கேள்விக்கெல்லாம் பதிலே சொல்ல மாட்டேங்கிறீங்களே ஏன்? நாளைக்கு ஒரு நல்லது கெட்டதுன்னா நான் யார்கிட்ட தகவல் சொல்ல?"

"யார்கிட்டேயும் நீங்க சொல்லக்கூடாது டாக்டர்."

"அப்ப என்ன நீங்க அநாதையா?"

"அப்படித்தான்!"

"சந்தோஷ் விரக்தியில் ஏதாவது உளறாதீங்க. உங்க குடும்பத்தார்க்கு உங்களோட முடிவு அதிர்ச்சியைத் தரும்கறதனால் அப்படிச் சொல்றீங்களா?"

"அதெல்லாம் இல்லை டாக்டர். நான் செத்துட்டது தெரிஞ்சா எல்லோரும் சந்தோஷம்தான் படுவாங்க. அவ்வளவு பெரிய பாவி நான்."

"உங்க பேச்சைக்கேட்டா அப்படித் தெரியலையே!"

'இப்பத்தான் டாக்டர் இப்படிப் பேசறேன். முன்னெல்லாம் என் பேச்சுக்கும் திமிருக்கும் பெரிய வித்யாசம் கிடையாது. நான்தான் திமிர். திமிர்தான் நான்.

இப்பத்தான் என் ரத்துத்துல நீங்க கான்சரைக் கண்டு பிடிச்சிருக்கீங்க. இதுக்கு முந்தி என் ரத்தத்துல காமம் தான் டாக்டர் இருந்தது. அதுசேரழிச்சப் பெண்களோட வாழ்க்கைக்குக் கணக்கே கிடையாது. எனக்கு தினம் ஒரு பெண் வேணும். அவ விலை மாதாவும் இருக்கக் கூடாது. அவ்வளவு பெரிய அயோக்யன் டாக்டர் நான்..."

"நிஜமாவா?"

"பொய் பேசற நேரமா டாக்டர் இது? வாழ்க்கை வாழ்வதற்கே வாழ்க்கை வாழ்வதற்கேன்னு வார்த்தைக்கு வார்த்தை சொல்லி தப்பு பண்ணுவேன். உன்வரையில வாழ்க்கை வாழ இல்லடான்னு ஆண்டவன் என்னை இப்படிப் பண்ணிட்டான்.



எல்லாம் என் கையிலன்னு நினைச்சேன். 'உயிர் மட்டும் என் கைலதான்'னு ஆண்டவன் சொல்லி, என்னை அடக்கிட்டான். மரணத்தை நினைக்கற மனுஷன்தான் டாக்டர் வாழ்க்கைல பாவத்துக்குப் பயப்பட்றவன்.

ஆடி அடங்கும் வாழ்க்கையடா...

ஆறடி நிலமே சொந்தமடா! —வாட் எ நைஸ் சாங் டாக்டர்..."

பேசிக்கொண்டே வந்த சந்தோஷ் அப்படியே ஒரு கட்டத்தில் இறுகி கூரையைப் பார்த்தபடி நிலைகுத்தி நிற்க ஆரம்பித்தான்.

கண்களில் மெல்ல ஈரச்சேர்க்கை.

அந்தப் புலி முகத்தில் இப்பொழுது அப்படி ஒரு பரிதாபக் களை.

மனக் கண்ணில் கல்லூரிக் காட்சிகள்!

—இந்து நடுவில் வெள்ளைப் புடவையோட ஓடி வருவதுபோல் ஒரு காட்சி.

"நோ இந்து... நோ... நீ கட்டாயம் நல்லபடி வாழணும். நான் உன்னை ஏமாத்தி கல்யாணம் பண்ணிக் கிட்டவன். என் மரணம் உன்னை விதவையாக்கிடக் கூடாது நீ நல்லபடி வாழணும் இந்து...

பாவம் பானு...

அந்த நல்ல கவிஞனை அநியாயமா உன்னைவிட்டுப் பிரிச்சுட்டேன். இனியாவது நீங்க சேர்ந்து வாழுங்க. —அவன் உதட்டில் பினாத்தல். அவினாஷ் கவலையோட அதைக் கேட்டுக்கொண்டு அவன்முன்னே ஜடம்போல் அமர்ந்திருக்கிறார்.

'யார் இந்த இந்து? மனைவியா...' கேள்வியில் நெளிகிறார். வாய்விட்டே கேட்டும் விடுகிறார்.

''இந்துங்கறது உங்க மனைவியா?''

''ஆமாம் டாக்டர். என் இந்து ஒரு நல்ல பெண். ஊர்ல இருக்கற பெண்களை எல்லாம் நான் அனுபவிச்சிக்கிட்டு திரிஞ்சப்பகூட என்னை திருத்தத்தான் முயற்சி செய்தா. என்னை வெறுக்கலை...''

''அது நம்ம நாட்டுப் பெண்களோட பண்பாடு சந்தோஷ்.''

''அதே பண்பாடுதான் டாக்டர் எனக்கு இப்ப இடைஞ்சல்.''

''புரியலையே...''

''என் இந்து என் மரணத்துக்குப் பிறகு அவளை உயிருக்கு உயிரா நேசிக்கற பாலுவோட சேர்ந்து நல் வாழ்க்கை வாழணும் டாக்டர்.''

''உங்க மனைவி இன்னொருத்தர் காதலியா?''

''இல்ல டாக்டர். முதல்ல இந்து பாலுவோட காதலி. அப்புறம்தான் சந்தோஷ் மனைவி.''

''அதுக்கும் பண்பாட்டுக்கும் என்ன தொடர்பு?''

''நான் கான்சர்ல செத்துட்டா அவளும் செத்தாலும் செத்துருவா டாக்டர்.''

''நோ நோ... இது அதிகப்படியான கற்பனை.''

''குறைந்தபட்சம் என் மரணத்துக்குப் பிறகு விதவையாவது ஆவாளா இல்லையா?''

''ஆமா, அதுதானே நம்ம சாஸ்திரம்.''

''நோ... அது கூடாது. அவ வாழணும். அவளைக் காதலித்த பாலுவோட சேர்ந்து வாழணும்.''

''இதை உங்க விருப்பமாச் சொல்லுங்க. அதை ஈடேற்றமாட்டாங்களா?''



''எந்தப் பெண் டாக்டர் தன் கணவனோட இந்த மாதிரி விருப்பத்துக்கு மனது ஒப்பி சம்மதிப்பா?''

''அப்ப பேசாம விட்டுடுங்க...''

''முடியாது டாக்டர். நான் இந்துவை ரொம்பச் சோதிச்சுட்டேன். அவ கட்டாயம் நல்லபடி வாழ்ந்தாகணும்.''

''இது நடக்கக்கூடிய காரியமாத் தெரியலை சந்தோஷ்''

''நடக்கும் டாக்டர். கட்டாயம் நடக்கும். நான் அப்படி நடந்துக்கிட்டு வரேன். உலகத்திலேயே நான்தான் டாக்டர் இப்ப என் மனைவிக்கு முதல் எதிரி...''

''என்ன சொல்றீங்க சந்தோஷ்?''

''நான் அவ எதிரியானாதான் அவ நல்லபடி வாழ முடியும். ஒரு பரம சண்டாளனா மாறினாதான் என்னை நினைக்கக்கூட அவளுக்குப் பிடிக்காது. நான் அவ மனசை விட்டு விலகினாதான் அவ அந்த மனசுல வேற ஒருத்தனுக்கு இடம் கொடுக்க முடியும். அதுக்கு என்ன பண்ணணுமோ எல்லாம் பண்ணிகிட்டு இருக்கேன் டாக்டர்.''

''நிச்சயமா இது ரொம்ப வித்யாசமான தியாகம் தான்.''

''என் வரையில வித்யாசமான பரிகாரம்.''

''தியாகமோ பரிகாரமோ உங்க எண்ணப்படி எல்லாம் நல்லபடி நடக்கட்டும்.''

—அவினாஷ் பேசியபடி சந்தோஷின் கைகளைப் பற்றினார்.

''டாக்டர் ஒரு உண்மையை நான் இப்ப சொல்லப் போறேன். என்னை தப்பா நினைக்க மாட்டீங்களே...''—சந்தோஷிடம் கேவலாகக் கேள்வி.

''என்ன சந்தோஷ்?''

''நான் இப்ப போலீஸ் தேடற ஒரு கைதி. ஆறுமாச ஜெயில் தண்டனை கைதி. நான் ஜெயிலுக்குப் போயிட்டா சில காரியங்களை என்னால பண்ண முடியாது. ஜெயில்ல கான்சர்ல செத்து வைச்சாலும் அது அனுதாபத்தைக் கொடுத்துடும்.

அசுரவதம் மாதிரி என் மரணம் நடக்கணும்.

ஒழிஞ்சது பீடைன்னு அவ நினைக்கணும். ஆகையால் நான் தப்பி வந்திருக்கேன். தயவுசெய்து நான் சாகற வரை எனக்கு நீங்க அடைக்கலம் தரணும்...''

நிறையவே தயக்கம் அவருக்குள் உடனடியாக உருத்திரண்டாலும் அவினாஷின் கையைப் பற்றி ஆதரவு உண்டு என்பதுபோல் வருடிக் கொடுத்தார்.

விடிந்து விட்டது.

விடியுமுன்பே அவள் முழித்து, குளித்து விளக்கேற்றி ஒரு புதிய பிறவிபோல சமையல்கட்டில் ஃபில்டரில் காபி டிகாக்‌ஷன் இறக்கிக் கொண்டிருந்தாள் இந்து.

ஒரு முரட்டுக் கணவனாய், கொலை பாதகனாய் சந்தோஷ் இருப்பதாலும் கைதியாக தப்பி வந்து கொலை முயற்சியில் வேறு ஈடுபட்டு தலைமறைவாக இருக்கின்ற காரணத்தாலும், இந்துவின் விவாகரத்தை ஸ்பெஷல் கோர்ட் உடனடியாக ஊர்ஜிதப்படுத்தும் என்று வக்கீல் சொன்னதற்கு ஏற்ப இன்று கோர்ட்டுக்குப் போக வேண்டிய நாள்!

''நிச்சயம் இந்தக் கேஸ் ஸ்பெஷல் கோர்ட்ல சக்சஸ் பண்ணும். நம் நாட்டு நீதிமன்றங்களுக்கு நிராதரவான பெண்கள்மேல் தனி கரிசனமே உண்டு. அதுலயும் இந்து நிலை ரொம்ப ரொம்பப் பரிதாபம். ஆகையால் அவளுக்கு விவாகரத்து நிச்சயம்.



அந்தப் பெண்ணுக்கு மறுமணம்கற பாதுகாப்பு ரொம்ப ரொம்ப அவசியம்கற ஒரு ஆர்க்யூமென்ட் போதும். இந்தக் கேஸ் ஜெயிக்க...''

காப்பி டிகாக்‌ஷனில் பாலை விட்டு வளாவும்போது வக்கீலின் கருத்தில் அவள் மனம் இழைகிறது.

ஆசை ஆசையாகக் கட்டிக்கொண்ட தாலி, காக்கைப் பொன் போல் ஆகிவிட்டது. அடுத்த தாலியைத் தந்து வாழ்க்கை தரத் துடிப்பவன், அதோ அறையில் படுக்கையில்...

கோவிந்தராஜன்கூட பெண்ணின் வாழ்க்கை விடிந்து விட்டமாதிரி நெடுநாட்களுக்குப் பிறகு ஆனந்தமாய் உறங்கிக் கொண்டிருக்கிறார்.

—நிம்மதியாய் இப்படித் தூங்கித்தான் எவ்வளவு நாளாகிவிட்டது.

—இருவரையும் பார்த்தபடி காபியை உறிஞ்சுகிறாள் இந்து. விவாகரத்துகூட அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை... ஆனால் இன்னொரு தாலி... அதுதான் மனதிற்கு இடையூறாகக் குடைகிறது. ஒரு பெண்ணுக்கு ஒரு தாலிதான் சரி என்று ஆழ்மனதில் அசைக்க முடியாதபடி ஒரு எண்ணம். அதுதான் பவித்ரம் என்று அது உறக்கச் சொல்வதுபோல் படுகிறது. அதேசமயம் 'நீ வாழ்ந்துவிடுவாயா பார்க்கிறேன்.' என்பதுபோல் அதட்டும் சொரூபத்துடன் சந்தோஷின் முகம் விசுவரூபம் எடுக்கிறது.

வாழ்க்கையில் ஆரம்பம் முதல் முடிவுவரை ஏமாற்றியவன். பெண் ஜென்மமே ஏமாறப் 'பிறந்த ஜென்மம் என்று கருதி முத்திரை குத்தினமாதிரி ஏமாற்றியவன். எவ்வளவு மன்னித்தும் திருந்தாமல் பெண் இனத்தையே சீரழித்துக் கொண்டிருப்பவன். இவனை எல்லாமா மனிதனாகக் கருதி இன்னமும் பொருட்படுத்துவது. ச்சீய்...

இந்து சந்தோஷை நினைத்துச் சங்கடப்பட்ட வேளை பாலு எழுந்துவிட்டிருந்தான்.

காமம் கலக்காத அன்புக்கு அன்று வக்காலத்து வாங்கியவன் இன்றும் அப்பழுக்கில்லாமல் அந்தக் கொள்கையில் வழுவாமல் இருக்கிறானே?

ஆச்சரியத்தில் காப்பி தம்ளரை கையில் பிடித்தபடி அயர்ந்துதான் போகிறாள்.

பாலு அவளை சமீபித்து "இந்து... இந்து" உசுப்பினான். பிறகுதான் பிரக்ஞை தட்டியது. பிரக்ஞை மீண்டவள் அவனைச் சற்று வெட்கத்துடன் பார்த்தாள்.

"காப்பி சாப்பிடறீங்களா?"—கேட்டாள்.

'உன் கையால சாப்பிட கொடுத்துவெச்சுருக்கணுமே.'

"இதெல்லாம் வேண்டாம். ஆமா எப்படி பாலு இவ்வளவுக்கு பிறகும் உங்களால என்னை நேசிக்க முடியுது?" பட்டென்று அந்த அதிகாலை வேளையில் அந்தக் கேள்வியைக் கேட்டும் விட்டாள்.

"நீ தெரிஞ்சு ஒரு தப்பும் பண்ணலியே இந்து..."

"இருந்தாலும் நான் இப்ப கன்னி இல்லை. வேற ஒருத்தன் தொட்டவ..."

"நான் அந்த உடம்பை தொடவே போறது இல்ல. நான் உன் மனசைதான் காதலிக்கிறேன். ஊருக்கும் உன் உள்ளத்துக்கும்தான் நான் புருஷன். உன் உடம்புக்கு இல்ல இந்து. நீ உறுத்தல் இல்லாம தாலி கட்டிக்கலாம்."

—பாலுவின் அந்த பதிலால் அப்படியே அவன் காலில் விழுகிறது அவள் தேகம். கண்களில் பெருகும் கண்ணீர் அவன் காலை நனைக்கிறது.

"பாலு, என் மன உறுத்தல் தெரிஞ்சு என்ன அழகா பிரச்னையை எடுத்துவிட்டுட்டீங்க! நான்கூட கொஞ்சம் புண்யம் பண்ணியிருக்கேன் பாலு..."

—உறங்குவதுபோல் நடிக்கும் கோவிந்தராஜன் இந்தப் பேச்சை எல்லாம் படுத்தபடியே கேட்டு நெகிழ்ந்து போகிறார்.



ஸ்பெஷல் கோர்ட் விவாகரத்தை ஊர்ஜிதப்படுத்திய அதே நாளில் ரிஜிஸ்தர் ஆபீசில் இந்துவும் பாலுவும் மாலை மாற்றிக் கொள்ள, திருமண பதிவாளர் முகத்தில் செயற்கரிய செயல் ஒன்றை செய்துவைப்பது போல் ஒரு பரவசம்.

கோவிந்தராஜனும் சுற்றுச் சூழலும் கண்களில் நீர் கசிய வாழ்த்துகின்றார்கள் சுற்றிலும் அளவான போலீஸ் வட்டம் வேறு!

தப்பிச் சென்ற சந்தோஷ் இன்னமும் பிடிபடவில்லை.

ஒருக்கால் இந்த சந்தர்ப்பத்தில் இந்த கல்யாணத்தை கலைக்க வரக்கூடும் என்கிற யூகம் போலீஸ் நெற்றிகளில்...

சுற்றிச் சுற்றிப் பார்க்கிறார்கள்.

கோவிந்தராஜனிடம் பதட்டம்

"சார், அவன் இங்க வந்து அவனை என் பெண் பார்த்தா திரும்ப ரொம்ப அப்செட்டாயிடுவா. அவ வாழ்க்கை திரும்ப மலர ஆரம்பிச்சிருக்கற நேரம் இந்த நேரம். அந்த சனியன் எப்பவும் இவ வாழ்க்கைல குறுக்கிடவே கூடாது..."

ஒரு பெரிய போலீஸ் அதிகாரியிடம் காதோடு காதாக பதறுகிறது அவர் குரல்.

"டோன்ட் ஒர்ரி... குறைஞ்சபட்சம் அஞ்சாறு வருஷத்துக்கு அவன் வெளிய வரவே முடியாது. எப்படியும் பிடிச்சுருவோம் உங்க பெண்ணையும் மாப்பிள்ளையையும் வடக்கே எங்கேயாவது ஒரு ஊர்ல செட்டில் பண்ணிருங்க. இந்த சிச்சுவேஷன்ல இருந்தாதான் அவங்களுக்கு பழைய ஞாபகமெல்லாம் வரும்..."

—அவர் ஆறுதல் சொல்கிறார். சுற்றிலும் கை குலுக்கல்கள்... பரஸ்பரங்கள்... வாழ்த்துப் பரிமாறல்கள். மாபெரும் கேக்குத் துண்டங்களின் விநியோகங்கள், என்று சூழ்நிலை தடபுடலாக கலகலத்துக்கொண்டிருக்கிறது.

வெளியே ஊட்டியை குறிவைத்த அலங்கார கார்.

தேவதை அலங்காரத்துடன் அதில் இந்து ஏறிக் கொள்ள, பாலு பின்தொடர்கிறான்.

முன் சீட்டில் கோவிந்தராஜனும் தொற்றிக்கொள்கிறார். டிரைவர் லாவகமாக இயக்க, நட்பும் உறவும் கையசைத்து விடை கொடுக்க, அந்த மலர்ப்பந்தல் கார் வேகிக்கத் தொடங்குகிறது.

"டிரைவர் என்னை மெயின் பஜார்ல இறக்கிவிட்டுடு. ஜாக்கிரதையா பார்த்துப் போகணும்..."— காருக்குள் கோவிந்தராஜனின் கட்டளைக்கு இணக்கமாக தலையசைக்கிறான் டிரைவர்

"ஹேவ் எ நைஸ் ஹனிமூன் பாலு..."

—என்று கண்களில் ஆனந்தக் கண்ணீர் கசிய கோவிந்தராஜன் பாலு பக்கம் திரும்புகிறார்.

"தேங்க்யூ..." இது பாலு. இந்துவிடம் எந்த உணர்வும் இல்லை. அவளிடம் இயல்பான சகஜநிலை திரும்ப அனேகமாக சில காலம் ஆகலாம்.

பாலு அதுவரை காத்திருக்க தயார்தான்.

உறுத்தலில்லாத உறவுதான் நல்லுறவு. இது தெரிந்தவன் பாலு.

திடீரென்று கார் பிரேக்கடித்து நிற்க, உள்ளிருந்து இந்து எட்டி வெளியே பார்க்க சாலையில் மிக மெள்ள ஒரு சவ ஊர்வலத்தின் குறுக்கீடு.

டாக்டர் நான் செத்தா! என்னை நல்லபடி அடக்கம் பண்ணிருங்க. யாருக்கும் தெரிய வேண்டாம். நான் காணாம போயிட்ட ஒருத்தன். காலத்தோட கலந்துட்ட ஒருத்தன். இந்தாங்க ஒரு லட்சம்! உங்க டிஸ்பென்சரிக்கு என்னோட ஃபீஸ், நன்கொடை எல்லாம். போலீஸ் கைதின்னு என்கொயரின்னுல்லாம் போயிடாதீங்க. நான்



இப்படி சாகப்போறது உலகத்துக்குத் தெரியவேகூடாது."

—விடாப்பிடியாக தன் பின்புலத்தைக் கூற மறுத்து பணத்தை அவினாஷின் கைகளில் தந்துவிட்டு உயிரையும் விட்டுவிட்டிருந்தான் சந்தோஷ்!

அந்த வாக்குறுதியை செயல்படுத்தும் விதமாக சவ ஊர்வலத்தின் முன்னாலே அவர் சென்று கொண்டிருக்கிறார். பாடையில் துணியில் மூடப்பட்ட அவன் பிரேதம்.

"இப்படி வெளிய கிளம்பும்போது பிணம் குறுக்கே போனா ரொம்ப நல்லது..."

—காருக்குள் கோவிந்தராஜன் ஸ்லாகிக்கிறார். வெளியே டாக்டர் அவினாஷ்கூட இந்து பாலுவின் அலங்காரக் காரை பார்க்கிறார்.

காரின் முன் கண்ணாடியில் தென்பட்ட சந்தனக் குழம்பால் எழுதப்பட்ட 'இந்து வெட்ஸ் பாலு' என்கிற வாசகம் அவரை ஒரு வினாடி சுண்டி இழுக்கிறது.

சந்தோஷ் சாகுமுன் புலம்பிய பெயர்கள்

ஒருவேளை இந்த இந்துதானா சந்தோஷின்முன்னாள் மனைவி?

கேள்வி மண்டையைப் பிய்க்க திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடக்கிறார்.

அந்தக் காரும் குறுக்கீட்டைக் கடந்து வேகமாக சமுத்திரத்தில் கலக்கத் தொடங்குகிறது.

ஒரு போலீஸ் கைதியின் மரணத்துக்கும் அடக்கத்திற்கும் தன்னிச்சையாகத் துணை போகின்றோமே என்கிற உறுத்தலையும் மீறி மனதில் இப்பொழுது அவருக்குள் துளி பரவசம்.

சந்தோஷின் ஆன்மா இனி சாந்தியடையும் என்பது போல் ஒரு உள்ளுணர்வு.

இதற்குள் இடுகாடும் வந்துவிட்டிருந்தது.

பிணத்தைப் புதைப்பதற்காகக் குழியில் இறங்கி சந்தோஷின் சடலத்தைக் கிடத்தும்போதுதான் அவன் உள்ளங்கைகளை எதார்த்தமாக கவனிக்கிறார் அவினாஷ்.

'இந்து பாலு... உங்கள் மணவாழ்விற்கு என் இதய பூர்வ நல்வாழ்த்துக்கள்.'

ஸ்கெட்ச் பேனாவில் தென்பட்ட அந்த வாழ்த்து வாசகங்களைப் பார்த்தவுடன் அதுவரை கண்ணீரைச் சிந்தியிராத அவரது விழிகள் அருவிபோலக் கொட்ட ஆரம்பித்தது. மானுட அன்பின் புதிய பரிமாணம் ஒன்றை தரிசனம் செய்த நெகிழ்ச்சியில் பேச்சு மூச்சே அற்றுப் போகத் தொடங்கியது.

❋ ❋